# தமிழகத்தின் தலைநகரங்கள்

மா. ரா. இளங்கோவன் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

சாந்தி நூலகம்
2/122, பிராட்வே, சென்னை-1.

சாந்தி வெளியீடு : 12
முதற் பதிப்பு : அக்டோபர் 1958
உரிமை ஆசிரியருக்கே.

V2:11
N158:1

மலிவுப்பதிப்பு ரூ. 1-50
பரிசுப்பதிப்பு ரூ. 2-00

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 108745
MADRAS

SANTHI NOOLAGAM
PUBLISHERS & BOOKSELLERS
2/122, Broadway :: MADRAS-1.

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.

# முகவுரை

**தமிழகத்தின் தலைநகரங்கள்** என்னும் பெயர் கொண்ட இந்நூல், சங்ககால முத்தமிழ் வேந்தரின் தலைநகரங்களாக விளக்கமுற்றிருந்த **வஞ்சி மாநகர், காவிரிப் பூம்பட்டினம், மதுரை மாநகர்** என்னும் மூன்றையும் பற்றிய விவரங்களைக் கூறுவதாகும்: இம்மூன்று தலைநகரங்களிலும் சங்க காலத்தில் ஆட்சி புரிந்த புகழ் வாய்ந்த மன்னர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் எடுத்து இயம்புவதாகும்.

பண்டைத் தலைநகரங்களின் அமைப்பு, தெருக்கள், கோவில்கள், கடைத்தெருக்கள், பெரிய கட்டடங்கள், நகரமக்களின் செயல்கள் முதலியவற்றையும் முத்தமிழ் வேந்தரின் வீரம், கொடை, ஆட்சிமுறை முதலியவற்றையும் இந்நூலில் தெளிவாக அறியலாம்.

**மா. ரா. இளங்கோவன்.**

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வஞ்சி மாநகரம் | ... | 1 |
| 2. | சேர மன்னர்கள் | ... | 11 |
| 3. | காவிரிப்பூம்பட்டினம் | ... | 29 |
| 4. | சோழ மன்னர்கள் | ... | 50 |
| 5. | மதுரை மாநகரம் | ... | 60 |
| 6. | பாண்டிய மன்னர்கள் | ... | 82 |


# தமிழகத்தின் தலைநகரங்கள்

## 1. வஞ்சி மாநகரம்

### சேர நாடு

தமிழகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வடக்கே வேங்கடத்தையும், தெற்கே குமரி முனையையும், கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே அரபிக்கடலையும் எல்லைகளாகப் பெற்றிருந்தது; சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்னும் மூன்று பகுதிகளாகப் பிரிந்திருந்தது. சேர நாடு என்பது மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்டு, வடக்கே மங்களூரையும் தெற்கே கன்னியா குமரியையும் எல்லைகளாக உடையது. இன்றுள்ள திருவாங்கூர், கொச்சி நாடுகளும், மலையாள மாவட்டமும் சேர்ந்த நிலப்பகுதியே பண்டைச் சேர நாடாக இருந்தது. சேர நாடு மலைவளம் மிக்க நாடு. சேர நாட்டு மிளகும், அகிலும், சந்தனமும், தேக்கும், யானைத் தந்தமும் சீனம், அரேபியா, எகிப்து, கிரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. பட்டு, வாசனைப் பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், இயந்திரக் கருவிகள் முதலியன அந்நாடுகளிலிருந்து சேர நாட்டிற்கு இறக்குமதியாயின.

மேலை நாடுகளைச் சேர்ந்த பிளினி, தாலமி, பெரிப்ளஸ் என்னும் நூலின் ஆசிரியர் ஆகியோர் கடல் வழித் தமிழகத்துக்கு வந்தனர்; கடல் வாணிகம் பற்றிப் பல செய்திகளைக் குறித்துள்ளனர். கி. பி. முதலிரண்டு நூற்றாண்டு

களில் கடல் வாணிகம் உயர்ந்த நிலையில் இருந்தது; சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப்பத்து என்னும் நூல்கள் தோன்றின. அந்நூல்கள் சேரர்களைப்பற்றி மிகுதியாகக் கூறுகின்றன. சேர நாட்டிலிருந்த சில இடங்களை மேலை நாடுகளைச் சேர்ந்த பிளினி முதலியோர் நாரா, திண்டிஸ், முசிரிஸ், வகாரே என்று குறித்துள்ளனர். அவர்களால் குறிக்கப்பட்டுள்ள அவ்விடங்கள் சேர நாட்டின் துறைமுகப் பட்டினங்களாகும். **நாரா** என்பது சங்க நூல்களில் **நறவு** என்று குறிக்கப்பட்டுள்ளது. **திண்டிஸ்** என்பது **தொண்டி** எனப்படும். திண்டிஸ் என்றும் தொண்டி என்றும் வழங்கப்பட்ட பெயர் இன்று கடலுண்டி என்றும் கொயிலாண்டி என்றும் அழைக்கப்படுகிறதென அறிஞர் கருதுகின்றனர். **முசிரிஸ்** என்பது முயிறிக்கோடு அல்லது **முயிறி** என்று தமிழில் வழங்கப்பட்டது. **வகாரே** என்பது கடற்கரைப் பட்டினமாகிய **வைக்கரை** என்னும் ஊராகும். இது கோட்டயத்திற்கு நேர் எதிராக உள்ளது.

## சேர நாட்டின் தொன்மை

கிறிஸ்து நாதருக்கு முன் தோன்றிய நூல்களாகத் தொல்காப்பியத்தையும் சங்கத் தொகை நூல்களுள் காணப்படும் சில பாட்டுக்களையும் அறிஞர் கூறுவர். தொல்காப்பியப் பொருளிலக்கணப் பகுதி சேர மன்னருடைய அடையாளப் பூவையும், தமிழகத்தோடு அவர்க்குள்ள உரிமையையும் குறிப்பிடுகின்றது. சேரர்களைப்பற்றிய குறிப்புக்கள் வட நூல்களில் காணப்படுகின்றன. ரிக்வேதமும், தைத்திரீயமும், வியாச பாரதமும் சேரர்களைச் சேரர்கள் என்றே குறிப்பிடுகின்றன. இராமாயணத்தில் சீதையைத் தேடிச் சென்ற வானரர்க்குத் தென்னாட்டின் இயல்புகளைச் சுக்கிரீவன் கூறும்பொழுது சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றான். மகாபாரதத்தில் தருமன் இராயசூயப் பெருவேள்வி செய்தபோது சேர, சோழ, பாண்டியரும் வந்திருந்ததாக வியாசர் குறித்துள்ளார்.



சேர நாட்டின் தொன்மையை உரைக்கவல்ல வரலாற்று நூல்கள் இரண்டு உள்ளன. அவை கேரளமான்மியம், கேரளோற்பத்தி என்பன. கேரளமான்மியம் என்பது வடமொழியில் எழுதப்பட்டது. கேரளோற்பத்தி என்பது மலையாள மொழியில் எழுதப்பட்டது.

## வஞ்சிமா நகரம்

சோழர்க்கு உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் தலைநகரங்களாய் அமைந்தன. பாண்டியர்க்கு மதுரை தலைநகராய் அமைந்தது. அவ்வாறே சேரர்க்கு வஞ்சி மாநகரம் தலை நகராய் அமைந்தது. வஞ்சி ஆன்பொருநை என்னும் ஆற்றங்கரையில் அமைந்து விளங்கியது. வஞ்சிக்குக் கருவூர் என்னும் பெயருமுண்டு. வஞ்சி கோட்டையைக் கொண்ட அகநகரையும், கோட்டைக்கு வெளியே புறநகரையும் கொண்டிருந்தது. புற நகரில் இயந்திர வாவிகளும், மலர் வனங்களும் இருந்தன; தேவர் கோட்டங்களும், சைவ வைணவக் கோவில்களும், பௌத்த விகாரமும், சமணப் பள்ளிகளும், பொழில்களும், பொய்கைகளும் மிகுந்திருந்தன. அங்கெல்லாம் முனிவர்களும், கல்வி கேள்வி ஒழுக்கங்களிற் சிறந்த சான்றோர்களும் இருந்தனர். புற நகரில் கிழக்குக் கோட்டை வாசல் பக்கத்தில் சமண முனிவர்கள் இருந்த கோவிலொன்று இருந்தது. அது குணவாயிற் கோட்டம் எனப்பட்டது. சேரன் செங்குட்டுவனின் தம்பியும், முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தின் ஆசிரியருமான இளங்கோவடிகள் குணவாயிற் கோட்டத்தில் வாழ்ந்திருந்தார். புற நகரின் மற்றொரு புறத்தே ஆவிக்கோ என்னும் வள்ளலின் மாளிகை இருந்தது. அது வேளாவிக்கோ மாளிகை எனப்பட்டது. சேர மன்னர்கள் அம்மாளிகைக்கு அவ்வப்போது சென்று தங்குவது வழக்கமாகும். புற நகரில் தங்கியிருந்த மதவாதிகள் பலராவர். அவருள், அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிக்கந்தவாதி, சாங்கிய

வாதி, வைசேடிகவாதி, பூதவாதி என்பவர் குறிப்பிடத் தகுந்தவராவர்.

## அகழியும் கோட்டையும்

கோட்டையைச் சூழ்ந்து ஆழமான அகழி இருந்தது. அகழியில் முதலை இனங்களும் பலவகை மீன் இனங்களும் இருந்தன. தாமரையும் குவளையும் கழுநீர்மலரும் ஆம்பலும் நீர்மேல் பரவியிருந்தன. வீடுகளில் சிந்தும் கழிநீரைக் கொண்டுசெல்லும் கழிநீர்ப்பாதைகள் அகழியில் இருந்தன. அவ்வகழியில் நறுமணமிக்க வாசனைப் பொருள்களால் மகளிர் நீராடிய கழிநீர் சேர்ந்தமையால் மீன்கள் மீதும், முதலைகள் மீதும் பொருந்தியிருந்த புலால் நாற்றம் மறைந்தது.

அகழியை அடுத்துக் கோட்டை மதில் வானுற உயர்ந்து விளங்கியது. மதிலின்மேல் போர்க்கருவிகள் பல வைக்கப்பட்டிருந்தன; காவலாளர்கள் காவல் புரிந்தனர். வெண்மையான கோட்டை மதிலின் நடுவில் கோட்டைவாயில் உயர்ந்து காணப்பட்டது. கோட்டை வாயிலில் சேரரது விற்கொடி பறந்தது. கோட்டை மதிலுக்கும் மக்கள் வாழ்ந்த பகுதிகளுக்கும் இடையே பசுமையான காவற்காடு இருந்தது. வீரர்கள் தத்தம் போர்க் கருவிகளுடன் அக்காவற்காட்டில் தங்கியிருந்தனர்.

## பலவகைத் தெருக்கள்

காவற்காட்டை அடுத்திருந்த தெருக்களில் கோட்டை வாயிலைக் காத்துவந்த காவலாளர்கள் வாழ்ந்தனர். அவை அகன்றும் நீண்டும் இருந்தன. அத் தெருக்களை அடுத்து மீன் விற்போர், உப்பு விற்போர், கள் விற்போர், பிட்டு விற்போர், இறைச்சி விற்போர், அப்பம் விற்போர் முதலியோர் வாழ்ந்த தெருக்கள் இருந்தன. பலவகைத் தானியங்களை விற்போர் மிகுந்த தெருக்கள் புற நகரின் ஒருபுறத்தில் இருந்தன. இவையேயல்லாமல் மேலும் பலவகைத் தெருக்கள் வஞ்சி மூதூரை அழகு செய்தன.



## இயற்கைச் செல்வங்கள்

வஞ்சி மாநகரில் உயரத்திலிருந்து கீழே விழுமாறு அமைந்த அருவிகொண்ட மலைகளும், காண்போருக்கு மகிழ்ச்சியூட்டும் நறுமணச் சோலைகளும், நீரினையுடைய பொய்கைகளும், அன்ன சத்திரங்களும், பொன்னால் அமைக்கப்பட்ட அம்பலங்களும், சமய உண்மைகளை விளக்கும் தவச்சாலைகளும் சிறப்புடனிருந்தன. வஞ்சி முற்றத்தில் கலங்களில் வந்த பண்டங்கள் குவிந்து கிடக்கும். பகையரசர் திறைப்பொருளைக் கொணர்ந்து மன்னனைக் காணமுடியாமல் காத்திருப்பர். மலைக்குறவர்கள், யானைத்தந்தம், அகிற்குவியல், வெண்சாமரை, தேன் குடங்கள், சந்தனக்கட்டைகள், சிந்துரக்கட்டி, சந்தனத் திரள், ஏலம், மிளகு, கூவைக்கிழங்கு, கவலைக்கிழங்கு, தேங்காய், கரும்பு, மாங்கனி, பலாக்கனி, வாழைத்தாறு, கமுகந்தாறு, படலைமாலை, மலர்க்கொடிகள், சிங்கக்குட்டி, ஆளிக்குட்டி, புலிக்குட்டி, யானைக்குட்டி, கரடிக்குட்டி, குரங்குக் குட்டி, மான்குட்டி, குறும்பாடு, மயில், புனுகுப் பூனைக் குட்டி, கானக்கோழி, கிளி முதலியனவற்றை மன்னனுக்குப் பரிசிலாக அளித்து வழிபடுவர்.

## அரண்மனை

சேரனது அரண்மனை பொருளாதார வளமுடையதாக இருந்தது. அரண்மனைவாயில் மிக உயர்ந்ததாகக் காணப்பட்டது. அரண்மனைக்குள் பல மாட மாளிகைகள் இருந்தன. அரச மகளிர் வாழும் அந்தப்புர மாளிகைகளும், அரசனுக்குரிய பலவகைக்கட்டடங்களும், அரசனது கொலு மண்டபமும், நாடக அரங்கமும், கோவிலும் பிறவும் அரண்மனையில் சிறப்புற்று விளங்கின.

## வஞ்சி எது ?

பலவகையாலும் சிறப்புற்று விளங்கிய வஞ்சிமா நகரம் எது ? என்பது பற்றிய கருத்துக்கள் பலவாக உள்ளன.

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்துள்ளதும் கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்றுமாகிய கருவூரே வஞ்சி மாநகரம் என்று கூறுகின்றார். மலைநாட்டுக் கொடுங் கோளூர் அல்லது திருவஞ்சைக் களமே வஞ்சி என்று கருதுவோரும், அந்நாட்டு மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்துப் பேரியாற்றங்கரையிலுள்ள திருக்கரூரே வஞ்சி என்று கருதுவோரும் உள்ளனர். பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் வஞ்சி மாநகரம் சேர நாட்டுக் கடற்கரை ஓரத்தில்—பேரியாற்றங்கரையில் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றார். வஞ்சி மாநகருக்குக் கருவூர் என்னும் பெயருமுண்டு என்பதை முன்னர்க் கண்டோமல்லவா? நக்கீரர் பாடியுள்ள அகநானூற்றுச் செய்யுளொன்றால் இக்கருத்து உறுதிப் படுகின்றது. நக்கீரர் பாடிய பிறிதொரு அகநானூற்றுச் செய்யுளில் முசிறித் துறைமுகம் சுள்ளி என்ற பேராற்றங் கரையில் இருந்ததாகக் கூறுகின்றார். பெரியாறு கடலொடு கலக்குமிடத்தை நன்கு ஆராய்ந்த டாக்டர் எஸ். கிருஷ்ண சுவாமி ஐயங்கார் அவர்கள் "சேரன் வஞ்சி" என்னுமொரு ஆங்கில நூல் எழுதியுள்ளார். அதில் அவர் வஞ்சி மூதூர் யாதென ஆராய்கின்றார். இனி, நாம் டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் எஸ். கிருஷ்ணசுவாமி ஐயங்கார் ஆகிய இருவர்தம் வஞ்சி பற்றிய கருத்துக்களைக் காணுவோம்.

## டாக்டர் இராசமாணிக்கனார் கருத்து

(1) "பல வளங்களும் நிறைந்த சேரர் கோநகரமாகிய வஞ்சி மாநகரத்தைச் சுற்றிப் பேரியாறு ஓடிக் கடலொடு கலந்தது. அது சுள்ளி ஆறு என்றும், ஆண்பொருநை என்றும் வேறுபெயர்கள் பெற்றிருந்தது. கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகள் 'நதிகள்' என்று பெண்பாலிலும், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் 'நதங்கள்' என்று ஆண்பாலிலும் வழங்குவது வடமொழி வழக்காகும். அதை யொட்டியே மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தி யாகிக் கிழக்கு நோக்கித் திருநெல்வேலியில் பாயும் ஆற்றுக்குப் 'பொருநை' என்றும், அதே மலைத்தொடர்ச்சியில் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாயும் ஆற்றுக்கு 'ஆண் பொருநை' என்றும் பெயர்கள் வழங்கலாயின என்று நினைப்பது தவறாகாது. சேர நாட்டில் ஓடும் ஆறுகளை நோக்க, வஞ்சியைச் சூழ்ந்து ஓடிய பெரியதாய் இருந்த காரணத்தால் 'பெரியாறு' எனப் பெயர் பெற்றது என்பது பொருந்தும்.

(2) "கோவலன் மதுரையில் கொலையுண்ட பிறகு கண்ணகி வையைக்கரை வழியே மேற்கு நோக்கிச் சென்று மலை நாட்டிலுள்ள திருச்செங்குன்று என்னும் மலைமீது ஏறி, அதன் மறுபுறம் சென்று, ஒரு வேங்கை மரத்தின் கீழ் நின்றாள் என்பது சிலப்பதிகாரக் கூற்று. வையை ஆறு மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அண்மையில் மதுரை மாவட்டத்தில் வருஷநாடு ஆண்டிப்பட்டி மலைத்தொடரில் தோன்றுகிறது என்பதை அனைவரும் அறிவர். எனவே, கண்ணகி மேற்குத் தொடர்ச்சி மலையைத் தாண்டிச் சேர நாட்டிற்குச் சென்று மேலுலகம் சென்றாள் என்பதே பொருள். இது செங்குட்டுவன் மனைவியாகிய இளங்கோ வேண்மாளும் 'நம் அகல் நாடு அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என்று கூறியதிலிருந்தும் அறியலாம்.

(3) "செங்குட்டுவன் வடநாடு சென்றபொழுது வஞ்சியை விட்டுக் கடற்கரை வழியே சென்று நீலகிரியை அடைந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்வுண்மைகளை நோக்க வஞ்சிமாநகர் சேர நாட்டில் மேல் கடற்கரையை அடுத்து இருந்ததாகக் கொள்ளல் பொருத்தமென்பது தோன்றுகிறது.

(4) "சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்ட அன்று மாலை பறையூரில் இருந்து சாக்கையன் ஒருவன்

வந்து அரண்மனை அரங்கத்தில் சிவபெருமான் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் நடனத்தை ஆடிக்காட்டினான் என்பது சிலப்பதிகாரக் கூற்று. இப்பறையூர் இக்காலத்தில் சேரநாட்டில் 'பரூர்' என்று வழங்கப்படுகிறது என்றும், அங்குச் சாக்கைக் கூத்தினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

"இவையனைத்தையும் நோக்க, சேரநாட்டுக் கடற்கரை ஓரத்திலேயே—பேரியாற்றங்கரையில் வஞ்சிமாநகரம் இருந்திருக்க வேண்டும் என்னும் எண்ணம் வலுப்படும். வஞ்சிமாநகருக்குக் கருவூர் என்னும் மற்றொரு பெயர் பண்டைக் காலத்திலேயே இருந்தது என்பது சங்கப் புலவரான நக்கீரர் பாடலால் (அகம். 83) தெரிகிறது. அதே புலவர் முசிறி என்னும் துறைமுகம் சேரர்க்கு உரிய சுள்ளி என்ற பேராற்றங்கரையில் இருந்ததாகக் கூறுகின்றார் (அகம். 149) இன்றுள்ள பெரியாறு கடலோடு கலக்கும் இடத்தைச் சுற்றியுள்ள நிலப்பகுதியை நன்கு ஆராய்ந்தால் உண்மை விளங்கும்."

## டாக்டர் கிருஷ்ணசுவாமி ஐயங்கார் கருத்து

"எர்ணாகுளத்திற்கு வடக்கே தள்ளியும், பொன்னாணியிலிருந்தும் சற்றுத் தூரத்தில் உள்ள சேற்றுவாய் என்னும் துறைமுகம்வரைப் பரவியும் கடலிலிருந்து சிறிது தூரத்தில் வடக்கு தெற்காக நீண்டு கிடக்கும் காயல் ஒன்று இருக்கிறது. அக்காயல் முழுவதிலும் பேரியாற்றின் முகத்துவாரத்திலிருந்து வடக்கில் ஏறக்குறைய 10 மைல் அளவு வரையிலும் சிறு கிராமங்கள் பல இருக்கின்றன. அவற்றில் பலவற்றின் பெயர்கள் முழுமையாகவோ பகுதியாகவோ '**கருவூர்**' என்று காணப்படுகிறது. பல ஊர்கள் கரூர்ப்பட்டினம் என வழங்குகின்றன. அவற்றுள் '**திருக்கணா மதிலகம்**' என்று மலையாளிகள் அழைக்கும் இடம் ஒன்று இருக்கிறது. இது 'திருக்குண மதிலகம்', அதாவது கிழக்குக் கோட்டை மதிலை அடுத்துள்ள மாளிகை எனப் பொருள் பெறும். இதுவே சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் தங்கியிருந்த 'குணவாயில் கோட்டம்' என்பது. வஞ்சி நகரக் கோட்டையின் கிழக்கு மதில் இவ்விடத்தில் இருந்திருக்க வேண்டும். 'அழிக்கோடு' என்பது பெரியாறு கடலில் கலக்கும் சங்கம் அல்லது அழிமுகத்தில் இருக்கும் ஊர் ஆகும். ப்ளினியும் பிறரும் குறிப்பிட்ட முசிறிஸ் இருந்த இடம் பெரும்பாலும் இதுவாக இருக்கலாம். இதிலிருந்து மேற்கில் வடசாயலாக இரண்டு மைல் தூரத்தில் திருவஞ்சிக்குளம் இருக்கின்றது. அங்குத்தான் 'சேரமான் பரம்பா' எனப்படும் ஸ்தூபி இருக்கிறது. அங்கிருந்து அதே திசையில் சிறிது தூரத்தில் இக்காலத்துக் கொடுங்களூர்க் கோவில் அமைந்துள்ளது. அக்கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் சதுக்க பூதத்தின் உருவச்சிலை இருக்கின்றது. இப்பரந்த இடம் முழுவதும் 'கருவூர் வடக்கு' என்றும் 'கருவூர் தெற்கு' என்றும் கொச்சி அரசாங்க நிலஅளவை உருவப் படங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இப்பரந்த இடம் **வஞ்சி** அல்லது **கருவூர்** எனப் பெயர் பெற்றிருந்தது என்பதும், அதன் ஒரு பகுதி கடலுக்கு அருகில் நேராகவோ, காயல் வழியாகவோ அதனுடன் தொடர்பு கொண்டிருந்தது பற்றியே கருவூர்ப்பட்டினம் என்று வழங்கியது என்பதும் தெளிவாகின்றன. பேரியாற்றினால் சூழப்பட்ட வஞ்சிமாநகரம் இருந்த இடத்தை இவ்வெல்லைக்குள்ளாகவே நாம் தேடவேண்டும். இன்றுள்ள பெரிய பாதை ஒன்று அழிக்கோடு இருக்கும் இடத்தில் பேரியாற்றிலிருந்து புறப்பட்டு இரண்டு கிளைகளாக வடக்கு நோக்கிச் செல்கிறது. அவற்றில் ஒன்று கரை வழியே நேர் வடக்காகச் செல்கிறது. மற்றொன்று வடகிழக்காகக் காயல்கரை வழியே சென்று சிறிது தூரத்திற்கு அப்பால் முக்கிய பாதையுடன் சேருகிறது. அம்முக்கியப் பாதை சிறிது வடக்கில் சென்ற பிறகு மேலும் இரண்டாகப் பிரிகிறது. அவற்றுள் தலைப்பாதை, கரையை அடுத்தாற் போலக் கள்ளிக்கோட்டை வரை

செல்லுகிறது. கிளைப்பாதை, பொன்னுணி காயலின் பக்கமிருந்து கிழக்கு நோக்கித் திரும்பி மேற்கு மலைத் தொடரை அடுத்த குன்று வழியாகச் சென்று நீலகிரி மலையை அடைகின்றது. பின் கூறப்பட்ட இப்பாதையே சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் சேனை சென்றதாகக் கூறப்படும் வழியுடன் பொருந்துகிறது."

## இதுதான் வஞ்சி

எனவே, வஞ்சி என்பதும் கருவூர் என்பதும் வஞ்சிக் குளம் என்பதும் ஓரிடத்தையே குறிக்கின்றன என்று கொள்ளலாம். அந்த இடம் பேரியாற்றங்கரையிலேயே— சேரநாட்டுக் கடற்கரை ஓரத்திலேயே இருந்ததாகும் என்று கொள்வதே ஏற்புடையது.

---

# 2. சேர மன்னர்கள்

## பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து என்பது சேர மன்னர்களின் வரலாற்றைக் குறிக்கும் நூலாகும். இந்நூலுள் பத்துப் பாடல்கள் இருந்தன. அவற்றுள் முதற்பத்தும் இறுதிப் பத்தும் அழிந்தொழிந்தன. எஞ்சியுள்ள பாடல்கள் சேர மன்னர்களைப்பற்றியும் சேரர் படைத் தலைவர்களைப்பற்றியும் பேசுகின்றன. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு புலவரால் பாடப்பட்டது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகங்களும் வாக்கியங்களும் காணப்படுகின்றன. அவை பதிற்றுப்பத்தைத் தொகுத்த புலவரால் பாடப்பட்டவை.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் காணப்படும் பதிகங்களாலும், வாக்கியங்களாலும் அந்தந்தப் பத்துக்குரிய சேரனைப்பற்றிய பல செய்திகளை அறிய முடிகின்றது; பாடிய புலவர்தம் பெயரையும், வரலாற்றையும், அவர்கள் பெற்ற பரிசில்களையும், பாடல் பெற்ற மன்னனது ஆட்சிக் காலங்களையும் நன்கு அறிதல் முடிகின்றது. பதிற்றுப் பத்தால் பின்வரும் சேர மன்னர்களைப்பற்றிய விரிவான வரலாறுகளை நாம் அறியலாம்.

1. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
2. பல்யானைச் செல்கெழுகுட்டுவன்
3. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்
4. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்
5. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
6. செல்வக் கடுங்கோ வாழியாதன்
7. பெருஞ்சேரலிரும்பொறை
8. இளஞ்சேரலிரும்பொறை

## பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்

வஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டை ஆண்ட மன்னர்களுள் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் மிகுந்த பழைமையுடையோனாவான். மாமூலனார், முரஞ்சியூர் முடிநாகனார், இளங்கீரனார் என்னும் புலவர்கள் இவனைப்பற்றிப் பாடியுள்ளனர். இவன் முன்னோருள் ஒருவன் பாரதப் போரில் பெருஞ்சோறளித்தான் என்றும் அவன் பெயரும் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்றும் அறிஞர் கூறுவர்; இதற்கு வியாச பாரதமும் சான்று பகர்கின்றது. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் கொங்கு நாட்டில் தான் பெற்ற வெற்றிக்கு விழா நடத்தினான். விழாவின் இறுதியில் பெருஞ்சோறளிக்கப் பட்டது. இச்செயல் அவனுக்கேயுரியது ஆதலின் முரஞ்சியூர் முடிநாகனார் அவனைப் போற்றலானார். அப்போது அவர் அவன் முன்னவனை—பாரதப் போரில் பெருஞ்சோறு அளித்தவனை உதியன் சேரலாதனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

> "அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

இம்மன்னன் வெளியன் என்னும் வேளிர் தலைவனுடைய மகள் வேண்மாள் என்பவளை மணந்துகொண்டான். இரண்டு மக்கள் பிறந்தனர். மூத்தவனுக்கு நெடுஞ்சேரலாதன் என்பது பெயர். இளையவனுக்குக் குட்டுவன் என்பது பெயர்.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் வஞ்சியிலிருந்து ஆட்சி செய்தபொழுது, நெடுஞ்சேரலாதன் மாந்தை என்னும் நகரிலிருந்து நாடுகாவல் புரிந்து வந்தான்; உதியன் இறந்த பின்பு சேரமானாய் முடிசூடிக் கொண்டான்; மாந்தை நகரிலேயே தங்கி ஆட்சிப் பொறுப்பைக் கவனிக்கலானான்; தன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனை வஞ்சியிலிருந்து நாடுகாவல் செய்து வருமாறு பணித்தான். நெடுஞ்சேரலாதன் இளமையில் முரஞ்சியூர் முடிநாகனாரிடம் கல்வி பயின்றான்.



## நெடுஞ்சேரலாதனின் விழைவு

நெடுஞ்சேரலாதன் தன் ஆட்சிக் காலத்துக்குள் அரியதொரு செயலைச் செய்துமுடிக்க வேண்டுமென்று விரும்பினான். அவன் உள்ளம் அதுபற்றிச் சிந்தித்தது. அவன் முன்னோர்களுடைய சிறப்புக்கள் அவன் நினைவுக்கு வந்தன.

பெருஞ்சோற்று உதியன், சேரநாட்டின் தென் பகுதியை வென்று புலவர் பாராட்டுதலைப் பெற்றான். அவன் முன்னோருள் ஒருவன் பாரதப் போரில் பெருஞ்சோறளித்து விழாச் செய்து சிறப்புற்றான். அவருள் மற்றொருவன், குடநாட்டிற்குக் கிழக்கில் வானளாவி நிற்கும் பாயல்மலையின் வடக்கேயிருக்கும் வானமலையைத் தனக்குரியதாக்கிக்கொண்டு வானவன் என்னும் சிறப்பும், வானியாற்றை வரம்பறுத்து வானவரம்பன் என்னும் சிறப்பும் பெற்றான். தன் முன்னோர் பெற்ற இந்தச் சிறப்புக்களையெல்லாம் எண்ணிய செங்குட்டுவன் புலவர்கள் அவர்களை வாழ்த்தும் முறையை எண்ணிப் பார்த்தான்.

புலவர்கள் மன்னர்களை வாழ்த்துதல் மரபு; பல நூறாண்டு காலம் வாழுமாறு வாழ்த்திக் கூறுவார்கள்; 'பஃறுளியாற்றின் மணலினும் பலவாக வாழ்க' என்றும், 'பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்று நிலைபெறுக' என்றும் வாழ்த்துவார்கள். புலவர்கள் நெடுஞ்சேரலாதனைப் ' 'பொற்கோட்டிமயமும் பொதியமும் போல நிலைபெறுக' என்று வாழ்த்தினார்கள். இந்த வாழ்த்து நெடுஞ்

சேரலாதனைச் சிந்திக்கச் செய்தது. புலவர்கள் வாழ்த்தினை மெய்ப்பிக்க அவன் விழைந்தான்; இமயம் சென்று அதனை எல்லையாகக் கொள்ள வேண்டும் என்னும் உறுதி கொண்டான். இமயம்வரைச் சென்று புலிக்கொடி பொறித்து மீண்டான்; '**இமயவரம்பன்**' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான்.

## குடும்பம்

இமயவரம்பனுக்கு மனைவியர் இருவர். சோழன் மணக்கிள்ளி என்பானின் மகளாகிய **நற்சோணை** என்பாளிடம் பிறந்தவர்கள் இருவர். செங்குட்டுவன், இளங்கோ வடிகள் என்பது அம்மக்கள்தம் பெயர்களாகும். வேளாவிக்கோமான் பதுமன் என்பவனுடைய மகள் இமயவரம்பனின் மற்றொரு மனைவியாவாள். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என்போர் இவள் வழிப் பிறந்தவராவர். இமயவரம்பனைக் **குமட்டூர்க் கண்ணனூர்** என்னும் புலவர் பதிற்றுப்பத்து—இரண்டாம் பத்தாற் பாடியுள்ளார். இமயவரம்பன் அவர்க்கு ஐந்நூறு ஊர்களையும் தென்னாட்டு வருவாயில் ஒரு பாகத்தையும் அளித்தான்.

## சேரமரபினர்

நெடுஞ்சேரலாதன் தம்பியாக இருந்தவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்பவன். இவனைப் **பாலைக் கௌதமனார்** என்னும் புலவர் மூன்றாம் பத்தால் பாடியுள்ளார். இவன் பத்துப் பெரு வேள்விகளைச்செய்து முடிக்க, பாலைக் கௌதமனாரும் அவர் மனைவியும் சுவர்க்கம் புகுந்தனர் என்பது வழக்கு. இவன் இருபத்தைந்தாண்டுகாலம் வாழ்ந்தான்.

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்னும் பெயர்க்கு உரிய காரணம் யாது? இவனுக்கு முடிசூடும் பொழுது, கண்ணியையும் முடியையும் பகைவர்கள் கவர்ந்தமையால் களங்காயால் கண்ணியும் நாரால் முடியும்செய்து புனைந்துகொண்டான். அதுபற்றியே களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் பெயர் அமைந்தது. இவனை நான்காம்பத்தால் **காப்பியாற்றுக் காப்பியனார்** என்பவர் பாடியுள்ளார். இவர் இவனைப்பாடி நாற்பது நூறாயிரம் காணமும் நாட்டிற் பாகமும் பெற்றார். இவன் இருபத்தைந்து ஆண்டுகாலம் வாழ்ந்தான்.



நெடுஞ்சேரலாதனின் மகனாகிய சேரன் — செங்குட்டுவனை ஐந்தாம் பத்தாற் **பரணர்** என்னும் புலவர் பாடியுள்ளார். பரணர் பாடல்களைக் கேட்ட செங்குட்டுவன் மிகவும் மகிழ்ந்தான்; உம்பற்காடு என்னும் சேரநாட்டுப் பகுதியின் அரசிறை வருவாயையும், தன் மகன் குட்டுவன் சேரலையும் பரணர்க்குப் பரிசிலாக அளித்தான்.

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் தம்பி **ஆடுகோட்பாட்டுச்சேரலாதன்** என்பவன். இவன் தண்டகாரணியத்தில் இருந்தவரால் கவரப்பட்ட பசுநிரைகளை மீட்டுத் தொண்டியிற் கொணர்ந்து சேர்த்த சிறப்புடையவன். இவனைக் **காக்கைபாடினியார் நச்செள்ளையார்** என்னும் பெண்பாற்புலவர் ஆறாம்பத்தாற் பாடியுள்ளார். இவன், காக்கைபாடினியார் அணிகலன்கள் செய்துகொள்வதற்காக ஒன்பது காப்பொன்னும்நூறாயிரம் காணமும் கொடுத்தான்; அவரைத் தன் அவையில் வைத்துக்கொண்டு சிறப்பித்தான். இவன் முப்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்தான்.

**செல்வக்கடுங்கோ வாழியாதான்** என்பவன் அந்துவஞ் சேரல் இரும்பொறையின் மகனாவான். இவனைக் **கபிலர்** ஏழாம்பத்தாற் பாடியுள்ளார். செல்வக்கடுங்கோ கபிலர்க்குச் சிறுகொடையாக நூறாயிரம் காணம் அளித்தான்; 'நன்றா' என்னும் குன்றில் புலவருடன் ஏறிநின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டி அவற்றை அவர்க்கு உரிமையாக்கினான். இவன் இருபத்தைந்தாண்டு காலம் அரசனாய் இருந்தான்.

செல்வக்கடுங்கோவின் மகன் **பெருஞ்சேரலிரும்பொறையை** எட்டாம்பத்தால் **அரிசில்கிழார்** என்னும் புலவர் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவன் அதியமானுக்குரிய தகடூர்மேற் படையெடுத்துச் சென்று அதியமானையும் தகடூரையும் அழித்தான். இச்செய்தியினைத் "தகடூர் யாத்திரை" என்னும் நூல் கூறுகின்றது. அரிசில்கிழார் பாடல்களைக் கேட்ட பெருஞ்சேரல் தன் மனைவியோடு வெளியே வந்து, எண்பது நூறுயிரங் காணத்தோடு அரசு கட்டிலையும் கொள்ளுமாறு வேண்டினான். புலவர், 'யானிரப்ப, நீயாள்க' என வேண்டி, அவற்றை அவனுக்கே திரும்பக் கொடுத்து, அவனுக்கு அமைச்சரானார்.

பெருஞ்சேரலிரும்பொறைக்கும் அந்துவஞ்செள்ளை என்பாளுக்கும் பிறந்தவனே **இளஞ்சேரலிரும்பொறை** என்பவன். இவனை ஒன்பதாம் பத்தால் பெருங்குன்றூர்க்கிழார் என்னும் புலவர் பாடியுள்ளார். இவன் அவர்க்கு முப்பத்தீராயிரம் காணம் கொடுத்தான். மேலும் பல சிறப்புக்கள் செய்தான்.

## சேரன் - செங்குட்டுவன்

செங்குட்டுவன் தன்னுடைய இருபதாம் வயதில் ஆட்சிப் பொறுப்பையேற்றான். இவன் முப்பத்தைந்தாண்டு காலம் ஆட்சி செய்தான். இவனைப் பற்றிப் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தும் சிலப்பதிகாரமும் பேசுகின்றன. அந்நூல்கள் இவனுடைய வீரச் செயல்களாகப் பல போர்களைக் குறிப்பிடுகின்றன. அவை பற்றி அறிவோம் :

## போர்கள்

செங்குட்டுவன் செய்த போர்களாவன :—

1. தன் தாயின் படிமத்தைக் கங்கை நீராட்டச் சென்றபொழுது அங்கு எதிர்த்த ஆரிய மன்னர்களை எதிர்த்து நடத்திய போர்.
2. கொங்கர் செங்களத்து நடத்திய போர்
3. கடல் வழியே சென்று நடத்திய போர்
4. பழையன் மாறனுடன் நடத்திய போர்
5. ஒன்பது சோழருடன் நடத்திய போர்



இனி இவைபற்றி விளக்கமாக அறிவோம்:

தன் தாய் நற்சோணை இறந்த பின்பு அவள்பொருட்டு அமைத்த பத்தினிக்கல்லை நீராட்டிக் கொணரச் செங்குட்டுவன் கங்கை நோக்கிச் சென்றான். அங்கு ஆரிய மன்னர் பலர் திரண்டு வந்து அவனை எதிர்த்தனர். செங்குட்டுவன் அம் மன்னரையெல்லாம் அப்பேராற்றங்கரையில் தனியனாக இருந்து பொருது வென்றான். இதுவே செங்குட்டுவனது கன்னிப் போராகும். இதனைச் சிலப்பதிகாரம்,

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை யாட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலங்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்"

என்று சிறப்பித்துக் கூறுகின்றது. நெடுஞ்சேரலாதன் பெருநற்கிள்ளி என்னும் சோழ மன்னனொடு பொருது உயிரிழந்தான். அவன் மனைவி நற்சோணையும் உடனுயிர் நீத்தாள். இவ்வாறு உடனுயிர் நீத்த மகளிர்க்குப் பத்தினிக் கல் எடுத்தல் சிறப்பாகும். இதனைக்கன்னட நாட்டார் 'மாஸ்திகல்' என்று கூறுவர்.

சோழபாண்டியர் சேர்ந்து செங்குட்டுவனை எதிர்த்தனர். அப்போர் கொங்கர் செங்களத்தே நடைபெற்றது. செங்குட்டுவன் அவரது கொடி, படைகளையெல்லாம் கைக்கொண்டு பெருவெற்றியடைந்தான் என்பது கூறப்படு

கின்றது. இப்போரில் கொடுகூர் என்ற நகரம் செங்குட்டுவனால் அழிக்கப்பட்டது என்னும் செய்திப் பதிற்றுப் பத்து—ஐந்தாம் பத்தின் பதிகத்தால் தெரிகிறது. இதனை,

“நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினும் ஆங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன”

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பரணர், செங்குட்டுவன் கடலில் படைகளைச் செலுத்தியதையும் பழையன் என்பவனை அழித்ததையும் சிறப்பித்துக் கூறுகின்றார். கடலை அரணாகக் கொண்டு இடர் விளைவித்த பகையரசரை எண்ணிறந்த மரக்கலங்களுடன் சென்று அழித்தமை செங்குட்டுவன் வீரச் செயல்களுள் சிறந்ததாகும். செங்குட்டுவன் கடலிற் செய்த இவ்வருஞ் செயல் பற்றியே ‘கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்’ எனப்பட்டான். ‘சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்’ என்று இவனைப் புறநானூறு புகழ்கின்றது.

செங்குட்டுவனுக்குப் புகழளித்த மற்றொரு போர் அவன் பழையனுடன் நடத்தியதாகும். பழையன் என்பவன் பாண்டியன் படைத்தலைவன். இவன் மோகூர் என்னும் ஊருக்கு உரியவன். மோரிய அரசர் திக்குவிஜயம் செய்து தென்திசை வந்தபோது பழையன் அவர்க்குப் பணியவில்லை. அதனால் அவர்க்கும் பழையனுக்கும் பொதியமலைப் பக்கத்தே போர் நிகழ்ந்தது. அறுகை என்பவன் செங்குட்டுவன் நண்பன். பழையனுடைய பகைவன். நண்பனுக்கு உதவி செய்யவே இவன் பழையனுடன் போரிட்டான். பரணர் பாடிய செய்யுளொன்று இச்செய்தியை வற்புறுத்துகின்றது.



“நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணா னாயினுங் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்
கரண்கடா வுறீஇ யணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு”

இப்போரில் பழையனது காவல்மரம் அழிந்தது. பழையனுடைய யானைகளைக் கடாவாகவும், அவன் மகளிரது கூந்தலைக் கயிறாகவும் திரித்து வண்டியில் இழுத்தான் என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது.

கடற்கரையிலுள்ள வியலூரைச் செங்குட்டுவன் வென்றான்; பின்னர் நேரிவாயிலில் சோழமன்னர் ஒன்பதின்மரோடு பொருது வென்றான்; இடும்பாவனம் என்னும் ஊரையும் வென்றான். செங்குட்டுவனுக்கு அம்மானாகிய சோழன் இறந்ததும் அவன் மகனான இளஞ்சோழன் அரசப்பொறுப்பேற்றான். இவன் செங்குட்டுவனின் மைத்துன முறையுடையவன். இளஞ்சோழன் பட்டம் பெற்றதைப் பொறாத சோழமரபைச் சேர்ந்த ஒன்பதின்மர் கலகம் செய்தனர். செங்குட்டுவன் அதனை அடக்கினான்.

## வரலாற்று நிகழ்ச்சிகள்

செங்குட்டுவன் ஆட்சிக்காலத்து இரண்டு சிறப்புடைய வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவை கோவலன், கண்ணகியைப் பற்றிய கதையும், மாதவி, அவள் மகள் மணிமேகலையைப்பற்றிய கதையுமாகும். இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றைக் கூறும் சிலப்பதிகாரத்தை இயற்றினார். சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை வரலாற்றைக் கூறும் மணிமேகலையை இயற்றினார். இவ்விரண்டு நூல்களும் அகவற்பாவில் அமைந்துள்ளன. ஒவ்வொரு நூலிலும் முப்பது கதைகள் உள்ளன.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களை உடையது. கண்ணகியின் திருமணம், மாதவியின் ஆடலரங்கேற்றம், கோவலன் மாதவியுடன் கொண்ட நட்பு, அவளோடு அவன் வாழ்ந்த வாழ்வு, கண்ணகியின் துயர், கோவலன் மாதவியை விட்டுப் பிரிதல், கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிப் புறப்படல் முதலியன புகார்க்காண்டத்தில் கூறப்படுகின்றன.

கவுந்தியடிகள் என்னும் துறவியின் நட்புக்கொண்டு மதுரை நோக்கிச் செல்லல், மாதரியின் மனையில் கோவலனும் கண்ணகியும் இருத்தல், கோவலன் கொல்லப்படல், கண்ணகி வழக்குரைத்தல், பாண்டியன்—அவன் மனைவி இருவரும் இறத்தல், கண்ணகி மதுரையை எரித்தல், மதுராபதி தெய்வம் கண்ணகிக்குப் பழைய வரலாறு கூறல் என்னும் செய்திகளின் விளக்கங்கள் மதுரைக் காண்டத்தில் கூறப்படுகின்றன.

மூன்றாவதாகவுள்ள வஞ்சிக்காண்டத்தில் செங்குட்டுவனைப் பற்றிய செய்திகளே இடம் பெற்றுள்ளன. செங்குட்டுவன் கண்ணகியின் படிமம் சமைக்க இமயம் சென்றதும் அங்கு அவனை எதிர்த்த கனக, விசயர் என்னும் ஆரிய மன்னர் இருவரை வென்றதும், அவர்கள் தலையில் கண்ணகி படிமத்திற்குரிய கல்லை ஏற்றிக் கொணர்ந்ததும், வஞ்சிமா நகரில் கண்ணகிக்குக் கோயில் எடுத்துச் சிறப்பித்ததும் ஆகிய விவரங்கள் வஞ்சிக் காண்டத்தில் கூறப்படுகின்றன. வஞ்சிக்காண்டத்திலுள்ள காதைகளின் பெயர்களைக் காண்போம்: குன்றக்குரவை, காட்சிக்காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை, வரந்தரு காதை.



## வடநாட்டுச் செலவு

சேரன் செங்குட்டுவன் தன் தாயான நற்சோணையின் படிமம் பொருட்டு இமயம் சென்று மீண்டான் என்பதை முன்னர் அறிந்தோம். அவன் வீரமகளாகிய கண்ணகியின் படிமம் சமைத்தற்குரிய கல்லைக் கொணர இமயம் வரைச் சென்றான்; அங்குத் தன்னை எதிர்த்த ஆரிய மன்னர்களை—கனக விசயரை வென்றான்; இமயத்தில் கண்ணகி படிமத்துக்குரிய கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டித் தாயகம் மீண்டான். செங்குட்டுவனது வட நாட்டுச் செலவு முப்பத்திரண்டு திங்கள்களைக் கொள்ளை கொண்டது. அது பற்றி விரிவாக அறிவோம்:

## மலைவளம் காணல்

சேரநாட்டு மலை அருவி முழங்கும் அழகிய மலையாகும்; மஞ்சு சூழ்ந்த சோலைவளம் பெற்றது; திருமால் மார்பின் ஆரம்போன்ற பேரியாற்றைக் கொண்டது. செங்குட்டுவன் தன் மனைவி இளங்கோ வேண்மாளுடன் புறப்பட்டு மலை வளம் காணச் சென்றான். அவனுடன் வீரர்கள் பலரும் இளங்கோவடிகளும் சென்றனர். அவர்களனைவரும் பேரியாற்றங்கரை மணற்குன்றில் தங்கினர்.

மலையில், மலைவாழ்மக்கள் குரவையாடினர்; தினை குற்றுவோர் வள்ளைப்பாட்டு பாடினர்; தினைப்புனங்களில் கிளி முதலியவற்றைக் கடிந்தோட்டும் ஓசை கேட்டது. அருவி போர்ப்பறை போலப் பயங்கரமாக முழங்கியது. புலியும் யானையும் பொருது உறுமின. தினைப்புனங் காப்போர் பரண்மீதிருந்து ஆலோலம் பாடிப் புள்ளோட்டினர். குழிகளில் விழுந்துவிட்ட யானைகளைப் பாகர்கள் வெளியேற்றி ஒலி செய்தனர். அவர்களுக்கு மன்னன் வந்தது தெரிந்தது. உடனே மலைபடு பொருள்களுடன் மன்னனைக் காணச் சென்றனர்.

மலைவாணர், மலைபடு பொருள்களை மன்னவன் முன் வைத்து, "ஏழ்பிறப்பிற்கும் யாம் உமதடியவர்கள், உமது கொற்றம் வாழ்க" என்று வாழ்த்தினர். பின்னர் அவனை வணங்கித் தாம் மலைப்பகுதியில் கண்டவொரு அதிசயத்தைக் கூறத் தொடங்கினர்.

## மலைவாணர் கூற்று

"அரசே! வியப்பான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இம்மலைமேலுள்ள வேங்கை மரநிழலில் ஒரு பெண் நின்றாள். அவள் ஒரு முலையிழந்தவள். கணவனை இழந்து துயருற்றதாகக் கூறினாள். அவள் கணவனுடன் வானவர் போற்ற விண்ணகமடைந்தாள். அவள் எந்த நாட்டாள், யார் மகள் என்பதை நாங்கள் அறியோம். இதற்கு முன்னால் அத்தகையவளை நினது நாட்டில் நாங்கள் கண்டதில்லை. அவள் பல நூறாயிரம் ஆண்டுகள் வாழ்க."

## சாத்தனார் கூற்று

மலைவாணர் கூறியதைக் கேட்டுச் செங்குட்டுவன் வியப்புற்றான். மலைமீது நின்று, விண்ணவர் போற்றக் கணவனோடு விண்ணகமடைந்தவள் யார் என்பது அவனால் அறிய முடியவில்லை. அப்போது மதுரையிலிருந்து வந்த சாத்தனார் அங்கு வந்தார். அவர் செங்குட்டுவனது கலக்கத்தைப் போக்கிக் கண்ணகியின் வரலாற்றைக் கூறினார். செங்குட்டுவன் கண்ணகியின் வரலாறு கேட்டு மகிழ்ந்தான். அவன் தன் மனைவியைப்பார்த்து, கணவனையிழந்து நம் நாடு வந்து விண்ணகம் சென்ற கண்ணகி, கணவன் இறந்தவுடன் உயிர்நீத்த கோப்பெருந்தேவி ஆகிய இவ்விருவரில் சிறந்தவர் யார் என்று கேட்டான். கோப்பெருந்தேவி, "கணவனுக்குற்ற துன்பம் பொறாமல் உயிர்விட்ட பாண்டியன் மனைவி வானுலகில் சிறப்புறட்டும். நம் அகல்நாடு வந்தடைந்த பத்தினிக் கடவுளைத்தான் நாம் வழிபடல் வேண்டும்" என்றாள். செங்குட்டுவன் அது கேட்டு மிகவும் மகிழ்ந்து அமைச்சரை நோக்கினான்.



## அமைச்சர் கூற்று

அரசனது குறிப்புணர்ந்த அமைச்சர், பத்தினிச் சிலைக்குரிய கல்லைப் பொதிய மலையில் எடுத்துக் காவிரியில் நீர்ப்படை செய்யலாம் என்றும், அல்லது இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்யலாம் என்றும் கூறினர். செங்குட்டுவன் பொதியமலையில் கல்லெடுத்துக் காவிரியில் நீர்ப்படை செய்ய விரும்பவில்லை. அவன் இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்யவே விரும்பினான்.

**வில்லவன் கோதை** என்னும் அமைச்சன், "மன்னவ நினது கொற்றம் பல்லாண்டு வாழ்க. கொங்கர் செங்களத்தில் முன்னர், நின்னோடு எதிர்த்துப் பொர முடியாத பாண்டியரும் சோழரும் அவரவர்க்குரிய கயற்கொடியையும், புலிக்கொடியையும் உனக்கு அளித்துவிட்டு ஓடினர். அந்தச் செய்தி திசை யானைகளின் செவிகளுக்கு எட்டுமளவில் சிறப்புடையது. கொங்கர், கலிங்கர், கருநாடர், வங்கநாட்டார், கங்கர், வடநாட்டு ஆரியர், சிற்றரசர் பலர் ஆகியவருடன் தமிழ்ப்படை கலந்தபொழுது, நீ நினது யானையை விட்டுப் பகைவரைப் புறமுதுகிடச் செய்த சிறப்பை என்னால் மறக்க முடியவில்லை. உனது தாயும் எம் அரசியுமாகிய நற்சோணையை நீ கங்கையில் நீராட்டியபொழுது நின்னை எதிர்த்த ஆரிய மன்னர் ஆயிரவரை நீ ஒருவனாக நின்று எதிர்த்த காட்சியைக் கூற்றுவன் கண் விழித்துக் கண்டான். இப்போதும் நீ கண்ணகிக்கு இமயத்திலிருந்து கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்ய எண்ணுகின்றாய்! நினது எண்ணத்தைத் தடை செய்ய வல்லவர் யார்? வடதிசை மன்னர்க்கெல்லாம், நினது இலச்சினையைப் பொறித்த ஓலைகளை அனுப்புக" என்றான்.

**அழும்பில்வேள்** என்னும் அமைச்சன், "மன்னவ, வடதிசை மன்னவர்க்கெல்லாம், நின் இலச்சினையைப் பொறித்த ஓலைகளை அனுப்ப வேண்டுவதில்லை. பகைவர்

களது ஒற்றர்கள் நமது வஞ்சி மூதூரில் இருக்கின்றனர். ஆதலால் நாம் யானைமேல் பறையறைவித்தால் போதும். அவரே இச்செய்தியைத் தம் அரசர்களுக்குத் தெரிவிப்பர்," என்றான். அழும்பில்வேளின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. யாவரும் வஞ்சி மீண்டனர். செங்குட்டுவனது வட நாட்டுச் செலவு வஞ்சி நகரில் பறையறைந்து தெரிவிக்கப்பட்டது.

## செங்குட்டுவன் வஞ்சினம்

"இமயத்திலிருந்து நீராட வந்த முனிவர்கள் கனகன், விசயன் என்னும் ஆரியமன்னர் இருவர் நம்மையெல்லாம் இகழ்ந்துரைத்ததாகச் சொல்லினர். தமிழர்களது ஆற்றலை அவர்கள் அறியமாட்டார்கள் போலும்! அவர்கள் சொன்னது சோழபாண்டியர்க்கும் இகழ்ச்சியைத் தரும். தமிழ் மன்னர் யார்க்குக் குறைவரினும் அது தமிழகத்திற்கே வந்த குறையாகும். ஆதலால், அவர்களை வென்று, பத்தினிக் கல்லை அவர்கள் தலையில் வைத்துக்கொண்டு வரும்படிச் செய்யாவிடின், குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் மன்னனாகக் கடவேன்," என்று செங்குட்டுவன் அமைச்சர், சான்றோர் முதலானோர் முன்னிலையில் வஞ்சினம் கூறினான். இதனை இளங்கோவடிகள்,

**"இமையத் தாபதர் எமக்கீங் குணர்த்திய**
**அமையா வாழ்க்கை அரசர் வாய்மொழி**
**நம்பால் ஒழுகுவ தாயின், ஆங்கஃது**
**எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்;**
**வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்**
**கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது**
**வறிது மீளுமென் வாய்வா ளாகிற்**
**செறிகழல் புனைந்த, செருவெங் கோலத்துப்**
**பகையரசு நடுக்காது, பயங்கெழு வைப்பிற்**
**குடிநடுக் குறூஉங் கோலே னாக"**

என்று கூறியுள்ளார்.



சோதிடன் எழுந்து மன்னவனைப் பணிந்தான்; "மன்னவ, வாழ்க நின் கொற்றம். இருநில மருங்கின் மன்னரெல்லாம் நினது திருமலர்ச்சேவடி பணியும் நல்ல வேளை இதுவேயாகும். நீ வடதிசை நோக்கி இப்போதே புறப்படுக," என்றான். செங்குட்டுவன் "என் வாளும் குடையும் வடதிசை பெயர்க" என்று ஆணையிட்டான். முரசு ஒலித்தது; வீரர் ஆர்த்தனர். மாகதப் புலவரும் வைதாளிகரும், தேர்ப்பாகரும் அரசனுக்கு வெற்றியுண்டாக வாழ்த்தினர். சேரன் தன் படை வீரர்களுடன் வஞ்சியைவிட்டுப் புறப்பட்டான்.

## நீலகிரியில்

நீலகிரியில் பாடிவீடு அமைக்கப்பட்டது. மன்னவன் யானையினின்று இறங்கித் தனக்கென அமைக்கப்பட்ட அமளியில் அமர்ந்தான். அங்கு அவனை முனிவர்களும் அரசர்கள் பலரும் வந்து கண்டனர்; வாழ்த்தும் வணக்கமும் கூறி மீண்டனர். அப்போது வாயிற் காப்போன் அங்குவந்து சஞ்சயன் வந்திருப்பதாகக் கூறினான். செங்குட்டுவன் அவனை உள்ளே அனுப்புமாறு கூறினான். சஞ்சயன் மன்னவனைப் பலவாறு வாழ்த்திப் பின்வருமாறு கூறினான்:

" நூற்றுவர் கன்னர் உனக்கு நண்பர். சேரன் கடவுளெழுத கல்லெடுக்க இமயம் செல்ல வேண்டா. நாங்களே சென்று இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டிக் கொணர்வோம் என்கின்றனர். அருள்புரிக."

செங்குட்டுவன் நூற்றுவர் கன்னரைத் தோணிகள் தயார்செய்து கங்கையைக் கடக்கத் துணைபுரியுமாறு உதவ வேண்டிச் சஞ்சயனை அனுப்பினான்.

## வெற்றி வீரன்

நூற்றவர் கன்னர் துணையைக்கொண்டு கங்கையைச் செங்குட்டுவனும் அவன் படை வீரரும் கடந்தனர். கனகனும் விசயனும், உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் முதலிய மன்னர்களோடு கலந்து செங்குட்டுவனோடு போரிடக் காத்திருந்தனர். இருதிறத்தார்க்கும் போர் நடை பெற்றது. கனக—விசயரும் அவர்க்குத் துணையாக வந்த வரும் தோற்றனர். இப்போர் பதினெட்டு நாழிகையில் முற்றுப் பெற்றது. கண்ணகிக்குச் சிறந்த கல்லெடுக்கப் பட்டது. அக்கல் கங்கையில் நீராட்டப்பட்டது. அதனைச் சேரன் கனக, விசயர் தலைமேல் ஏற்றி வஞ்சிக்குக் கொணர்ந் தான்.

## பத்தினி வழிபாடு

கண்ணகி படிமம் சமைக்கப்பட்டது. செங்குட்டுவன் அமைச்சரை விளித்துக் கண்ணகிச் சிலையைக் கோயிலில் பிரதிட்டை செய்யுமாறும், திருவிழா நடத்துமாறும், நாளும் வழிபாடுகள் நிகழ்த்துமாறும் ஏவினான். பலநாட்டு மன்னர்களும் கூடினர். பத்தினித் தெய்வத்திற்கு வழிபாடு செய்யப்பட்டது. இலங்கை நாட்டுமன்னனான கயவாகு கண்ணகியைத் தன் நாட்டிலும் எழுந்தருளுமாறு வேண் டினான். அவ்வாறே எழுந்தருளுவதாகக் கண்ணகி மொழிந் தாள்.

## சமயப் பொதுநோக்கு

சேரன் செங்குட்டுவன் சிவபெருமான் அருளால் பிறந் தவன் என்றும், சிவபெருமான் அருள்கொண்டு விளங்கிய வன் என்றும் இளங்கோவடிகள் தமது காப்பியத்துள் கூறியுள்ளார். இவன் வஞ்சியைவிட்டு வடநாட்டு யாத் திரைக்குப் புறப்பட்டபோது சிவபெருமானை வணங்கி, சிவப்பிரசாதத்தைத் தலையில் தரித்துக்கொண்டான்; பட்டத்து யானைமேல் ஏறிப் புறப்பட்டபொழுது திருமால்



பிரசாதத்துடன் சிலர் வந்து இவனை வாழ்த்தினர். செங் குட்டுவன் திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் புயத்தில் தாங்கிக்கொண்டான். இவன் சிவபிரான்பால் பேரன்பு கொண்டவனேயாயினும், பிறசமயங்களையோ, பிறசமயத் தைச் சார்ந்தவர்களையோ குறை கூறவில்லை. இவன் ஆட்சிக்காலத்தில்தான் வஞ்சிமாநகரில் வைதிகரும், ஜைன ரும், ஆசீவகரும், பௌத்தரும் கலந்து வாழ்ந்தனர். மணிமேகலை வஞ்சிமாநகருள் சென்றபோது சமயக்கணக்க ரோடு அளவளாவினாள் என்பதுகொண்டு வஞ்சி மூதூரி லிருந்த சமயங்களின் சிறந்த நிலையை அறியலாம்.

## சமகாலத்தரசர்

செங்குட்டுவன் காலத்தில் சோழ பாண்டியரும், அவர்க்கு அடங்கிய குறுநில மன்னர்களும் பலராயிருந் தனர். இவன் காலத்தில் சோழநாட்டை ஆண்ட அரசர் கள் பலராவர். மணக்கிள்ளி, நெடுங்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கரிகாற் பெருவளத்தான், கிள்ளி வளவன், நலங்கிள்ளி என்னும் சோழமன்னர்களும், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், வெற்றிவேற்செழியன் என்ற நனமாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெரு வழுதி என்னும் பாண்டிய மன்னர்களும், செங்குட்டுவன் காலத்தில் தமிழகத்தில் ஆட்சிபுரிந்தனர். இவர்களே யல்லாமல் குடகு நாட்டையாண்ட கொங்கிளங்கோசர், இலங்கையை ஆண்ட கயவாகு, கங்கையின் வடகரையி லுள்ள பகுதிகளையும் மாளுவ நாட்டையும் ஆட்சிபுரிந்த நூற்றவர்கன்னர், வடநாட்டரசருள் ஒருவனான அறுகை என்னும் பிறமன்னர்களும் செங்குட்டுவனுக்கு நண்பர்க ளாக விளங்கினார்கள்.

## பண்பு நலன்

செங்குட்டுவன் இறையன்பு மிக்கவன். சிவபெருமான் திருமால் முதலிய தெய்வங்களிடத்தும், முனிவர்கள், அந்-

தணர்கள் முதலிய சான்றோர்களிடத்தும் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். கண்ணகித் தெய்வ வணக்கம் தமிழகத்திலும், இலங்கை முதலிய நாடுகளிலும் பரவியமைக்கு இவனே காரணமாவான். இவன் போர் வேட்கை மிகுதியாகக் கொண்டிருந்தான். செங்குட்டுவன் தன் ஆயுட்காலத்தில் பெரும் பகுதியைப் போர்புரிதலில் செலவிட்டான். இதனை இளங்கோவடிகள் பின்வருமாறு கூறுகின்றார்:

> "வையங் காவல் பூண்டநின் னல்யாண்டு
> ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

இவனது புகழ் தமிழகத்தில் மட்டுமன்றி வடநாட்டிலும் பரவியிருந்தது. இவன் புலவர் பெருமக்களிடத்தும், சான்றோரிடத்தும் மிக்க மதிப்புடையவனாய் இருந்தான்; நாட்டு மக்கள் நலம் கருதி அவர்களுக்கு வேண்டுவனவெல்லாம் செய்தான். நல்லியல்புகள் பல கொண்ட சேரன் முன் கோபம் உடையவனாக இருந்தான்; வடநாட்டில் தன்னால் வெல்லப்பட்ட கனக விசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வருமாறு பணித்தான். அவர்கள் இருவரிடமும் கனக விசயரைக் காட்டி மீண்ட காவலன் அவர்கள் நகைத்துக் கூறிய நகை மொழியைச் சொன்னார்கள். செங்குட்டுவன் அது கேட்டுச் சினந்தான். அப்போது மாடலமறையவன் கூறிய நல்லுரைகளைக் கேட்டுச் சோழபாண்டியருடன் போர் புரிவதைத் தவிர்த்தான். சேரமன்னர்களுள் செங்குட்டுவனே நீண்டகாலம் சிறப்புடன் ஆட்சி புரிந்தவன் என்று கூறலாம்.

# 3. காவிரிப்பூம்பட்டினம்

## உறையூர்

சோழர்களின் தலைநகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் அமைவதற்கு முன்பு உறையூர் தலைநகராக இருந்தது. உறையூர் **உறந்தை** என்றும் **கோழி** என்றும் வழங்கப்பட்டது. உறையூர் முதல்முதல் கோழி என்றே பெயர் பெற்றிருந்தது. 'கோழி எனப்படுவது உறையூர்' எனச் சிலப்பதிகார உரையாசிரியர்களான அரும்பதவுரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் கூறியுள்ளனர். கோழி, உறையூர் என்னும் பெயர்க்குரிய விளக்கங்களை அவர்கள் பின் வருமாறு கூறுகின்றனர்.

"சோழ மன்னனொருவன் யானைமீது சென்று கொண்டிருந்தான். ஓரிடத்தில் கோழி ஒன்று அந்த யானையைத் தாக்கிப் புறங்காட்டச் செய்தது. அதுகண்ட மன்னன் வியந்தான்; யானையைக் கோழி துரத்தி வென்றமைக்குக் காரணம் அந்த இடத்தின் சிறப்பேயாகும் என்று எண்ணினான். கோழியால் அந்த இடத்தின் சிறப்பை அரசன் உணர்ந்தான். ஆதலால் **கோழி** என்றே அதற்குப் பெயரிட்டான். அதுமுதல் அந்த இடத்தையே தனக்குரிய உறைவிடமாகக் கொண்டான். அரசன் உறைவதற்குச் சிறந்த இடமாக அது அமைந்தமை பற்றிப் புலவர் பெருமக்கள் அதனை **உறையூர்** என்று அழைத்தனர்." இதனை,

> "முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
> புறஞ்சிறை வாரணம்"

என்னும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

உறையூர் சோழர்களின் தலைநகரமாக இருந்தது என்பதைப் புறநானூற்றுப் பாடல்களாலும் அறியலாம்.

"கோழி யோனே கோப்பெருஞ் சோழன்" என்று பிசிராந்தையார் உறையூரைக் குறித்துள்ளார். பிசிராந்தையாரின் பிறிதொரு புறப்பாடல் உறையூரைப் பற்றியும், மன்னன் மாண்பு பற்றியும், அரண்மனைச் சிறப்புப் பற்றியும் அறிவிக்கின்றது. அதனைக் காண்போம்:

"சோழன் நன்னாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை அடியுறை எனினே, மாண்டநின்
இன்புறு பேடை அணியத்தன்
அன்புறு நன்கலன் நல்குவன் நினக்கே"

உறையூர் இளம்பொன் வாணிகனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், உறையூர் முதுசாத்தனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர்கள் உறையூர் என்னும் ஊர்ப் பெயரைக் கொண்டுள்ளனர். உறையூரைத் தலைநகராகக் கொண்டு சிறந்த முறையில் ஆட்சி செய்த கரிகால் வளவனை, "நீயே அறந்துஞ்சும் பொருநனை" என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் பாடியுள்ளார். மாறோக்கத்து நப்பசலையார், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர் பெருமக்களும் உறையூரைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவற்றால், காவிரிப்பூம்பட்டினம் தலைநகராவதற்கு முன்பே உறையூர் தலைநகராகச் சிறப்புற்று விளங்கியது என்பதை அறியலாம்.

## காவிரியாறு

காவிரியாறு மேற்குமலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதியாகிய சையமலையில் தோன்றுகிறது; குடகு, மைசூர், கொங்குநாடு, சோழநாடு முதலிய பகுதிகளில் ஏறத்தாழ நானூற்றெண்பது மைல் தொலைவு ஓடித் தரங்கம்பாடிக்குப் பத்துக்கல் தொலைவில் வடக்கே கடலொடு கலக்கின்றது. அவ்விடத்திற்றான் காவிரிப்பூம்பட்டினம் அமைந்திருந்தது. இப்போது அவ்விடம் காவேரிப்பட்டனம் என்னும் பெயரில் சிற்றூராய்க் காட்சி நல்குகின்றது.



## காவிரிப்பூம்பட்டினம்

ஆறு கடலுடன் கலக்கும் இடத்திற்குப் 'புகார்' என்பது பெயர். அவ்வாறே காவிரியாறு கடலொடு கலக்கும இடத்திற்கும் புகார் என்னும் பெயர் அமைந்தது. சிறப்புப் பற்றியும் பொலிவு பற்றியும் புகார், **பூம்புகார்** ஆயிற்று. ஆயின், காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயர் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. மூதூர், பேரூர், பெருநகர், பட்டினம், புகார், பூம்புகார், காவிரிப்பட்டினம், காவிரிப் படப்பைப் பட்டினம், காவிரிப் படப்பை நன்னகர் என்னும் பல பெயர்களால் காவிரிப்பூம்பட்டினம் வழங்கப்பட்டுள்ளது. காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயர் வழக்கில் இடம் பெற்றிருந்தது. காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கந்தன், காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் என்னும் புலவர் பெயர்களே இதற்குத் தக்க சான்றுகளாகும்.

காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்புக்களை எட்டுத்தொகை நூல்களுள் சில பாடல்களும், பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும், ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தெளிவாக உரைக்கின்றன.

## சிறந்த துறைமுகம்

காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியது. அங்கு இறக்குமதியான பொருள்களும் ஏற்று

மதிக்குரிய பொருள்களும் புலி இலச்சினை இடப்பட்டன. அவை மூட்டையாகப் போரேறி நின்றன. இதனை,

“ மாரிபெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடி பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமுடைப் போரேறி ”

என்று பட்டினப்பாலை கூறுகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் குதிரைகள் வந்து இறங்கினவாம். அங்கு எப்போதும் பல நாட்டுக் கப்பல்கள் தங்கியிருக்குமாம்; யவன சோனக வணிகர்கள் தமிழ் நாட்டுப் பொருள்களை வாங்கிச் செல்லக் கப்பல்களுடன் வந்திருப்பர். தமிழ் நாட்டு மிளகு, அகில், துகில், முத்து, மணி, பவளம் முதலியன பிற நாடுகளுக்கு மிகுதியாக அனுப்பப்பட்டன. அத்துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது. கடலில் வரும் கப்பலைத் துறைமுகம் நோக்கி அழைத்தலால் அது ‘கலங்கரை விளக்கம்’ என்றும் பெயர் பெற்றது.

## பெயர்க் காரணம்

பூம்புகார் காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயர் பெற்றமைக்கு மணிமேகலை பின்வரும் கதையினைக் கூறுகின்றது:



“இந்திய நாடு சம்புத்தீவு என்று பழைய காலத்தில் பெயர் பெற்றிருந்தது. இத்தீவின் காப்புத் தெய்வம் சம்பாபதி. சம்புத்தீவைக் காத்தற்குக் காவிரி கடலொடு கலக்குமிடத்தைத் தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டமையால் அந்த இடம் சம்பாபதி என்று வழங்கப்பட்டது.

“காந்தமன் என்னும் சோழமன்னன் தன் நாட்டை வளப்படுத்த ஓர் ஆற்றினை உதவுமாறு அகத்தியரை வேண்டினான். அவர் தன் கையிலுள்ள கமண்டலநீரை ஓடவிட்டார். அந்நீர் கா (சோலை) எல்லாம் பரந்து சென்றது. அதனால் அந்நீரோட்டம் காவிரி எனப்பட்டது. அது சம்பாபதி தெய்வத்தின் அடியை வருடி வணங்கியது. அது கண்ட சம்பாபதி மகிழ்ந்தது; அவ்விடத்தைக் காவிரி என்ற பெயரால் வழங்க அருளியது. அது முதல் சம்பாபதிப்பட்டினம் **காவிரிப்பூம்பட்டினம்** எனப் பெயர் பெற்றது.”

## இரண்டு பூதங்கள்

தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் காவிரிப்பூம்பட்டினத்தை வளம்பெறச் செய்ய எண்ணினான்; அகத்தியர் கட்டளைப்படி இந்திரனை வணங்கினான்; இந்திரன் கருத்துப்படி ஆண்டுதோறும் இந்திரவிழாக் கொண்டாடினான். இந்திரவிழா சித்திரைத் திங்கள் முழு நிலாவன்று தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும். தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனுக்குப் பிறகு, அவன் வழியினர் ஆண்டு தவறாமல் இந்திர விழா நடத்தினர்.*

முசுகுந்தன் என்பவன் சோழ மன்னருள் ஒருவன். இவன் இந்திரனுக்கு உதவியவன். அசுரர்கள் அம்புகள் எய்து அவனைத் துன்புறுத்தினர். அவன் துன்பத்தை

* இந்திர விழாவைப்பற்றிய செய்தி வடமொழியில் இரகு வமிசத்திலும் காணப்படலால், இவ்விழா வட நாட்டிலும் கொண்டாடப்பட்டதென்பதை அறியலாம்.

இந்திரன் ஏவலால் ஒரு பூதம் வந்து தீர்த்தது. பின்னர் அது அந்நகரின் நாளங்காடியில் தங்கி, நகரைக் காவல் செய்தது. அது நாளங்காடிப் பூதம் எனப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் சதுக்கப்பூதம் என்னும் பெயருடைய பூதமொன்றும் இருந்தது. இந்திரவிழா நடைபெறாது போனால், நாளங்காடிப்பூதம் நகரத்தவர்க்குத் துன்பம் விளைவிக்கும் என்றும், பொய்யொழுக்கமுடையோரைப் பாசத்தால் பிணித்துப் புடைத்துண்ணும் சதுக்கப்பூதம் நகரைவிட்டு நீங்கிவிடும் என்றும் சாபங்கள் இருந்தன.

## மூன்று பிரிவுகள்

காவிரிப்பூம்பட்டினத்தின் கடற்கரையோரமாக அமைந்திருந்த பகுதி **மருவூர்ப்பாக்கம்** எனப்பட்டது; அகநகராக அமைந்த பகுதி **பட்டினப்பாக்கம்** எனப்பட்டது. இவ்விரண்டு பாக்கங்களுக்கும் இடையில் இருந்த இடம் வணிகத்தலமாக விளங்கியது—நாளங்காடி என்று வழங்கப்பட்டது. இங்குத்தான் முசுகுந்தனுக்கு இந்திரனேவலால் உதவி செய்த பூதம் வாழ்ந்தது. எனவேதான் அந்தப்பூதம் நாளங்காடிப்பூதம் என்னும் பெயர் பெற்றது. இனி இம்மூன்று பகுதிகளையும் சற்று விரிவாகக் காண்போம்:

## மருவூர்ப்பாக்கம்

நிலா முற்றங்களும், சிறப்புடைய பலவகை அணிகளால் எழில் செய்யப்பட்ட அறைகளும், மான்விழி போன்ற காற்றியங்கும் வழிகளாகிய சாளரங்களும் கொண்ட மாளிகைகள் மருவூர்ப்பாக்கத்தில் மிகுதியாக இருந்தன; பெரிய பண்டகசாலைகள் இருந்தன. காவிரி கடலோடு கலக்குமிடத்தில் கரையோரமாக யவனர் மாளிகைகள் இருந்தன; அவை கண்ணைக் கவரும் எழில் கொண்டவை. அவர்கள் வாணிகத்தில் லாபம் பெற்றனர்; காண்பவர் தம் அன்பைப் பெற்றனர். கடல் வாணிகத்தால்



பொருள் சேர்க்கத் துணிந்த பிற நாட்டு வாணிகர்களும் கடற்கரையோரமாக வாழ்ந்தனர்.

சாந்து, மணப்பொடி, குளிர்ந்த வாசனைச்சந்தனம், பலவகை மலர்கள், செந்தேன், பச்சிலை, கற்பூரம், அகில் முதலிய நறும்புகைப் பொருள்கள் முதலியனவற்றை விற்போர் நகர வீதிகளில் திரிந்தனர். நகரின் ஒரு தெருவில், பட்டு நூலாலும் மயிராலும் பருத்தி நூலாலும் நுட்பமான தொழில் திறங்களால் நெய்வோர் இருக்கைகள் இருந்தன. மாசில்லாத முத்துக்கள், பலவகை மணிகள், பொன் முதலியன இவ்வளவின என்று வரையறுத்துக் கூற முடியாத அளவில் குவிந்து கிடக்கும் அகன்ற தெருக்களும், நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள், கொள்ளு, பயறு, உளுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, மூங்கில் நெல், காராமணியாகிய பதினெட்டு வகைக் கூலங்கள் குவித்து வைத்து விற்கப்பட்ட தெருக்களும் நகரில் இருந்தன.

அப்பவாணிகர், கள் விற்போர், மீன் விற்போர், உப்பு விற்போர், வெற்றிலை விற்போர், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம், தக்கோலம் ஆகிய பஞ்ச வாசங்களை விற்போர் வாழ்விடங்களைக் கொண்ட தெருக்களும், கள் விற்கும் மகளிர், மீன் விற்கும் பரதவர், ஆட்டு வாணிபர் ஆகியோர் நிறைந்த புலால் கடைகளும் நகரின் ஒரு புறத்திலிருந்தன.

வெண்கலக் கன்னாரும், செம்புப் பொருள்களைச் செய்வாரும், மரத்தை அறுத்துத் தொழில் செய்யும் தச்சரும், வலிய கைகளையுடைய கொல்லரும், சித்திரகாரரும், சிற்பவல்லுநரும், மண்கொண்டு பலவகைப் பொருள்களைச் செய்வோரும், பொன்கொண்டு அணிபல செய்யும் தட்டாரும், மாணிக்கம் இரத்தினங்கள் முதலியவற்றால் உயர்ந்த அணிகலன்களைச் செய்வோரும், தையற்காரரும், கம்மியரும், தோல்கொண்டு பணிசெய்யும் செம்மாரும்,

துணி, நெட்டி இவற்றால் மணிமாலை முதலியவற்றைச் செய்வோரும் நகரின் ஒருபுறத்தில் வாழ்ந்தனர்.

யாழ் முதலிய இசைக்கருவிகளில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழிசைகளையும் பண்ணும் திறனும் அறிந்து பாடும் பாணர்களும் இசைவாணர்களும் மருவூர்ப்பாக்கத்தின் ஒரு தெருவில் வாழ்ந்தனர். பலவகையான சிறுசிறு தொழில்களைச் செய்து பிழைக்கும் குற்றமற்ற தொழிலாளர் பலர் அங்கு வசித்தனர். சுருங்கக் கூறின், தொழில் செய்வோர், வாணிகம் செய்வோர் ஆகியவர்தம் இருப்பிடங்கள் மருவூர்ப்பாக்கத்தில் இருந்தன.

## பட்டினப்பாக்கம்

பட்டினப்பாக்கம் மன்னவன் அரண்மனை அமைந்த இடமாகும். அரசவீதிகள், தேரோடும் தெருக்கள், கடைத் தெருக்கள், தனவணிகர்களின் மாடமாளிகைகள் விளங்கும் தெருக்கள், அந்தணர் வாழும் மனைகள் விளங்கும் தெருக்கள் ; உழவர், மருத்துவர், காலக்கணிதர், சோதிடர் முதலியோர் தங்கள் தொழிலுக்கேற்ப வாழும் தெருக்கள்; முத்துக்கோப்போரும், மணிமாசு நீக்குவோரும், வளையை அறுத்து அணிகள் செய்வோரும் இருக்கும் தெருக்கள்; அரசன் முன்னிலையில் நின்று வணங்கும் சூதர், இருந்து வணங்கும் மாகதர், அரசர் புகழ் பாடும் வைதாளிகர், நாழிகை கூறும் நாழிகைக் கணக்கர், சாந்திக் கூத்தர், மதங்கர், களத்தாடும் கூத்தியர், கணிகையர், பரிசங் கொள்ளும் விலைமாதர், குற்றேவல் செய்யும் ஏவல் மகளிர், தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, உருக்குக் கருவி முதலியவற்றை வாசிப்போர், போர்ப்படைக்கும் திருவிழாக்களுக்கும் பறைகொட்டுவோர், நகைவேழம்பர் முதலியோர் தங்கள் பிரிவின் நிலை தெரியும்படி வாழும் இடங்கள்; பரிப்பாகர், கரிப்பாகர், தேர்ப்பாகர், கடுங்கண்மறவர் ஆகிய இவர்கள் அரண்மனைப் புறத்தைச் சுற்றியிருக்கும் இடங்கள் ஆகிய இவையாவற்றையும் கொண்டு பெருஞ்சிறப்புடன் விளங்கியது பட்டினப்பாக்கம்.



## ஐவகை மன்றங்கள்

பட்டினப்பாக்கத்தில் ஐவகை மன்றங்கள் இருந்தன. அவை வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், ஒளி வீசும் நெடிய கல் நடப்பட்ட மன்றம், பூதச்சதுக்கம், பாவை மன்றம் என்பனவாகும்.

**வெள்ளிடை மன்றத்தில்** பல பொருள்கள் திணிக்கப்பட்ட மூட்டைகள் இருந்தன. அவற்றின்மேல் அவற்றுக்கு உரியவர்தம் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. மூட்டைக்குரியவர் தத்தமது மூட்டைகளை எடுத்துச் செல்வர். கள்வன் ஒருவன் பிறர்க்குரிய மூட்டையைக் கவர்வானேயானால், அவன் அதை எங்கும் கொண்டு செல்லமுடியாது. மக்களால் அவன் தண்டிக்கப்படுவான். வெள்ளிடை மன்றத்தை எண்ணிய அளவிலேயே கள்வர் நடுங்குவர். எனவே, பொருளைக் களவு செய்வோரை வெளிப்படுத்தி அவமானப்படுத்துவது வெள்ளிடை மன்றம் என்று கொள்ளலாம்.

**இலஞ்சிமன்றம்** என்பது ஒரு பொய்கையாகும். கூன், குறள், ஊமை, செவிடு, தொழுநோயர் ஆகியோர் அப்பொய்கையில் மூழ்கி வலம் வந்தால் குறைகள் நீங்கி நலம் பெறுவர்.

அடுத்துள்ள மண்டபத்தில் ஒளிவீசும் நெடிய கல் நடப்பட்டிருந்தது. வஞ்சகர்களால் மருந்து வைக்கப்பட்டுப் பித்தம் கொண்டவர்கள், நஞ்சுண்டுத் துன்புறுபவர்கள், பாம்பால் கடியுண்டோர், பேய்ப்பிடித்துத் துயர்ப்படுவோர் ஆகிய இவரெல்லாம் அந்த ஒள்ளிய கல்லைச் சுற்றி வந்து தொழுதால் இடர்நீங்கி நலம் பெறுவர்.

**பூதச்சதுக்கத்தில்** பூதம் ஒன்றுண்டு. தவவேடங் கொண்டு அவ்வேடத்திற்கு ஏற்ப நடவாமல் பிறரை

ஏமாற்றும் போலித் துறவிகள், கணவரை வஞ்சித்து ஒழுகும் பெண்டிர், மன்னனுக்குத் தீயன எண்ணும் அமைச்சர், பிறர்மனை விழைந்தோர், பொய்க்கரி புகன்றோர், புறங்கூறுவோர் ஆகிய இவர்களை அப்பூதம் தண்டிக்கும்.

அரசனது செங்கோல் தவறினாலும், அறங்கூற வையத்தார் நடுவுநிலை தவறினாலும் அதனை நாவாற் கூறாமல் கண்ணீற்கூறும் பாவையைக் கொண்டது பாவை மன்றம்.

இவ்வைவகை மன்றங்களால் புகார் நகரில் கள்வர் பற்றிய அச்சம், போலித்துறவு, மகளிர் கணவரை வஞ்சித்தல், பிறர்மனை நயத்தல், அரசத்துரோகம், பொய்க்கரி புகலுதல், புறங்கூறுதல் ஆகிய குற்றங்கள் இல்லாமலிருந்தன என்றும் அக்குற்றங்களைச் செய்ய மக்கள் அஞ்சினர் என்றும் கொள்ளலாம்.

## நாளங்காடி

மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் ஆகிய இவ்விரண்டு பாக்கங்களுக்கும் இடையில் உள்ள பொது நிலத்தில் மரங்கள் வரிசை வரிசையாக இருந்தன. அங்கு அம்மரங்களையே தூணாகக்கொண்டு கட்டப்பட்ட கடைகள் இருந்தன. அவற்றின் தொகுதி நாளங்காடி எனப்பட்டது. அங்குப் பொருள்களை விற்போர் ஓசையும் வாங்குவோர் ஓசையும் கேட்கும். அங்கு முசுகுந்தன் ஏவலால் நிலைத்த நாளங்காடி பூதத்திற்குக் கோவில் இருந்தது. ஆண்டு தோறும் சித்திரைத் திங்களின் முழுநிலவன்று மறக்குல மகளிர் தங்களை நன்றாக அலங்கரித்துக் கொண்டு பூதத்தின் பலிபீடத்தில் மலர்களைத் தூவுவர்; அவரை, துவரை, எள்ளுருண்டை, நிணச்சோறு முதலியவற்றைப் படைப்பர்; கைகோர்த்துக் குரவையாடுவர்; பின்னர், தாம் வாழும் நாட்டில் பசி, பிணி, பகை நீங்கி வான்சுரந்து வளம் பெருகுமாறு செய்ய வேண்டுவர்.



மன்னனுக்குற்ற தீங்குகளைப் போக்குமாறு மருவூர்ப்பாக்கத்திலும், பட்டினப்பாக்கத்திலும் உள்ள வீரர்கள் பூதத்தை வேண்டுவர்; பலிகள் இடுவர்; பகைவரை வென்று தாம் அறுத்த தலைகளைப் பலி பீடத்திலிட்டு, புலியைக் கொன்ற ஏற்றின்தோல் போர்த்த மயிர்க்கண் முரசத்தை ஆர்த்து, அரசனுக்கு நன்மை விளைவிக்குமாறு வேண்டுவர்.

## கோயில்கள்

காவிப்பூம்பட்டினத்தில் சிவன் கோயில், பெருமாள் கோயில், பலராமன் கோயில், இந்திரன் கோயில், முருகன் கோயில், சூரியன் கோயில், சந்திரன் கோயில், புத்தர் கோயில், அருகதேவன் கோயில் என்னும் பல கோவில்கள் இருந்தன. மணர் மடத்தில் துறவு பூண்ட ஆடவரும் பெண்டிரும் இருந்தனர். ஆடவர் அடிகள் என்றும், பெண்டிர் அடிகள் என்றும் குரத்திமார் என்றும் அழைக்கப்பட்டனர். பௌத்த சமய ஆண் துறவி 'பிக்கு' என்றும் பெண் துறவி 'பிக்குணி' என்றும் அழைக்கப்பட்டனர்.

## வனங்கள்

காவிரிப்பூபட்டினத்து வனங்களுள் சிலவற்றைப் பற்றி அறிவோம்: அங்கு, தண்ணீரை நிரப்பவும் அத்தண்ணீரை வெளியேற்றவும் வல்ல இயந்திர அமைப்புடைய வாவியைக் கொண்ட **மலர்வனம்** ஒன்றிருந்தது. அஃது அரசர்க்கும் அமைச்சர்க்கும் உரிய இடமாகும். **உய்யானவனம்**, சூரிய கிரணத்தால் சிறகை இழந்த சம்பாதி என்ற பறவையிருந்த **சம்பாதிவனம்**, காவிரியின் தந்தையென்று சொல்லப்படும் கவேரன் தவமிருந்த **கவேரவனம்**, **உவவனம்** என்பன பிற வனங்களாகும். உவவனத்தில் பளிங்குமண்டபம் ஒன்றிருந்தது. அது தன் அகத்துள் இருப்பவர் ஓசையை வெளிப்படுத்தாது, அவர் தம் உருவைமட்டும் வெளிப்படுத்தும் தன்மையது. அம்மண்ட

பத்தில் மாணிக்கச்சோதி பரந்த பதுமபீடம் ஒன்று இருந்தது.

## இடுகாடு

காவிரிப்பூம்பட்டினம் தோன்றிய காலத்தே உடன் தோன்றியதாகக் கூறப்படும் இடுகாடு **சக்கரவாளக்கோட்டம்** எனப்பட்டது. அது நாற்புறத்தும் மதில்களால் சூழப் பட்டது. காளிகோட்டமும், பல்வகை மன்றங்களும், தவத் தவர், அரசர், கற்புடை மகளிர், முதலியோர்க்கு எழுப்பப் பட்ட கோட்டங்களும் அங்கிருந்தன. சக்கரவாளக் கோட் டத்தினை மணிமேகலை சிறப்பித்துக் கூறுவதைக் காண் போம்:

" இந்தந்த சாதியினர் இந்தந்த இடங்களில் புதைக் கப்பட்டுள்ளனர் என்பதை விளக்கப் பல கோட்டங்கள் அங்கிருந்தன ; இடுகாட்டுத் தெய்வங்கள் உறையத் தக்க தூண்கள் பல இருந்தன ; துறவிகளை வழிபடுவோர் ஓசை, பிணங்களை அடக்கம் செய்ய வருவோர் எழுப்பும் அவலக் குரல், நரிகளின் ஓசை, கோட்டான்களின் ஓசை அங்கு இரவும் பகலும் கேட்டுக்கொண்டேயிருக்கும். பேய்கள் வாழும் வாகை மன்றம், பறவைகள் தங்கும் வெள்ளில் மன்றம், காபாலிகள் வாழும் வன்னி மன்றம், விரதத்தால் இளைத்த மேனியுடையோர் இறந்தபின் அவர்தம் தலைகளை மாலையாகக் கட்டுவோர் வாழும் இரத்தமன்றம், பிணங் களைத் தின்போர் வாழும் வெள்ளிடை மன்றம் என்னும் ஐவகை மன்றங்கள் சக்கரவாளக் கோட்டத்தில் இருந்தன.

" ஊழினால் மாண்டவர்களை எந்தத் தெய்வமும் மீட்க முடியாது என்பதை மெய்ப்பிக்கச் சம்பாவதி தெய்வம் சக்கரவாளக் கோட்டத்தும் பிரமர் முதலான தேவர்களை தன்னாற்றலால் இங்குக் கூட்டிற்று. அதன் பின்னரே சக்கரவாளக் கோட்டம் இங்கும் அமைக்கப்பட்டது."



## பூம்புகார்ச் சிறப்பு

கண்ணகி - கோவலன் வரலாற்றைக் கூறும் காவிய மாகிய சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் காவிரிப்பூம்பட் டினத்தைப் பின்வருமாறு சிறப்பித்துள்ளார் : "காவிரிப்பூம் பட்டினம் சோழர்குடி தோன்றியபோதே உடன்தோன்றியது; உலகில் நிலைத்த புகழ்பெறுவது; பழங்குடிகளைக் கொண் டது; குடிகளை வளமாக வாழவைப்பது ; அவர்கள் வேற் றிடம் செல்லவேண்டும் என்று எண்ணச் செய்யாதது," என்றெல்லாம் கூறுகின்றார்.

**" பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்**
**வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ(டு)**
**ஓங்கிப் பரந்தொழுக லான் "**
**" பதிஎழு வறியாப் பழங்குடி கெழீஇய**
**பொதுவறு சிறப்பின் புகார் "**

கண்ணகி, ஆராயாது தன் கணவனைக் கொன்று விட்ட மன்னவனிடம் முறையிடச் சென்றாள். அவன் அவளைக் கண்டு, ' நீர்வார்ந்த கண்களோடு எம்முன் வந்து நின்ற மடக்கொடியே, நீ யார்?' என்று கேட்டான். அதற்குக் கண்ணகி நீண்ட பதிலளிக்கின்றாள். 'கோவலன் மனைவி நான்' என்று மட்டும் அவள் கூறியிருக்கலாம். ஆனால் அத்துடன் அமைய அவள் விரும்பவில்லை. "ஒரு புறாவின் உயிரைக் காப்பதற்காகத் தன் உடலையே பருந் துக்கு அளித்து அகமகிழ்ந்த சிபி வாழ்ந்ததும், ஆவின் கன்றை அறியாது தேர்க்காலில் அகப்படுத்திய தன் மகனை முறை செய்த **மனுச்சோழன்** வாழ்ந்ததும், **யான் எனது** என்ற பற்றுக்களினின்று நீங்கிய மன்னர்களால் ஆளப்பட்டதுமான **புகார் நகர்** நான் வாழும் பதியாகும்" என்று கண்ணகி கூறினாள்.

**" தேரா மன்னா , செப்புவ துடையேன்**
**எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்**

புள்ளுறு புன்கண் தீர்த்தோன், அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே"

"'யான்,' 'எனது' என்னும் பற்றுக்களினின்று நீங்கிய சான்றோர்கள் வழி ஆட்சி நடந்தமையால், பொதிய மலையைப் போன்றும் இமயமலையைப் போன்றும் புகார் என்றும் அழிவுறாது நிலைபெற்றுச் சிறப்புடன் விளங்கும் என்று கல்வி கேள்விகளில் வல்ல சான்றோர் கூறுவர்" என்றும் இளங்கோவடிகள் தமது காப்பியத்தின் தொடக்கத்திலேயே கூறியுள்ளார்.

## பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டினம்

பட்டினப்பாலை பத்துப்பாட்டில் ஒரு பாட்டாகும். கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர் அதனைப் பாடியுள்ளார். இப்பாட்டின் தலைவன், "பட்டினத்தையே நான் எனக்குரியதாய்ப் பெறுவேனாயினும் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன்" என்று கூறுகின்றான். பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம். பட்டினங்கள் எல்லாவற்றையும்விட, நகரங்கள் எல்லாவற்றையும்விடக் காவிரிப்பூம்பட்டினம் சிறந்திருந்தமையால்தான் அவன் 'பட்டினத்தைப் பெறுவதாயினும் தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று கூறினான். இப்பாட்டில் காவிரிப்பூம்பட்டினம் கூறப்பட்டுள்ளவாறு அறிவோம்:

"சோழநாடு வளம் மிக்கது. சோழநாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம். காவிரிப்பூம்பட்டினத்தின் மதில் வலிமை மிக்கது. அம்மதிலில் புலி அடையாளம் பொறிக்கப்பெற்ற கதவுகள் உண்டு. நகரில் உள்ள உணவுச்சாலைகளில் வடிக்கப்படும் தண்ணீர் ஆற்றுவெள்ளம்போல ஓடும். அதனைப் பருக எருதுகள் ஓடும். எருதுகள்



அதனைப் பருகத் தம்முள் போரிடும். அதனால் அது மண் கலந்து சேறாகி விடும். தரை காய்ந்த பின் தரையின்மீது தேர்கள் ஓடுதலால் புழுதி மேலே எழும். அப் புழுதி ஓவியங்கள் தீட்டப்பெற்ற வெண்சுவருடைய கோவில்கள்மீது படிந்து அவற்றை மாசுப்படுத்தும். அமணப்பள்ளிகள் நகரில் பல உண்டு. அவற்றில் குளங்கள் உண்டு. முனிவர்கள் இளமரக்காவில் தங்கியிருப்பர். அம்முனிவர்கள் நெருப்பில் நெய்பெய்து ஓமம் செய்வர். குயில்கள் ஓமப் புகையை மேகம் எனக் கருதி மருளும். அம் மருட்சியால் அவை காளி கோட்டத்தில் உள்ள புறாக்களோடு பழமரப் பொந்துகளில் தங்கும்.

"பட்டினப்பாக்கத்தில் பரதவர் மிகுதியாக உள்ளனர். அவர்கள் இறால்மீனின் இறைச்சியையும் வயல் ஆமையின் இறைச்சியையும் உண்பர். பரதவர் குல மகளிர் அடம்பின் பூவையும் ஆம்பற் பூவையும் பறித்துச் சூடுவர். அவர்கள் பொதுவிடத்தில் பலராகக் கூடுவர்; ஆட்டுக் கிடாய்களையும் கவுதாரிகளையும் போரிடச் செய்து பொழுது போக்குவர்; மற்போரும் கருவிப்போரும் புரிவர்; கவண்கல் வீசி விளையாடுவர். கவண்கல்லுக்கு அஞ்சிப் பன்றிகளும் கோழிகளும் ஓடும். பரதவர் முழுநிலா இரவில் மீன்பிடிக்கச் செல்லார்; தழையாடை அணிந்த தம் குலமகளிருடன் மணல் முற்றத்தில் கூடி மகிழ்வர்; அங்குச் சினைச் சுறாவின் கொம்பை நடுவர்; அதனிடத்து ஏறிய தெய்வத்தை வழிபடுவர்; அதன்மீது வெண்டாளிப் பூவால் கட்டிய மாலையையும் தாழம்பூவையும் சூடுவர்; பனையிலிருந்து இறக்கிய கள், நெல்லாற்சமைத்த கள் ஆகியவற்றைப் பருகுவர்; காவிரி கடலொடு கலக்குமிடத்தில் நீராடுவர்; பின்னர்க் கடல்நீர் உப்பு நீங்கும் பொருட்டு ஆற்றுநீரில் குளிப்பர். உயர்ந்த மாடங்களிலிருந்து செல்வமகளிர் பாடுவர். அப் பாடல்களைக் கேட்டுப் பரதவர் மகிழ்வர். இரவில் உயர்ந்த மாளிகைகளில் விளக்குகள் எரியும். விடியற்காலையில், கட்டுமரங்களில் செல்லும் பரதவர்கள் அவ்விளக்கு

களை அறிவர். காலையில், பாடுமகளிர் பக்திச் சுவையுள்ள பாடல்களைப் பாடுவர் ; புல்லாங்குழல், யாழ், முரசு முதலிய இசைக் கருவிகள் முழங்கும்.

“பரதவர் வாழும் அகன்ற தெருவில் பண்டசாலை உள்ளது. அது காவலைக் கொண்டது. பண்டங்கள் சுங்கம் மதிப்பிடப்பட்டுப் புலி இலச்சினை இடப்படும். அவை கப்பல்களில் ஏற்றும் பொருட்டுப் பண்டசாலை முற்றத்தில் கிடக்கும். சுங்கம் கொள்பவர் சிறுபொழுதும் ஓய்வின்றி நாடோறும் சுங்கம் கொள்வர். பண்டசாலையில் முற்றத்தில் கிடக்கும் மூட்டைகளின் மீதேறி நாய்களும் ஆட்டுக்கிடாக்களும் விளையாடும்.

“காவிரிப்பூம்பட்டினத்து உயர்ந்த மாடங்கள் பல ஏணிப்படியை உடையனவாய் இருக்கும். அம் மாடங்களில் வாழ்ந்த மகளிர் சிவந்த அடியினர்; மயிலின் சாயலினர். அவர்கள் சாளரங்கள் வழியே கடைத் தெருவை நோக்குவர். கடைத்தெருவில் சிலர் பாடுவர். புல்லாங்குழல், யாழ், முழவு, முரசு முதலிய இசைக்கருவிகளைப் பலர் இயக்கிய வண்ணமிருப்பர். அப்போது முருகக் கடவுள் முதலிய கடவுளர்க்கு விழாக்கள் நடைபெறும். உயர்ந்த மாடங்களில் வாழும் மகளிர் தம் கரங்களைக் குவித்து இறைவனை வணங்குவர்.

“ கடைத்தெருவில் இரண்டு வரிசைகளிலும் கொடிகள் நாட்டப்பட்டிருக்கும். அவை கரும்பின் பூக்களைப் போலிருக்கும். கூல வகைகள் நிரப்பப்பெற்ற அறைகளில் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். நூல் வல்லோர் வாதம் செய்யக் கொடிகள் கட்டியிருப்பர். துறைமுகத்தில் நிற்கும் கப்பல்கள்மீது கொடிகள் கட்டப்பட்டிருக்கும். கடைகளின் தன்மை பற்றி அறிவிக்க ஒவ்வொரு கடையிலும் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். அதனால் கதிரவனின் ஒளிக்கதிர்கள் தெருவில் படுவதில்லை என்னலாம்.



“நகரத்துக் கடைத்தெருவில் மலைநாட்டுப் பொருள்களும், கீழ்க்கடலில் பிறந்த பவளமும், கங்கையாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், காழக நாட்டுப் பொருள்களும், சீன நாட்டுப் பொருள்களும், இலங்கைப் பொருள்களும், காவிரியாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும் மிகுதியாகக் குவிந்து கிடக்கும். வெளிநாடுகளிலிருந்து வாணிகத்தின் பொருட்டு வந்த பல்வேறு மொழி பேசுவோர் நகரில் இருந்தனர்.

“புகாரில் அம்பலம் ஒன்று உண்டு. அவ்வம்பலத்தில் **அருள்தறி** நிறுத்தப்பட்டுள்ளது. சிறை செய்யப்பட்ட பகைவர் மகளிர் துறையில் நீராடி அம்பலத்தை மெழுகுவர்; விளக்கை ஏற்றி வைப்பர். அம்பலத்தில் பல்நாட்டாரும் சென்று வணங்குவர்.”

## காவிரிப்பூம்பட்டினத்து அழிவு

முதல் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவுக்கு கிரேக்க நாட்டு யாத்திரிகர்கள் வந்தனர். அவருள் தாலமி என்பார் ஒருவர். அவர் காவிரிப்பூம்பட்டினத்தைக் **காபேரிஸ்** என்று குறித்துள்ளார். பல்லாற்றானும் சிறப்புற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் எவ்வாறு அழிந்தது? காவிரிப்பூம்பட்டினத்தின் அழிவைப்பற்றி மணிமேகலை பின்வருமாறு கூறுகின்றது :

“நெடுமுடிக்கிள்ளி நாகநாட்டரசன் மகள் பீலிவளை என்பவளை மணந்திருந்தான். அவர்களுக்குப் பிறந்த மகனைக் கடல் விபத்திலிருந்து தேடிக் காண நெடுமுடிக் கிள்ளி அலைந்து திரிந்தான். அதனால் அவன் இந்திர விழாவை மறந்தொழிந்தான். காவிரிப்பூம்பட்டினம் மணிமேகலா தெய்வத்தின் சாபத்தால் கடல்கோளுக்கு இரையாகி அழிந்தது.”

"தீவகச் சாந்தி செய்யா நாளுள்
காவலன் மாநகர் கடல்வயிறு புகூஉம்"

## புத்ததத்தர்

புத்ததத்தர் என்பவர் பௌத்த சமயப் பெரியாராவர். இவர் காவிரிப்பூம்பட்டினத்தைத் தமக்குரிய இடமாகக் கொண்டார்; அங்குத் தங்கியிருந்தபோது "அபிதம்மாவதாரம்" என்னும் நூலை எழுதி முடித்தார். "காவிரிப் பூம்பட்டினம் செல்வர் பலரைக் கொண்ட நாடு. அங்கு மாடமாளிகைகளும் மலர் வனங்களும் பலவாக இருந்தன. அரண்மனைகள் இருந்தன. கண்டதாசன் கட்டிய புத்த விகாரத்தில் இருந்துகொண்டு, என மாணவி சுமதியின் வேண்டுகோளால் இந்நூலை எழுதினேன்," என்று அவர் தமது "அபிதம்மாவதார"த்தில் குறித்துள்ளார். புத்த தத்தர் கி. பி. 5-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். நகரத்தின் ஒரு பகுதி கடலுக்கு இரையான பிறகு, எஞ்சிய பகுதி இருந்திருத்தல் வேண்டும். அப்பகுதியில் புத்த தத்தர் வாழ்ந்தனராகலாம்.

## ஏழாம் நூற்ருண்டில்

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த சமய குரவரான திருஞானசம்பந்தர் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துள்ளார். "புகார், மாளிகைகள் நிறைந்த நகரம்; வளப்பம் மிகுந்த நகரம். அதனை அடுத்துள்ள சாய்க்காடு மலர் பூத்த வாவிகள் பலவற்றைக் கொண்டுள்ளது. சாய்க் காட்டில் சோலைகள் மிகுதியாக உண்டு. அச் சோலைகளில் மயில்கள் ஆடும். கோயிலில் பேரி முதலிய இசைக்கருவி கள் முழங்கும்," என்று திருஞான சம்பந்தர் திருச்சாய்க் காட்டுப் பதிகத்துள் கூறியுள்ளார்.

சாய்க்காட்டிற்குக் கிழக்கே பல்லவனீச்சரம் என்னு மொரு தலம் உள்ளது. அத்தலமும் சம்பந்தரால் பாடப்



பெற்றதாகும். "மக்கள் பூம்புகாரைச் சேர்ந்த பல்லவனீச் சரத்தை வழிபடுகின்றார்கள். அங்குக் குழல், வீணை, மொந்தை, முழவு முதலிய இசைக்கருவிகள் ஒலிக்கும். நடன மாதர்கள் கழலின் ஓசையும் நடனமும் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டன. பல்லவனீச்சரத்தில் நடன மாதர்கள் நடனமிடுகின்றனர். அப்போது தண்டு, உடுக்கை, தாளம், தக்கை முதலியன ஒலிக்கும்" என்று சம்பந்தர் பல்லவனீச்சரம் பதிகத்தில் குறித்துள்ளார். இச்சான்றுகளால், மணிமேகலை காலத்திற்குப் பின்னும் பூம்புகார் போற்றத்தக்க நகரமாகக் கி. பி. ஏழாம் நூற் றுண்டுவரை இருந்தது என்பதையும் அறியலாம். கி. பி. ஏழாம் நூற்றுண்டுக்குப் பிறகு இந்நகரைப் பற்றிய செய்தி கள் தமிழ் நூல்களில் இடம் பெறவில்லை.

## இன்றைய புகார்

மாயூரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் போகும் வழியில் பன்னிரண்டு கல் தொலைவில் கை காட்டி மரம் ஒன்றுள்ளது. அதிலிருந்து கடற்கரைவரை மூன்று மைல் நீளமுள்ள பாதை செல்கின்றது. அப்பாதையின் இருமருங்கிலும் வீடுகள் இருக்கின்றன. அங்குப் பழங் குடி மக்கள் வாழ்கின்றனர்; இரண்டு அந்தணர் சேரிகள் உள்ளன; அங்கு அந்தணர்கள் வாழ்கின்றனர். சாலையி லிருந்து பிரிந்து செல்லும் கிளைப்பாதைகள் மேடுபள்ள முள்ளவை. சாலையின் இருபுறங்களிலும் உறைகிணறுகள் உள்ளன. அங்குள்ள மக்கள் புதிதாகக் கிணறுகளைத் தோண்டியதில்லை என்று கூறுகின்றனர். நெடுஞ்சாலைக்கு இடப்புறத்தில் சிறிது தொலைவில் பெருந்திடல்கள் உள் ளன. அங்கு வேளாளர்கள் இருந்தனர், அக்கிரகாரம் இருந்தது என்றெல்லாம் இப்பொழுது வாழும் முதியவர் கள், தங்களுக்குத் தங்களுடைய முன்னவர்கள் கூறிய தாகக் கூறுகின்றனர். எங்குத் தோண்டினாலும் மண் பாண்டச் சிதைவுகளும், செங்கற்களும் கிடைக்கின்றன.

## கோவில்கள் நிலை

மூன்றுகல் தொலைவுள்ள அந்தப்பாதையில் ஆங்காங்கே கோவில்கள் இருக்கின்றன. அவற்றுள் சில கீற்றுக் கூரையும் சுவர்களும் உடையவை; சில மண்சுவர்களும் கீற்றுக் கூரையும் உடையவை; சில செங்கற் சுவர்களும் ஓட்டுக்கூரையும் கொண்டவை. ஓர் அறை, அறையைச் சுற்றிலும் அகன்ற திண்ணை, அறையுள் சுதையால் அமைந்த சிலைகள், சுவர்மீது கடவுளர் ஓவியங்கள்; சில உள்ளறைகளில் கற்சிலைகள் முதலியன அக் கோவில்களில் உள்ளன. பல கோவில்களில் கூரைகள்மீது கலசங்கள் உள்ளன. சில இடங்களில் மூன்று கலசங்கள் உள்ளன.

## சாய்க்காடு

இது நெடுஞ்சாலையின் நடுவில், அதாவது, நெடுஞ்சாலையில் ஏறத்தாழ ஒன்றரைக்கல் தொலைவில் உள்ளது. கோவிலுக்கு எதிரே பெருங்குளம் உள்ளது. அக்குளத்தைச் சுற்றி நீண்ட கூடம் கூரையுடையதாக உள்ளது. கோவிலுக்குக் கோபுரம் இல்லை. சுற்றுச் சுவர் பழுது பட்டுள்ளது. கோவில் மாடக்கோவில் அமைப்பைச் சேர்ந்தது. சிவபெருமானுக்கு நேர் எதிரே உள்ள வாசல் சிறியது; யானை புகமுடியாதது. அம்மனுக்கு எதிரே உள்ள வாயில் பொதுவாயிலாகும். அந்த வாயில் கல்தேர் அடிப்படையுடையது; மேலே செங்கற்சுவர்கள் தேர் உருளைகளுடனும் கற்குதிரைகளுடனும் காட்சி அளிக்கின்றன. தேருக்கு இருபுறங்களிலும் வாயிற்படிகள் உள்ளன. அப்படிகள் மீதேறிக் கோவிலுக்குள் செல்ல வேண்டும். இக்கோவில் ‘சிலந்திச் சோழன்’ (கோச்செங்கட் சோழன்) என்பவனால் கட்டப்பட்டது என்று அறிஞர் கூறுவர்.

## பல்லவனீச்சரம்

சாய்க்காட்டுக் கோவிலுக்குச் சிறிது தொலைவில் —ஏமார் இரண்டு பர்லாங்கு தொலைவில் கடற்கரை

நோக்கிச் செல்லும் பாதையில் பல்லவனீச்சரம் உள்ளது. இக்கோவில் நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. திருச்சுற்றில் உள்ள பிள்ளையார் கோவில் தூபி தூங்கும் சிங்க வடிவில் அமைந்துள்ளது. அது பார்க்க அழகாக உள்ளது. இது பல்லவ வேந்தனால் கட்டப்பெற்ற சிவன் கோவில் ஆதலின் பல்லவனீச்சரம் எனப்பட்டது.

---

V2;11
N58;1

# 4. சோழ மன்னர்கள்

## சோழநாடு

**சோழநாடு** என்பது இன்றுள்ள தஞ்சாவூர் திருச்சி மாவட்டங்களும், தென்னார்க்காடு மாவட்டத்தில் வெள்ளாற்றுக்குத் தென் பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இப்பகுதியில் காவிரியும் அதன் கிளையாறுகளும் பாய்கின்றன. அதனால் சோழநாடு நிலவளமுடையதாகியது. "சோழநாடு சோறுடைத்து" என்னும் முதுமொழியும் இக்காரணம் பற்றியே எழுந்தது.

வளம் மிக்க சோழநாட்டை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சோழ மன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் வளம் மிகுந்த நாட்டை ஆண்ட காரணத்தால் 'வளவர்கள்' எனப்பட்டனர். சோழ மன்னர்கள் மிகப் பலராயினும், அவருள் ஒரு சிலரைப்பற்றி நாம் விரிவாக அறிவோம்.

## கரிகாலன்

சோழ மன்னர்களுள் சிறந்தவன் கரிகாலன். இவன் மக்கள் நல்வாழ்வு கருதிப் பல நற்செயல்கள் புரிந்தான்; காடுகளைக் கெடுத்து நாடாக்கினான். அதனால் இவன் **திருமாவளவன்** எனப்பட்டான். புலவர் பெருமக்கள் இவனைக் கரிகால் பெருவளத்தான் என்றும், பொன்னி நல் வளவன் என்றும், வளவர்கோன் என்றும் பாராட்டி மகிழ்ந்தனர்.

## போர்ச்செயல்கள்

கரிகாலன் சிறந்த போர்வீரன். இவனை எதிர்த்துப் பொருதவர் வெற்றிபெறுவதில்லை. **கோவில் வெண்ணி**



என்னுமிடத்தில் கரிகாலன் தன்னை எதிர்த்த பெருஞ் சேரலாதனையும், பாண்டியனையும், வேளிர் முதலிய குறுநில மன்னரையும் முறியடித்தான்; வாகை என்னும் இடத்தில் ஒன்பது குறுநில மன்னரை வென்றான்; அருவா நாட்டுக் குறும்பரை அடக்கினான்; அந்நாட்டை இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து வேளாளரைக் குடியேற்றுவித்தான்; வேங்கடத்தில் வடுக மன்னனை வென்றான்; நாகப்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு பன்றி நாட்டை ஆண்ட ஒளி நாகரை வென்றான்; பூழி, குடம், குட்டம், வேணாடு, கற்காநாடு எனப்பட்ட இவ்வைந்தும் சேர்ந்த சேரநாட்டை-வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சேரமன்னனை வென்றான்; முல்லைநிலப் பொதுவரையும், இருங்கோவேள் முதலிய வேளிரையும் வென்றான்; பாண்டியனைத் தன் ஆணைக்குட்படுத்தினான். சுருங்கக்கூறின், கரிகாலன் தமிழகம் முழுவதையும் வென்றான் என்று கூறலாம்.

பின்னர்க் கரிகாலன், வடநாடு சென்று இமயத்தில் புலிக்கொடி பொறித்தான்; வச்சிரம், மகதம், அவந்தி முதலிய நாடுகளில் ஆண்ட வடநாட்டு மன்னரை வென்றான்; கடற்படை நடத்தி இலங்கைமேற் படையெடுத்தான்; அப்போது இலங்கையை ஆண்ட சிங்கள மன்னனை வென்றான்; பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைப்பிடித்து வந்தான்.

108745

## நற்செயல்கள்

கரிகாலன் தான்வென்ற நாடுகளை வலிய படைகளை அமைத்துக் காத்தான்; மக்கள் நல்வாழ்வு கருதிக்காடுகளை அழித்து நாடாக்கினான்; குளங்களை வெட்டினான்; காவிரியின் வெள்ளத்தால் ஏற்பட்ட பேரிழப்பைத் தடுக்க காவிரி, கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளின் வெள்ளம் தனித்தனியே பிரிந்து உழவுத் தொழிலுக்குப் பயன்படும் வண்ணம் அணைகளும், வாய்க்கால்களும், மதகுகளும் அமைத்தான்.

கரிகாலன் அரசியற் காரியங்களைத் தனித்தனித் துறைகளால் பிரித்து அறிஞர்களுடைய அறிவுரைகளையேற்று நடத்தினான். கரிகாலனது மாமனார் இரும்பிடர்த் தலையார் இத்துறையில் இவனுக்கு உற்ற துணையாக இருந்தார். இவன் தன்னுடைய வருமானத்தில் பெரும் பகுதியைக் கலை, கல்வி, தொழில் வளர்ச்சிகளுக்குச் செலவிட்டான். இவன் காலத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலரும் கல்வி கற்றனர்.

## நோபெல் பரிசு

ஆல்பிரெடு நோபெல் என்னும் அறிஞர் கலை, இலக்கியம், விஞ்ஞானம், அமைதி போன்ற பலவேறு துறைகளில் வல்லவர்க்கு ஆண்டுதோறும் பெரும்பொருளைப் பரிசளிக்கும் முறையினை நிறுவியுள்ளார். அவர் பெயரால் நிறுவப்பட்டுள்ள அப்பரிசு முறை இன்றளவும் அந்தந்தத் துறையில் வல்லவர்களுக்குத் தரப்பட்டு வருகின்றது. இந்த முறை கரிகாலன் காலத்திலேயும் இருந்தது. உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் கரிகாலனது வீரம், வண்மை, அரசியல், செங்கோன்மை, அவனது தலைநகர்ச் சிறப்பு முதலியவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளார். அவர் பாடிய நூலுக்கும் **பட்டினப்பாலை** என்பது பெயர். கரிகாலன் புலவரது புலமையைப் பாராட்டி அவர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன்னைப் பரிசிலாகக் கொடுத்தான். இதனை,

**"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்**
**பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்**
**பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"**

எனவரும் கலிங்கத்துப்பரணி செய்யுளால் அறியலாம்.

## பொது நோக்கு

கரிகாலன் சைவ சமயத்தவன்; காஞ்சியில் ஏகம்ப வாணர் கோவிலைக்கட்டி வழிபட்டான்; இவனது ஆட்சிக்



காலத்தில் சோழநாட்டில் பௌத்த மடங்களும் சமணப் பள்ளிகளும் சிறந்திருந்தன. அவற்றின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் கரிகாலன் தடையாக இல்லை. காவிரிப்பூம்பட்டினத்தில் யவனர், சாவகர், சோனகர் முதலிய பிறநாட்டார் குடியேறியிருந்தனர். கரிகாலன் அவர்களை மதித்துப் போற்றிச் சிறப்பித்தான்; அந்தணர்கள் தங்கள் மறைக் கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்குமளவில் ஆதரவளித்தான்.

## குடும்பம்

கரிகாலனுக்குச் சேட்சென்னி, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்னும் ஆண் மக்களும் ஆதிமந்தியார் என்னும் பெண்மகளும் உண்டு. ஆதிமந்தியார் கல்வி கேள்விகளில் சிறந்தவர். இவர் பாடியனவாகச் சில செய்யுட்கள் சங்க இலக்கியங்களுள் உள்ளன. இவர் சேர மன்னன் ஆட்டனத்தியை மணந்துகொண்டார் என்று அறிஞர் கூறுவர்.

## புகழ்பாடிய புலவர்கள்

கரிகாலனது அறம், வீரம், வண்மை முதலிய தன்மைகளைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் பலராவர். அவர்கள், மாமூலனார், பரணர், நக்கீரர், உருத்திரங்கண்ணனார், முடத்தாமக் கண்ணியார், கருங்குழல் ஆதனார், கழாத்தலையார் முதலியோராவர். முடத்தாமக் கண்ணியார் கரிகாலன்மீது பாடிய நீண்ட பாடலின் பெயர் "பொருநராற்றுப்படை" என்பது. உருத்திரங்கண்ணனார் "பட்டினப்பாலை" பாடிப் பரிசில் பெற்றார். இவ்விரண்டும் பத்துப்பாட்டு என்னும் பெருநூலின் பகுதிகளாகும். வெள்ளி வீதியார், வெண்ணிக்குயத்தியார், குறமகள் இளவெயினி, குறியெயினி, காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், மாசாத்தியார், எயிற்றியார், காமக்கணிப்பசலையார், பூங்கண் உருத்திரையார், பொன்முடியார், பாரிமகளிர், ஔவையார் முதலிய பெண்பாற் புலவர்கள் இவன் காலத்தவராவர்.

## பொருநராற்றுப்படையில் கரிகாலன்

பொருநராற்றுப்படையைப்பற்றி முன்னர் அறிந்தோம் அல்லவா? பொருநன் என்பவன் பாடுங்கூத்தனுவான். பொருநன் ஒருவன் கரிகாலனிடம் பரிசில் பெற்று மீண்டு வருகிருன். வழியில் அவன் வேறொரு பொருநனைக் கண்டான். அவனைக் கரிகாலனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்ததே பொருநராற்றுப் படையாகும். பொருநராற்றுப் படையில் கரிகாலனுடைய போர்த்திறன், நற்பண்புகள், சோழநாட்டு வளம் முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன. இப்பாடல் 248 அடிகளை உடையது.

மாமர நிழலில் விறலி பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய சுற்றத்தார் உடனிருந்தனர். அப்போது அவ்வழியே வேறொரு பாணன் வந்தான். அவன் கரிகாலனிடம் பரிசில் பெற்று மீண்டவன். அவன் இருந்த பாணனைப் பார்த்துப் பின்வருமாறு பேசலானுன்:

"யாழை உடைய கூத்தர்க்குத் தலைவனே, நான் என் வறுமையைப் போக்கிக்கொள்ள கரிகாலனைக் காண விழைந்தேன்; ஆரவாரம் மிக்க அவனது அரண்மனை நோக்கி நடந்தேன்; காவலர்களைக் கேளாமலேயே உள் நுழைந்தேன். அந்த மகிழ்ச்சியில் என் களைப்பு நீங்கியது. எனது வறுமை தீர்க்கும்படி இனிய ஒரு பாட்டைப் பாடினேன்.

"விடிவெள்ளியின் வெளிச்சம் தோன்றிய விடியற் காலத்தில் யான் பாடினேன். கரிகாலன் என் பாட்டைக் கேட்டு எழுந்துவந்தான்; முகமன் கூறி என்னை உபசரித்தான்; என்னுடைய கந்தலாடையைக் களைந்து பூ வேலைப்பாடு கொண்ட உயர்ந்த பட்டாடையை உடுக்குமாறு செய்தான்.

"அரண்மனையில் அழகிய மகளிர் பலர் இருந்தனர்; அவர்கள் வளவனின் குறிப்பறிந்து ஒழுகினர்; பொற்கிண்



ணங்களில் மதுவை வார்த்துத் தந்தனர்; ஆடலாலும் பாடலாலும் அரசனை மகிழ்வித்தனர். அவர்கள் வார்த்துத் தந்த மதுவைப் பருகினேன். அதனுல் என் உடல் வருத்தம் ஒழிந்தது.

"நறுமணப் பொருள்களை உடலெல்லாம் பூசிக் கொண்ட நாங்கள் புத்தாடைகளை அணிந்துகொண்டோம். கரிகாலனது ஏவலர்கள் எங்களை மகிழ்ச்சியுடன் உபசரித்தனர். செம்மறிக்கிடாயின் புழுக்கிய இறைச்சியை நாங்கள் உண்டோம். இரும்புக் கம்பியில் கோத்துப் பொரித்த கொழுத்த இறைச்சிப் பொறியலைச் சுவையுடன் உண்டோம். பல வடிவங்களில் செய்யப்பட்ட பலவகைத் தின்பண்டங்களை உண்டு, கள்ளுண்டு பல நாட்களைக் கழித்தோம். நாங்கள் சோற்றையும் உண்ணுதல் வேண்டும் என்று எண்ணிய கரிகாலன், முல்லை அரும்பை ஒத்த சோற்றையும் பொறிக் கறியையும் வயிறு புடைக்க உண்ணுமாறு செய்தான்.

"நாங்கள் ஊருக்குச் செல்லவேண்டும் என்று கூறி விடை கேட்டோம். கரிகாலன் எங்கள் வேண்டுகோளைக் கேட்டுச் சினந்தான்; ஆயினும் எங்களைத் தடுக்காமல் பல யானைகளைக் கன்றுகளுடன் கொடுத்தான்; ஊர்திகள், அணிகலன்கள், ஆடைகள் முதலியவற்றையும் வழங்கினுன். கரிகால் வளவனது கொடை வளத்தால் எங்கள் வறுமை கழிந்தது. வறுமையற்ற பெருவாழ்வு வாழ எண்ணி வருகின்றேம்.

"கரிகாலன் சினத்தில் முருகப்பெருமானை ஒப்பவன். அவன் அன்னை வயிற்றிலிருந்தே அரசுரிமையைப் பெற்றவன்; இளமை முதலே ஆற்றல் மிக்கவன். ஆத்திமாலையை அணிந்தவனுன கரிகாலன் பனம்பூ மாலை அணிந்த சேரனேடும் 'வெண்ணி' என்னும் போர்க்களத்தில் போரிட்டு வெற்றி கண்டவன்.

"பொருநனே, நீ விரைவில் எழுந்திரு பசிப்பிணி மருத்துவனாகிய கரிகால் வளவனிடம் செல். நீ நலம் பெறுவாய்."

## தலைநகரம்

சோழ மன்னர்களின் தலைநகரமாக **உறந்தை** இருந்து வந்தது. கரிகாலன் வாணிகத்தையும் பிற துறைகளையும் வளர்த்தற்கு உரிய இடம் துறைமுகப்பட்டினமேயாகும் என்று கருதிப் புகார் நகரைப் புதுப்பித்தான்; உறந்தையிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தலைநகரை மாற்றினான். இவன் காலம் முதலே காவிரிப்பூம்பட்டினம் சிறந்த தலைநகரமாய்த் திகழ்ந்தது.

## நெடுமுடிக்கிள்ளி

இவன், நெடுமுடிக்கிள்ளி, வென்வேற்கிள்ளி, மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி, கழற்கிள்ளி, கிள்ளி எனப் பலவாறு மணிமேகலையில் குறிக்கப்பட்டுள்ளான். இவன் சேரன் செங்குட்டுவனால் சிறப்புப் பெற்றவன். நெடு முடிக்கிள்ளியின் தந்தையும் செங்குட்டுவன் தாய் நற்சோணையும் உடன் பிறந்தவராவர். ஆகையால், இவன் செங்குட்டுவனுக்கு 'மைத்துனச் சோழன்' எனப்பட்டான். நெடுமுடிக்கிள்ளியின் தந்தை இறந்தவுடன் அரச பதவி குறித்துக் குழப்பம் ஏற்பட்டது. அவனது பங்காளிகள் என்பதின்மர் அவனை எதிர்த்துப் பொருதனர். செங்குட்டுவன் இதனை அறிந்தான்; அவர்கள் அனைவரையும் நேரிவாயில் என்னும் இடத்தில் பொருது வென்றான்; நெடுமுடிக்கிள்ளியை அரசனாக்கினான்.

## குடும்பம்

நெடுமுடிக்கிள்ளி **சீர்த்தி** என்பவளை மணந்துகொண்டான். அவள் பாண மரபிற் பிறந்த அரசன் மகள். அவனுக்கு **உதயகுமரன்** என்றொரு மகன் இருந்தான். நெடு



முடிக்கிள்ளியின் தம்பியின் பெயர் இளங்கிள்ளி என்பதாகும். இளங்கிள்ளி சோழப் பேரரசின் வட பகுதியாகிய தொண்டைமண்டலத்தைக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான்.

## நற்செயல்

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. அவள் காவிரிப்பூம்பட்டினத்து ஏழை மக்கட்கு உணவு படைத்து வந்தாள். நெடுமுடிக்கிள்ளி அதுகேட்டு மகிழ்ந்தான்; அவளை அழைத்து உபசரித்தான்; அவள் வேண்டுகோளின்படி சிறைச்சாலையை அழித்தான்; அங்கு நற்செயல்கள் பல நடக்கத் துணையா யிருந்தான்.

## உதயகுமரன்

நெடுமுடிக்கிள்ளியின் மகனான உதயகுமரன் மணிமேகலைமீது காதல் கொண்டான். மணிமேகலை உதயகுமரனை விரும்பவில்லை. அவள் அவனுக்கஞ்சிக் காயசண்டிகை என்னும் வித்தியாதர மகளது உருவத்தைக் கொண்டு அன்னதானம் செய்தாள். அப்போதும் அவளை அறிந்துகொண்ட உதயகுமரன் அவளோடு உரையாடத் தொடங்கினான். அவள் அவனை வெறுத்துப் பேசினாள். இந்த உண்மையை உணராத காயசண்டிகையின் கணவனான வித்தியாதரன், தன்னுடைய மனைவியும் உதயகுமரனும் நட்புக்கொண்டுள்ளதாகத் தவறாகக் கருதினான்; உதயகுமரனை வெட்டி வீழ்த்தினான். பின்னரே அவன் தன்னுடைய தவறான செயலை உணர்ந்து வருந்தினான்.

உதயகுமரன் இறந்ததைக் கேட்ட அரசன் வருந்தவில்லை; தான் தரவேண்டிய தண்டனையை வித்தியாதரன் தந்துவிட்டானே என்று எண்ணி மகிழ்ந்தான்; தன் தானைத் தலைவனான சோழிக ஏனாதியை அழைத்து மணிமேகலையைச் சிறை செய்யுமாறு பணித்தான்.

## மணிமேகலை

மணிமேகலை நெடுமுடிக்கிள்ளியின் ஏவலால் சிறை செய்யப்பட்டாள். அவளை அரசி தன்னிடம் வைத்துக் கொண்டு பல துன்பங்களைச் செய்தாள். அத்துன்பங்களால் மணிமேகலை துயருறாமல் இருத்தலைக் கண்டு, அரசி அஞ்சினாள்; அறவண அடிகளின் அறிவுரை கேட்டு மணிமேகலையை விட்டாள்.

காஞ்சிமா நகரில் பசிப்பிணி மக்களைத் துன்புறுத்துவதாகக் கேள்வியுற்ற மணிமேகலை, அங்குச் சென்றாள். அங்கு அவளை இளங்கிள்ளி வரவேற்றான்; தான் கட்டியிருந்த புத்தர் கோவிலுக்குத் தென்மேற்கில் ஒரு சோலையில் புத்த பீடிகையை அமைத்து, பொய்கை எடுத்து, தீவதிலகையையும் மணிமேகலா தெய்வத்தையும் வழிபடற்குரிய கோவிலையும் உண்டாக்கினான். அங்கு நாட்பூசை, திருவிழா முதலியன நடைபெறுமாறு மணிமேகலை செய்தாள்.

## சாரணன் வேண்டுகோள்

நெடுமுடிக்கிள்ளி காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையை அடுத்த புன்னைமரச்சோலையில் அழகி ஒருத்தியைக் கண்டான்; அவளுடன் ஒரு திங்கள் அச்சோலையில் தங்கியிருந்தான். அவள் திடீரென்று மறைந்துவிட்டாள். அரசன் அவளைப் பல இடங்களிலும் தேடினான்; அவளை எங்கும் காணாமல் வருந்தினான்; பௌத்த சாரணன் ஒருவனைக் கண்டு அவளைப்பற்றிக் கேட்டான். அவன் பின்வருமாறு கூறினான் :

“அரசே, அவள் நாகநாட்டு அரசனான வளைவணன் மகள், **பீலிவளை** என்னும் பெயரினள். அவள் சாதகத்தைக் குறித்த சோதிடன் ஒருவன், ‘இவள் சூரியகுல அரசனோடு உறவுகொண்டு வருவாள்’ என்று கூறினான். அந்தப் பீலிவளையோடுதான் நீ உறவுகொண்டாய். அவள் இனி வரமாட்டாள். அவள் பெறும் மகனே வருவான். நீ இந்திர விழா செய்யத் தவறினால், மணிமேகலா தெய்வத்தின் சொற்படி உன் நகரத்தைக் கடல் கொள்ளும். ஆதலால் இந்திர விழாவை ஆண்டுதோறும் மறவாது செய்து, இந்நகர் கடலுக்கு இரையாகாமல் பார்த்துக் கொள்.”



## மறதியும் அழிவும்

புகார் நகரத்தில் இருந்த கம்பளச் செட்டி என்பவன் நாகநாடு சென்றிருந்தான். அவனிடம் பீலிவளை தன் மகனை ஒப்புவித்து அரசனிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டினாள். அவன் குழந்தையுடன் கப்பலில் வரும்பொழுது கப்பல் உடைந்துவிட்டது. வணிகன் தப்பினான். குழந்தை என்னவாயிற்று என்பதை அவனால் அறிய முடியவில்லை; அரசனிடம் சென்று நடந்தனவெல்லாம் சொன்னான். நெடுமுடிக்கிள்ளி மிகவும் வருந்தினான்; குழந்தையைத் தேடி அலைந்தான்; அந்த நிலையில் இந்திர விழாவை மறந்தான். காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது.

# 5. மதுரை மாநகரம்

## பாண்டிய நாடு

தென்வெள்ளாற்றை வட எல்லையாகவும், குமரி முனையைத் தென் எல்லையாகவும், வங்கக் கடலைக் கிழக் கெல்லையாகவும், இன்றைய திருவாங்கூர், கொச்சிச் சீமையை மேற்கு எல்லையாகவும் பெற்ற நிலப்பகுதியே பாண்டிய நாடு எனப்பட்டது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந் தவை. பாண்டிய நாட்டின் தலைநகரம் **மதுரை**; துறைமுகப் பட்டினம் **கொற்கை**.

## பாண்டிய நாட்டின் தொன்மை

பாண்டியர் பழைமையானவர் என்பது அறிஞர்கள் துணிபு. ஆதி காவியமென வடமொழியாளர் போற்றும் வான்மீகி இராமாயணத்தில் மதுரையைப்பற்றிய சிறப் புரைகள் உள்ளன. வியாசர் எழுதிய மகாபாரதம் அருச் சுனன் பாண்டியன் மகள் சித்திராங்கதை என்பவளை மணந்துகொண்ட வரலாற்றைக் குறிக்கின்றது. இலங்கை வரலாற்றைக் கூறும் மகா வம்சம் என்னும் நூல், இலங் கையை ஆண்ட விசயன் என்பவன் பாண்டியன் மகள் ஒருத்தியை மணந்து மகிழ்ந்தான் என்னும் செய்தியைக் கூறுகின்றது. மெகஸ்தனிஸ் என்னும் கிரேக்க நாட்டுத் தூதுவன், பாண்டிய நாட்டின் வரலாற்றை எழுதியுள் ளான். மெகஸ்தனிஸ் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சந்திர குப்தன் அரசவைக்கு வந்தவன் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் மகதநாட்டை ஆண்ட அசோகனின் கல்வெட்டுக் களிலும் பாண்டியரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பிளினி என்னும் மேல்நாட்டு வரலாற்று ஆசிரியரும் பாண்டிய நாட்டைப்பற்றிக் கூறியுள்ளார்.



## பாண்டிய நாடு பற்றிய கதைகள்

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டிலிருந்து **மெகஸ்தனிஸ்** என்னும் தூதுவன் சந்திரகுப்தன் அரண் மனைக்கு வந்தான். அவன் பாண்டிய நாட்டின் வரலாறு பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான்:

"ஹெர்க்கிளிசு என்பானுக்குப் **பண்டேயா** என்னும் பெண் பிறந்தாள். ஹெர்க்கிளிசு அப்பெண்ணுக்குத் தெற்கில் கடலைச் சார்ந்துள்ள ஒரு நாட்டை அளித்தான். அந்நாட்டை முந்நூற்றறுபத்தைந்து ஊர்களாகப் பகுத்து வைத்தான். அவளுடைய ஆட்சிக்குட்பட்ட அப்பகுதி யைச் சார்ந்த அரசர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளில் இறைப்பொருளைக் கொண்டுவந்து அரசிக்குத் தருதல் வேண்டும் என்று ஆணையிட்டான்."

**பிளினி** என்னும் மற்றொரு வரலாற்றாசிரியர் மெகஸ் தனிஸ் கூறியுள்ள கதையைப் போன்று பிறிதோர் கதை யைக் கூறியுள்ளார். அது பின்வருமாறு அமைந்துள்ளது.

"இந்தியாவில் பண்டோவென்ற ஒரே சாதி பெண் ணாட்சிக்குக் கட்டுப்பட்டது. ஹெர்க்கிளிசுக்கு ஒரே பெண் இருந்தமையின் அவன் அவளுக்கு அன்போடு பெரிய தோர் நாட்டை அளித்தான். அவள் மரபினர் முன்னூற் றுக்கு மேற்பட்ட ஊர்களை ஆளும் உரிமை பெற்றனர், அவர்கள் வீரர்கள்."

## மதுரை மாநகரம்

மதுரை மாநகரம் தோன்றியதைப்பற்றித் திருவிளை யாடற் புராணம் பின்வரும் வரலாற்றைக் கூறுகின்றது:

"மதுரை மாநகரமும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் ஒரு காலத்தில் கடம்ப மரங்கள் மிகுந்த காடாகக் காட்சி யளித்தது. அப்பெருங்காட்டின் கீழ்ப்பகுதியில் மணவூர் என்னும் ஊரொன்று இருந்தது. அவ்வூரைத் தலைநகராகக்

கொண்டு குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான்.

"அவன் காலத்தில் மணவூரில் தனஞ்சயன் என்ற வணிகன் வாழ்ந்து வந்தான். தனஞ்சயன் சிறந்த சிவ பக்தன்; ஒழுக்கம் மிகுந்தவன். அவன் ஒருமுறை வாணிகத்தின் பொருட்டு மேற்கு நோக்கிச் சென்று தன் நாடு நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்போது பகல் வேளை கழிந்து இரவு வந்தது. இருள் மிகுந்து விட்டதால் கடம்பவனத்திலேயே தங்கினான்; அவன் தங்கிய இடத்தில் எட்டு யானைகளால் தாங்கப் பெற்று ஓர் ஞாயிறுபோல ஒளி வீசிய விமானம் ஒன்றைக் கண்டான்; அவ்விமானத்தில் சிவலிங்கம் இருந்ததைக் கண்டான்; மனம் மகிழ்ந்து அங்கேயே தங்கினான்.

"அன்று திங்கட்கிழமை. அங்குத் தேவர்கள் வந்தனர்; சிவபெருமானுடைய மலர்ந்த அழகிய சிவந்த திருவடிகளை வணங்கினர்; நான்கு யாமங்களிலும் மிக்க மகிழ்வோடு அருச்சனை புரிந்தனர். இவை யாவற்றையும் தனஞ்சயன் கண்டான்; உடனே தேவர்கள் அருகில் சென்று மெல்லிய கஸ்தூரியையும், மணமுடைய பனிநீரையும், பூசைக்குரிய நல்ல கந்த வருக்கங்களையும் தேவர்கள் கையில்கொடுத்து, விமானத்தின் முன்னர் அமர்ந்து அருச்சனை புரிந்தான். விடியல் வேளையில் தேவர்களைக் காணாத வணிகன், தன் தனிமையை உணர்ந்தான்; வியப்புடன் சிவபெருமானை வணங்கித் தன் ஊருக்குப் புறப்பட்டான்.

"தனஞ்சயன் பாண்டியனது அரண்மனைக்குச் சென்றான்; குலசேகரனைக் கண்டான்; கடம்ப வனத்தில் தான் கண்ட காட்சிகளையெல்லாம் கூறினான். அவற்றைக்கேட்ட குலசேகரன் வியப்புடன் இறைவனது அருள் உள்ளத்தை எண்ணிப் போற்றினான்; அக்காட்சிகளுக்குரிய விளக்கத்தை அறியமுடியாமல் வருந்தினான். அன்றிரவு மன்னன் கனவில் சிவபெருமான் சித்தர் வடிவில் தோன்றினார்; கடம்பவனத்தில் உள்ள காட்டை அழித்து நகரமாகச் செய்யுமாறு பணித்தார். மறுநாட்காலையில் குலசேகரன் அமைச்சர்களையும் சான்றோர்களையும் அழைத்துக் கனவில் தான் கண்டதையும், தனஞ்சயன் மூலம்தான் கேட்டதையும் கூறினான்.



"பின்னர் எல்லோருமாகக் கடம்பவனத்தை அடைந்தனர். அரசன் அங்கிருந்த பொற்றாமரைக் குளத்தில் மூழ்கினான்; விமானத்தில் வீற்றிருந்த இறைவனை வணங்கினான்; ஆனந்தக் கண்ணீர் விட்டான். மன்னன் ஏவலின் படி அமைச்சர்கள் பலதுறைத் தொழில் வல்லவர்களை அழைத்து வருமாறு ஏவலரைப் பணித்தனர். சந்திரனது பிளவு போன்ற கூரிய கொடுவாளையும் கோடரியையும் சுமந்த தோளையுடையவரும் அரையிற் கட்டிய கச்சினையுடையவரும், செருப்பணிந்த காலினருமாகப் பலவகைத் தொழிலாளர்கள் வந்து சேர்ந்தனர். இவர்கள் காடுகளை வெட்டித் திருத்தும் தொழிலில் ஈடுபட்டனர். காடுகள் அழிக்கப்பட்ட பின்பு நகர் எடுப்பது எவ்வாறு என்பது பற்றி மன்னன் அமைச்சரையும் சான்றோரையும் கேட்டான். அப்போது அங்குச் சித்தர் வடிவில் சிவபெருமான் வந்தார். பாண்டியன் அவரை வணங்கி ஆசனங் கொடுத்தான். சித்தர், சிவாகமத்தின் வழியே தோன்றிய சிற்ப நூல் முறைப்படி ஆலயமும் மண்டபமும் கோபுரமும் நகரமும் இன்னவாறு அமைத்தல் வேண்டும் என்று வகுத்துரைத்து மறைந்தார்.

"சிற்ப நூலில் வல்லவர்கள் வரவழைக்கப்பட்டனர். சித்தர் கூறியவாறு நகரமும் கோவிலும் அமைக்கும் செயல்கள் தொடங்கப்பட்டன. பதும மண்டபம், நடு மண்டபம், பெரிய மண்டபம், அறுகாற்பீடம், நடன மண்டபம், திருவிழா மண்டபம், வேள்விச்சாலை, மடைப் பள்ளி, கணபதி, முருகன் முதலிய தேவர்களின் கோவில்கள் மீனாட்சியம்மையின் திருக்கோயில், திருமாளிகையைக் கொண்ட திருமதில்கள், மண்டபங்கள், கோபுரங்கள்,

சுற்றுமதில்கள், அகழிகள் ஆகிய இவை அமைக்கப் பட்டன.

"நகரத்தை மேலும் அழகு செய்ய விரும்பிய பாண்டியன், ஓவியங்கள் நிறைந்த கடைத்தெருக்கள், பலர் கூடிப் பேசும் அம்பலங்கள், மாளிகைகள் மிக்க பெருந் தெருக்கள், சுவர்வழிகள், நாற்சந்திகள், மன்றங்கள், செய்குன்றுகள், மேடைகள், நாடக மன்றங்கள், மடங்கள், அந்தணர் தெருக்கள், அரசர் தெருக்கள், வணிகர் தெருக்கள், வேளாளர் தெருக்கள், யானைக் கூடங்கள், குதிரை லாயங்கள், தேர்ச்சாலைகள், கல்விக்கூடங்கள், அறநிலையங்கள், கிணறுகள், சிறு குளங்கள், ஓடைகள், பெரிய குளங்கள், பொய்கைகள், நந்தவனங்கள், பூங்காக்கள், தோட்டங்கள், உய்யான வனங்கள் முதலியனவற்றை அமைத்தான். இவ்வாறு அமைக்கப் பெற்ற புதிய நகருக்கு வடக்கீழ்த்திசையில் பாண்டியன் அரண்மனை இருந்தது.

"நகரை எழில்மிக்கதாய் அமைத்த பின்பு நகருக்குச் சாந்தி செய்ய மன்னவன் கருதினான். அப்பொழுது இறைவன் தமது சடையிலுள்ள சந்திரக் கலையின் புத்தமுதத்தைச் சிந்தினான். அது அந்நகர் முழுவதையும் அமிர்தமயமாக்கித் தூய்மை செய்தது. அவ்வமுதம் மதுரமயமாகிய தன்மையினாலே அந்நகருக்கு மதுரா நகர்-மதுரை என்று பெயர் கூறினார்.

"பின்னர்க் குலசேகர பாண்டியன் மதுரையின் கிழக்குத் திசையில் ஐயனாரையும், தென்திசையில் சத்த மாதரையும், மேற்குத் திசையில் திருமாலையும், வட திசையில் பத்திர காளியையும் காவல் தெய்வங்களாக நிறுவினான்; மறையில் வல்ல அந்தணர்களைக் காசிப்பதியிலிருந்து வரவழைத்து மதுரையில் குடியேற்றுவித்தான். அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் முதலியோர் தத்தம் நெறியினின்று பிறழாது வாழ்ந்தனர். மதுரையில்



வைதிக நெறியும், சைவ நெறியும், அறநெறியும் சிறப்புற வளர்ந்தன. பாண்டிய நாட்டுக்கு ஒரு திலகம் பதித்தது போல மதுரையைக் குலசேகரன் வளப்படுத்தினான்."

## நான்மாடக் கூடல்

வருணன் மதுரையை அழிக்குமாறு ஏழு மேகங்களை ஏவினான். வானம் கருத்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. காற்று வேகமாக வீசியது. மேகங்கள் மதுரை நகரைச் சூழ்ந்துகொண்டன. மன்னன் செய்வதறியாது திகைத்தான்; சோமசுந்தரக் கடவுள் கோவிலை அடைந்து, வணங்கி, நகரையும் மக்களையும் காக்குமாறு வேண்டினான். சிவபெருமான் தம் சடையிலிருந்த நான்கு மேகங்களையும் ஏவி, மதுரைப் பதியின் நான்கு எல்லைகளையும் வளைந்து நான்கு மாடங்களாகி, வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் விலக்குமாறு ஏவினான். அந்நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய் வளைந்து நான்கு திசைகளிலும் சூழ்ந்தன. அதனுள் நகரம் முழுமையும் மறைந்தது. மதுரை நன்முறையில் காக்கப்பட்டது. வருணன் தன் செயல் வெற்றி பெறுமையைக் குறித்து நாணினான்; இறைவனைப் பணிந்து மன்னிப்பு வேண்டினான். இறைவனால் ஏவப்பட்ட நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய்க் கூடியதால் மதுரை **நான்மாடக்கூடல்** எனப்பட்டது.

## ஆலவாய்

வங்கியசேகர பாண்டியன் என்பவன் மதுரையை ஆண்டான். அவன் காலத்தில் மக்கள் தொகை பெருகியது. அதனால் அவன் மதுரையை விரிவாக்க முயன்றான்; சிவபெருமானிடம் தன் முன்னோர் வரையறுத்த நகர எல்லையை உணர்த்துமாறு வேண்டினான். சிவபெருமான் அவன் முன்பு ஒரு சித்தராய்த் தோன்றினார். அவருடைய அரைஞாண், பூணூல், குண்டலம், கால்சதங்கை, கைவளை என்பன பாம்புகளாகவே காணப்பட்டன. அவர்தம் கையிலிருந்த பாம்பைப் பார்த்துப் பாண்டிய நாட்டின் எல்லையை

வரையறுத்துக் காட்டுமாறு பணித்தார். அப்பாம்பு, தன்னால் எல்லை காட்டப்படும் அந்நகரம் தன் பெயரால் விளங்குமாறு அருளவேண்டும் என்று வேண்டியது. சித்தர் அதன் வேண்டுகோளை நிறைவேற்றுவதாகக் கூறினார். பின்னர் அந்நாகம் கீழ்த்திசையின்கண் சென்று, தன் வாலை நீட்டிப் பெரிய அந்நகருக்கு வலமாகப் படிந்து, உடலை வளைத்து, வாலைத் தனது வாயில் வைத்துப் பாண்டியனுக்கு நகர எல்லையைக் காட்டியது. பாம்பு வரையறுத்துக் காட்டிய அளவில் பாண்டியன் மதிலை எழுப்பினான்; தெற்கே திருப்பரங்குன்றமும், வடக்கே இடபக் குன்றமும், மேற்கே திருவேடகமும், கிழக்கே திருப்பூவண நகரும் எல்லைகளாகுமாறு மதிலின் வாயில்களை அமைத்தான். அந்நீண்ட மதில் "ஆலவாய் மதில்" என்று அழைக்கப்பட்டது. அன்று முதல் அந்நகரமும் **ஆலவாய்** என்றே அழைக்கப்பட்டது.

## மூன்று மலைகள்

வையையாற்றின் வலப்புறமாக அமைந்துள்ள மதுரைக்கு அருகில் மூன்று சிறந்த மலைகள் உள்ளன. அவை ஆனைமலை, நாகமலை, பசுமலை என்பனவாகும்.

இரண்டு மைல் நீளமும் இரண்டு பர்லாங்கு அகலமும் இருநூற்றைம்பது அடி உயரமும் கொண்ட ஒரு யானையின் தோற்றத்தோடு அமைந்திருப்பதால் **ஆனைமலை** என்னும் பெயர் அம்மலைக்கு அமைந்தது.

சமணர்கள் மதுரையை அழிக்கும் எண்ணம் கொண்டு ஏவி விட்ட பெரிய நாகத்தைச் சிவபெருமான் கல்லாக்கி அவர்கள் எண்ணத்தை அழித்தார் என்றும் அந்நாகம் கல்லான இடமே **நாகமலை** என்றும் தலபுராணம் கூறுகின்றது. இம்மலைத் தொடர் மதுரையை அடுத்துக் கிழக்கும் தெற்குமாகப் பரவியுள்ளது.



நாகத்தின் துணைகொண்டு மதுரையை அழிக்க முடியாத சமணர்கள், எவ்வாறேனும் மதுரையை அழிக்க வேண்டும் என்று உறுதி கொண்டனர்; தங்கள் முயற்சி வெற்றி நல்கவேண்டும் என்னும் விழைவால் வேதாளம் ஒன்றினைப் பசுவின் வயிற்றினுள் புகுத்தி அனுப்பினர்; பசு சைவரால் போற்றப்படுவது ஆதலின் அதனை எவரும் கொல்லார் என்றும், அதனால் தங்கள் எண்ணம் எளிதில் நிறைவேறும் என்றும் எண்ணினர். சிவபெருமான் இதனை உணர்ந்தார்; தமது வாகனமாகிய எருதினை மிகப் பெரிதாக்கிச் சமணர் பசுவை எதிர்க்க அனுப்பினார். சிவபெருமானது எருதினைக் கண்ட அளவில், வந்த பசு, மயங்கி இறந்தது. அப்பசுவே மலை வடிவம் கொண்டது. அம்மலையே **பசுமலை** என்பதாம்.* பசுமலை மதுரைக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது.

## மூன்று இலக்கியங்கள்

மதுரையைப் பற்றிய விவரங்களை மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம் என்னும் மூன்று இலக்கியங்களும் கூறுகின்றன. **மதுரைக் காஞ்சி** என்பது 'பத்துப்பாட்டு' என்னும் நூலின் ஒரு பகுதியாகும். இதனைப் பாடியவர் **மாங்குடி மருதனார்** என்னும் புலவர். இப்பாடல் மாங்குடி மருதனாரால் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தப் பாடப்பட்டது. இப்பாடலில் பாண்டியர் சிறப்பு, நெடுஞ்செழியனின் போர்ச் சிறப்பு, பாண்டிய நாட்டுச் சிறப்பு, மதுரை மாநகரச் சிறப்பு, வீடு பேறடைய அவன் மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் என்பன தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. மதுரைக் காஞ்சி எழுநூற்று எண்பத்திரண்டு அடிகளைக் கொண்டது.

**சிலப்பதிகாரம்** என்பது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. **இளங்கோவடிகள்** என்பவர் இதன் ஆசிரியர்.

இவர் சேரநாட்டைச் சேர்ந்தவர்; சேரன்-செங்குட்டுவனின் தம்பியார். சிலப்பதிகாரம் புகார் நகரத்துக் குடிமக்களான கோவலன் - கண்ணகி பற்றிய வரலாற்றைக் கூறுகின்றது; அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாக அமையும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்துவந்தூட்டும் என்னும் மூன்று உண்மைகளை அவர்கள் வாழ்க்கையோடு பிணைத்துக் காட்டுகின்றது. இந்நூல் புகார்க் காண்டம், வஞ்சிக்காண்டம் என்று மூன்று பெரும் பிரிவுகளையும் முப்பது காதைகளையும் கொண்டது. சேர, சோழ, பாண்டிய நாடுகளின் தலைநகரங்களைக் கொண்டே நூலின் பிரிவுகளுக்குப் பெயரிட்டு மூவேந்தர்களையும் புகழ்ந்து போற்றிப் பொதுமை நிறைந்த காவியமாகச் சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் அமைத்துள்ளார். இந்நூலில், மதுரைக் காண்டத்தில் வையை யாற்றின் சிறப்பு, மதுரை நகரச் சிறப்பு, அரசன் சிறப்பு, அரண்மனைச் சிறப்பு, மக்கள் வாழ்க்கை முதலியன நன்கு கூறப்படுகின்றன.

**திருவிளையாடற் புராணம்** என்பது இறைவனது அறு பத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறுவதாகும். இந் நூலினைப் **பரஞ்சோதி முனிவர்** என்பவர் எழுதியுள்ளார். இந்நூல் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவால வாய்க் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளை உடையது; மூவாயிரத்து முந்நூற்று அறுபத்துமூன்று செய்யுட்களைக் கொண்டது. இதனுள் மதுரை மாநகரம் உண்டான வரலாறு, நகரச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, இறைவன் அருட்செயல்கள், மக்கள் மனநிலை முதலியன விளக்கப் படுகின்றன.

இம்மூன்று இலக்கியங்களின் துணைகொண்டு மதுரை மாநகரச் சிறப்பினையும் மக்கள் வாழ்க்கையையும் நாமறிவோம் :



## வையை யாறு

வருஷை நாடு - ஆண்டிப்பட்டி மலைத்தொடரில் வையை யாறு தோற்றமாகின்றது. அது மதுரை மாவட்டத்தில் பெரிய குளம், நிலக்கோட்டை, மதுரை தாலூகாக்களில் பாய்கின்றது. பின்னர் இராம நாதபுர மாவட்டத்திலும் பாய்ந்து இராசமங்கலம் ஏரியில் கலக்கின்றது. பரிபாடல், சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம் என்னும் நூல்கள் வையை யாற்றைப் பற்றிச் சிறப்பிக்கின்றன. வையைக் கரையில் அமைந்துள்ள பேரூர் மதுரையேயாகும். குலசேகரன் கோட்டை, கொடை மங்கலம், மேட்டுப்பட்டி, சோழவந்தான், திருவேடகம், திருப்பூவணம் என்பன வையை யாற்றுக் கரையில் அமைந்த சிற்றூர்களில் குறிப்பிடத் தகுந்தனவாகும். வையை யாற்றைப் பற்றி மதுரைக் காஞ்சி பின்வருமாறு கூறுகின்றது :

“மதுரைக்கு நான்மாடக்கூடல் என்னும் பெயருண்டு. அது பாண்டியர்க்குத் தலைநகரமாகும். மதுரை நிலமகளின் முகத்தைப் போலப் பொலிவு பெற்றிருக்கும். அந் நகரை வையை யாறு அழகு செய்கின்றது. வையை யாற்றங்கரையில் வானளாவி வளர்ந்துள்ள மரங்களின் கிளைகளில் மந்திகள் தாவித்தாவி விளையாடும். அங்கு மயில்கள் அகவும். அங்கங்கே மணற் குன்றுகள் காணப் படும். மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்கள் நீராடும் கரைகளில் மிதந்து மிதந்து செல்லும். ஆற்றின் துறைகள் தோறும் பாணர்களின் குடியிருப்புக்கள் காணப்படும்.

## அகழி

நகரத்தைச் சூழ்ந்த அகழி ஆழமுடையது. அடிக்கடி மேலெழுந்து துள்ளும் வாளைமீன்களும், தம் உறுப்புக்களை விரித்துத் தவழுகின்ற ஆமைகளும் அகழியில் திரிந்தன. கொடிய கூற்றுவனைப் போல முதலை அவ்வகழியில் இருந்தது. அதனால் மண்ணுலகத்தவர் அவ்வகழியில் இறங்க

மாட்டார்கள். அன்னங்களும் தாமரைகளும் நிறைந்த நீர் நிலைகள் காண்பவர்களின் கண்களையும் மனத்தையும் கவரும்.

## மதில்

நகர்க்குக் காவலாக உள்ள மதிற்சுவர்கள் பேரரசராலும் தாக்க முடியாதவை; சுரங்க வழியுடையவை. வானுற ஓங்கி நிமிர்ந்தவை. கோட்டை வாயில் நெடிய நிலைகளையும் திண்ணிய கதவினையும் உடையது. அதன்மீது கட்டப்பட்டுள்ள மாடங்கள் முகில்கள் உலாவும் மலைபோல உயர்ந்திருக்கும். மக்களும் விலங்குகளும் இடையறுது சென்று வருதலின், கோட்டை வாயில் நீரோட்டமுடைய வையையாற்றை ஒத்திருக்கும்.

## மதிற்பொறிகள்

பகைவர் எதிர்த்துப் பொருதக்கால் அவர்களைச் சினந்து எதிர்த்துப் போர் செய்ய வீரர்கள் வேண்டுவதில்லை. அம்மதிலிலுள்ள பொறிகளே போர் செய்ய வல்லன. அம்மதிற் பொறிகளில் சில மழுப்படைகளை வீசி எறியும்; நஞ்சு தோய்ந்த வாட்படைகளை எறியும்; மூன்று தலைகளையுடைய சூலங்களை எறியும்; வேல்களையும் சக்கரங்களையும் எறியும்; வளைதடிகளையும் நெருஞ்சி முள் வடிவுடைய படைக்கருவிகளையும் எறியும்; சில நெடிய கொழுப்படைகளை எறியும்; கவண் கயிற்றில் கல்லைக் கோத்து ஆரவாரம் செய்து எறியும்; வாள் போன்று பற்களையுடைய பாம்புப் பொறிகள் நாக்கை நீட்டிப் பகைவரை அழிக்கும்; மலைப்பாம்புப் பொறிகள் பகைவரை விழுங்கும்; யானைப் பொறிகள் இருப்புலக்கைகளை எதிரிகளின் தலைகள் சிதறுமாறு வீசும். புலிப் பொறிகள் பகைவரை அமுக்கும். குதிரைப் பொறிகள் எதிரிகளின் மார்பின் எலும்புகள் முறிய உதைக்கும்; அவர்களை அகழியில் எறி[illegible]டும். கொள்ளிவாய்ப் பேய்ப் பொறிகள் தீயை



உமிழ்ந்து நக்கும். சில பேய்ப் பொறிகள் கை கொட்டும், தோள் தட்டும். சில பொறிகள் ஈயத்தை உருக்கிப் பகைவர்கள்மேல் பொழியும்; வறுத்த மணலைக் கொட்டும்; கல்மழை பொழியும். இவைபோன்ற பொறிகளும் மதிலிடத்து இருந்தன. அப்பொறிகள் யாவும் யவனர்களால் செய்யப் பெற்றன என்று கூறப்படுகின்றது.

## நகர அமைப்பு

மதிலுள் அகன்ற தெருக்கள் இருந்தன. தெருக்களின் இருபுறங்களிலும் சாளரங்கள் பல அமைந்த உயர்ந்த வீடுகள் இருந்தன. தெரு வையை யாற்றையும், இருபுறத்தில் அமைந்த இல்லங்கள் வையை யாற்றின் கரைகளையும ஒத்திருந்தன. கடைத்தெருவில் பலமொழிகளைப் பேசும் மக்களின் பேச்சொலிகள் கேட்கும். விழாவைப் பறையறைந்து தெரிவிக்கும் ஓசை காற்றால் அலைப்புண்ட கடலொலி போல ஒலிக்கும். கோவில்களிலிருந்து எழும் பலவகை வாத்தியங்களின் ஒலிகளைக் கேட்டு மக்கள் மனம் மகிழ்ந்து ஆரவாரம் செய்வர். விழாக்களுக்காகக் கட்டப்பட்ட கொடிகளும், பகைவரை வென்றமைக்கு அடையாளமாகக் கட்டப்படும் வெற்றிக் கொடிகளும், கடைகளில் கட்டப்பட்ட அடையாளக் கொடிகளும், கட்டடங்களின் உயரத்தில் பறந்தவாறு அழகுசெய்துகொண்டிருக்கும். யானைகள் செல்லும் தெருக்களிலும் பெண்கள் செல்லும் தெருக்களிலும் கஸ்தூரி மணம் கமழும்.

## தெருக்களின் சிறப்பு

கணவரோடு மாறுபட்ட மகளிர் வெறுத்து எரிந்த அணிகளும், மகளிர் சுமக்க முடியாது நீத்த நகைகளும், தாம் கட்டிய சிற்றில்களைச் சிதைத்த இளைஞரோடு வெகுண்ட பெண்கள் அறுத்தெறிந்த முத்து மாலைகளும் நகரத்தெருக்களில் குப்பைகளாகக் குவிந்திருக்கும்.

திங்களைப் பொடி செய்து சேறாகக் குழைத்துப் பூசியது போல வெண்மை மிகுந்த மாட வரிசைகள் விளங்கின. மதுரைத் தெருக்களில் தேரின் ஒலியும், குதிரைகளின் கனைப்பொலியும், குதிரைகளின் கழுத்தில் அணியப்பட்ட கிண்கிணி மாலைகளின் ஒலியும், யானைகளின் பிளிற்றொலியும், தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, மிடற்று என்னும் ஐவகை இசைக்கருவிகளின் ஒலியும் நிறைந்திருக்கும். அதனால் மேகத்தின் இடியொலி செவிகளில் கேட்பதில்லை.

## பலவகைத் தெருக்கள்

பரத்தையர் தெரு, வேளாளர் தெரு, வணிகர் தெரு, மன்னர் மறுகு, மறையவர் தெரு எனப் பல தெருக்கள் மதுரையிலிருந்தன. இத்தெருக்களுள் வணிகர் தெருக்கள், மன்னர் தெருக்கள் பற்றி அறிவோம்.

## வணிகர் தெருக்கள்

வணிகர் வாழும் கடைத் தெருக்களில் உள்ள திண்ணைகள் நீல மணிகளால் விளங்கின; சுவர்கள் பளிங்கின் ஒளியை வீசின. தூண்கள் வயிரத்தால் செய்யப்பட்டவை. அவற்றின் இடையே முத்துச்சரங்கள் நிரலாகத் தொங்கின. கரிய கம்பளம் வேய்ந்த சட்டத்தின் மேல் வரிசை வரிசையாகப் பவளமாலைகளும், முத்துமாலைகளும், பொன்மாலைகளும், தொங்க விடப்பட்டன. அவை பார்ப்பதற்கு அழகாக இருந்தன. அவர்களுடைய கடைத்தெருக்கள் இரவும் பகலும் அற்ற விண்ணுலகம் போல விளங்கின. வணிகச் சிறுமியர் வைத்து விளையாடும் அம்மிகளும் குழவிகளும் மரகதத்தாலும், உரல்களும், உலக்கைகளும் வயிரத்தாலும், அடுப்புகள் வெள்ளியாலும் செய்யப்பட்டிருந்தன. வெள்ளியால் செய்யப்பட்ட அடுப்பிற்கு அகிற் கட்டை விறகாகும்; பனிநீர் உலை நீராகும்; முத்துக்கள் அரிசியாகும்; மாணிக்கங்கள் நெருப்பாகும். அவர்கள்



சமைக்கும் பாத்திரங்கள் பொன்னால் செய்யப்பட்டவை. வணிகர் வாழ்ந்த இல்லங்களின் கதவுகள் செம்பொன்னாலும் தாழ்ப்பாள்கள் வயிரத்தாலும் ஆனவை. அவர்கள் தெருக்களில் மாணிக்கங்களும், பொற்கட்டிகளும், முத்துக்களும், மரகதங்களும், வயிரங்களும், பவளங்களும் சிதறிக் கிடக்குமாம்.

## மன்னர் தெருக்கள்

குடிமக்களின் துன்பமாகிய இருளைக் கெடுக்கும் மன்னவன் உலகின் புறஇருளை நீக்கும் கதிரவனுக்கு ஒப்பாவான். அவன் வாழ்ந்த தெருவில் குதிரைக் கூடங்களும், யானைக் கூடங்களும் மிகுதியாக இருந்தன; மழு, வச்சிரம், வில், அம்பு, சூலம், சக்கரம், வேல், நெருஞ்சிமுள், கலப்பை முதலிய படைக்கருவிகளைக் கொண்ட கொற்றவை வாழும் கூடங்களும் பல இருந்தன; அரசிளங்குமரர்கள் போர்ப் பயிற்சி பெறும் கூடங்கள் அளவற்றன. நீல மணிகள், செம்மணிகள், பொன், சந்திரகாந்தக் கற்கள் முதலியவற்றால் கட்டப்பட்ட மாளிகைகள் இருந்தன. வீரர்கள் சிலர் யானைகளுக்குப் போர்ப் பயிற்சி அளிப்பார்கள்; குதிரை பூட்டப்பெற்ற தேர்களை விரைந்து செலுத்துவார்கள். சிறுமியர் கட்டிய மணல் வீடுகளை அரசிளங்குமரர் சிறுதேரோட்டி அழிப்பார்கள். அதனால் சிறுமியர் மனவருத்தம் கொண்டு தேரோட்டம் தடைபெறுமாறு முத்துக்களை அள்ளி வீசுவர்; வழிவழி அறம் பிறழாது ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த எழுநிலை மாடங்களையுடைய அரண்மனை மதுரை நகரின் வடகிழக்குப் பக்கத்தில் இருந்தது.

## படைகள்

**யானைப் படை** சினம் மிகுந்து குத்துக்கோற்காரரைத் தாக்கிக் கொல்லும்; பாகரைத் தூக்கி எறியும்; தாம் கட்டப்பெற்ற கட்டுத் தறியை முறிக்கும். அன்னச்

சேவலை ஒத்த வெண்ணிறக் குதிரைகள் பூட்டப் பெற்ற **தேர்ப்படை** வலிமை மிக்கது. **குதிரைப்படை,** விரைந்த செலவையுடையது; வட்டமாகவும் நேராகவும் செல்ல வல்லது. **காலாட்படை,** வில் வாள் ஈட்டி வீரர்களைக் கொண்டது.

இந்நால்வகைப் படைகள் நகரத் தெருக்களில் செல் லும்பொழுது உணவுப் பண்டங்களை விற்பவரும், மலர் விற்பவரும், சுண்ணம் விற்பவரும், வெற்றிலைபாக்கு விற்பவரும் ஒதுங்கி யிருப்பர்; படைகள் தம்மைக் கடந்த பின்னர்த் தெருக்களிற் சென்று விற்பர்.

## கோவில்

குழலின் ஒலி, தும்புரு நாரதனின் இசையொலி, பெண்களின் ஆடலொளி, தேவாரத் திருமுறைகளின் ஒலி, திருவிழாக்களின் ஒலி, நான்மறைகளின் ஒலி முதலிய ஒலிகள் நீக்கமற நிறைந்தது திருக்கோவிலாகும். அகழி, மதில், கோபுரங்கள், இந்திர விமானம் முதலியன கோயிலுக்கு அழகு செய்வனவாய் அமைந்தன.

## வழிபாடு

சிவபிரான் முதலிய கடவுளர்க்குப் பலி தருவதற்காக அந்திக் காலத்திற்குச் சிறிது முன்பு தொடங்கிய விழா வில் இன்னியங்கள் பல ஒலிக்கும். பௌத்த மதத்தைச் சார்ந்த பேரிளம் பெண்டிர் தாமரை மலரைப் பிடித்தது போன்று சிறுபிள்ளைகளை எடுத்துக்கொண்டு, தம் கணவருடன் வழிபாட்டுக்கு வேண்டும் மலர்களையும் தூபங்களையும் ஏந்திக்கொண்டு பௌத்த பள்ளிகட்குச் செல்வர். பிரம வித்துக்கள் இருக்கின்ற மடங்களில் சிலர் அறநெறி கேட்பர். மற்றுஞ் சிலர் சமணமுனிவர் வாழும் சமணப்பள்ளிகளில் அறவுரை கேட்பர்.



## மக்கள்

நகரத்தில் வாழும் செல்வர் மாலையில் பட்டாடைகளை உடுப்பர்; அரையில் உடைவாளைச் செருகியிருப்பர்; தோளில் மேலாடைகளைத் தரித்து வேப்ப மாலையையும் மாணிக்க மாலையையும் அணிவர்; மாலைக்காலத்தில் தேரி லேறித் தெருக்களில் செல்வர். வேலைப்பாடமைந்த கை வளையல்களையும் பொன்னால் செய்யப்பட்ட பிற அணிகலன் களையும் சிலம்பையும் அணிந்த மகளிர், நிலா முற்றத்தில் மாடங்கள்தோறும் நிற்பர். மாடங்களில் கட்டப்பட்ட கொடிகள் அவர்கள் முகங்களை மறைக்கும். காற்றடிக்கும் பொழுது அக்கொடிகள் அசையும். அப்பொழுது அம் மகளிரது முகங்கள் தெரியும். அக்காட்சி மேகங்கட்கு இடையில் தோன்றும் திங்களைப் போன்றிருக்கும்.

## அறங்கூறவையமும், பிறவும்

கோவில்கட்கும் பள்ளிகளுக்கும் அப்பால் அறங் கூறும் அவையங்கள் இருந்தன. காவிதிப்பட்டம் பெற்ற அமைச்சரகளுடைய வளமனைகள் அடுத்திருந்தன. அவற்றையடுத்துப் பிறநாடுகளிலிருந்து வந்து வாணிகத் தால் பொருள் திரட்டிய வணிகர் வாழ்மனைகள் இருந்தன. புரோகிதர், ஒற்றர், தூதுவர், சேனைத் தலைவர் முதலியவர் வாழ்விடங்களும அடுத்தடுத்து இருந்தன.

## அந்தி அங்காடி

சங்கினால் வளையல் முதலிய அணிகலன்கள் செய் பவரும், மணிகளைத் துளையிடுபவரும், பொற்கொல்லரும், பொன்வாணிகரும், ஆடை விற்பவரும், மணப்பொருள் கள் விற்பவரும், நெய்தற்றொழில் செய்பவரும், ஓவியக் காரரும் பிறரும் கலந்து அந்தி அங்காடியில் வாணிகம் செய்வர். அவர்களால் எழுப்பப்படும் ஆரவாரம் அறிஞர் தருக்கங்களைச் செய்யும் ஆரவாரத்தை ஒத்திருக்கும்.

## அறக்கூழ்ச்சாலை

வறியவர்க்கு வயிறார உணவளிக்க அறக்கூழ்ச்சாலை மதுரைமாநகரில் உண்டு. அதனில், பலா, வாழை, முந்திரி முதலிய பழங்களும், பாகற்காய், வாழைக்காய், அழுதுணங் காய் முதலிய காய்களும், இலைகளும், இறைச்சி கலந்த சோறும், கிழங்கு வகைகளும், பால் முதலியவும் வறிய வர்க்கு வழங்கப்பட்டன.

## இன்ப மயம்

மதுரையில் சமயப் பூசல்கள் இல்லை; எல்லாச் சமயங் களும் சிறப்புற வளர்ந்தன; அவரவர்கள் தங்கள் சமயங் களை நன்கு பேணி வளர்க்கும் உரிமை இருந்தது. சிவன், விஷ்ணு, பலராமன், முருகன், புத்தன், ஜினன் ஆகிய பல கடவுளர்க்கும் மதுரையில் தனித்தனியே கோவில்கள் இருந்தன என்னும் உண்மையைச் சிலப்பதிகாரம் கூறு கின்றது. சமயப் பூசல்கள் இல்லாமையால் மக்கள் மாறு பாடு இல்லாமல் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்வில் இன்பம் நிலவியது.

## கடமையுணர்வு

நகரக்காவலர் நள்ளிரவில் கண்ணுறங்கார். அக் காவலர் அஞ்சா நெஞ்சம் கொண்டவர்; புலியொத்த வலிமையுடையவர்; கள்வரின் தந்திரங்களை நன்குணர்ந் தவர்; எந்தச் சூழலிலும் கடமையிலிருந்து வழுவாத நெறி யினர். மெல்லிய நூலேணி அவர்கள் அறையில் சுற்றப் பட்டிருக்கும். காற்றினும் கடிது செல்லும் கள்வரைப் பிணிக்கும் ஆற்றல்கொண்ட அக்காவலரால் மதுரை மாநகரில் கள்வர் பற்றிய அச்சம் இல்லாதிருந்தது.

## இரவு நிகழ்ச்சிகள்

திருமால் பிறந்த நாள் ஓண நாள் எனப்படும். அந் நாளில் மறவர் கள் பருகுவர்; ஒருவரோடொருவர் போரிடு வர்; நெற்றியில் வடுப்பெற்றுத் தோன்றுவர். குழந்தை யைப் பெற்ற மகளிர் குளத்து நீரில் துன்பமற்று நீராடு வர். அப்போது முதல்முறையாகக் கருவுற்ற காரிகையர் எவ்விதத் துன்பமும் இல்லாமல் மக்களைப் பெற வேண்டும் என்று இறைவனை வேண்டுவர். பின்னர் வழிபாட்டுக்கு வேண்டும் பல பொருள்களையும் சேர்ப்பர்; உறவினரை அழைப்பர். தேவராட்டி தெய்வமேறப் பெற்று நற்சொல் கூறுவாள். அப்பொழுது யாழிற் செவ்வழிப்பண் வாசிக் கப்படும். பல்லியங்கள் ஒலிக்கும். சூல்கொண்ட மகளிர் மயில்போல மெல்லென நடந்து பால்சோற்றை உண்பர். குறிஞ்சி மலரைத் தலையில் செருகிய மகளிர் முருகனை வழி படுவர்; மன்றுகள்தோறும் குரவைக் கூத்தாடுவர். இவை யாவும் நள்ளிரவின் முதற் சாமத்தில் நடைபெறுவன. நள்ளிரவில் மகளிர் இனிதுறங்குவர். அப்பவாணிகர் கண்ணயர்வர்; கூத்தர் கூத்தை முடித்த பின்பு உறங்குவர்.



## காலை நிகழ்ச்சிகள்

அந்தணர்கள் வைகறையில் வேத ஒலி எழுப்புவர். யானைகட்குப் பாகர் சோற்றுக் கவளம் ஊட்டுவர். குதிரை கள் புல்லைக் கடிக்கும். பண்டங்களை விற்பவர் தம் கடை களை மெழுகுவர். கள் விற்பவர் கள்ளின் விலை கூறுவர். காலையில் கள்ளுண்டு மயங்கியவர்கள் குழந்தைகள்போல மழலை பேசுவர். பள்ளி எழுச்சி பாடும் வைதாளிகர் அரசன் துயில் நீங்கி எழுவதற்குரிய பாடல்களைப் பாடுவர். நாழி கைக் கணக்கர் நேரத்தைக் கூறக் காலை முரசம் ஒலி செய் யும். சேவல் விடியலை அறிவிக்கக் கூவும். கூட்டில் அடைத்து வளர்க்கப்படும் கரடி, புலி முதலிய விலங் குகள் முழக்கமிடும். பகைவரிடமிருந்து கொண்டு வரப்பட்ட பசுக் கூட்டங்களும், தோற்ற மன்னர் திறை யாகக் கொண்டுவந்த அணிகளும் பிறவும் அரண்மனைக்குக் கொண்டு செல்லப்படும்.

## புலவர் பெருமக்கள்

மதுரையில் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்கள் பலராவர். அவருள், மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனர், மதுரைக் கண்டரதத்தன், மதுரைக் கண்ணனர், மதுரைக் கதக்கண்ணனர், மதுரைக் காஞ்சிப் புலவர் - மாங்குடிகிழார் - மாங்குடி மருதனர், மதுரைக் கொல்லன் புல்லர், மதுரைச் சித்தலைச் சாத்தனர், மதுரை நல்வெள்ளியார், மதுரைப் பெருங்கொல்லனர், மதுரை மருதங் கிழார் மகன் இளம்போத்தனர், மதுரையளக்கர் ஞாழலார் மகனர் மள்ளனர், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனர், மதுரையாசிரியர் கோடங்கொற்றனர், மதுரை ஈழத்துப் பூதன்றேவனர், மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனர், **மதுரை வேளாதத்தர்**, மதுரை மருதனிள நாகனர், மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர், கோனட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனர் என்போர் குறிப்பிடத்தகுந்தவராவர். இவர்கள் பாடிய பாடல்கள் குறுந்தொகை புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

## இன்றைய மதுரை

மதுரை மாவட்டத்திற்கும் இராமநாதபுர மாவட்டத்திற்கும் இன்றைய மதுரை தலைநகரமாக உள்ளது. அங்குப் பல அரசாங்க அலுவலகங்கள் உள்ளன. பெரிய கடைத் தெருக்கள் மதுரை நகரை அழகு செய்கின்றன. திருமலை நாயக்கர் மகால், புதுமண்டபம் என்பன வரலாற்றுச் சின்னங்களாக உள்ளன. பல சமயத்தவர் கோவில்கள் நகரில் பல உள்ளன.

## கல்லூரிகள்

மதுரை நகரில் ஆண்களுக்கு மூன்று கல்லூரிகள் உள்ளன. அவை அமெரிக்கன் கல்லூரி, மதுரைக்கல்லூரி, தியாகராசர் கல்லூரி என்பன; மகளிர்க்கென இரண்டு



கல்லூரிகள் உள்ளன. அவை டோக் பெருமாட்டி கல்லூரி, பாத்திமா கல்லூரி என்பன; பல உயர்நிலைப் பள்ளிகளும், நடுநிலைப்பள்ளிகளும், தொடக்க நிலைப்பள்ளிகளும் உள்ளன; மருத்துவக் கல்லூரி, தொழிற்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி என்பனவும் உள்ளன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழுவினர் **செந்தமிழ்க் கல்லூரி** என்னும் பெயரில் தனித்தமிழ்க் கல்லூரி ஒன்றினை நடத்தி வருகின்றனர். அங்கு மாணவ மாணவியர் தமிழிலக்கியங்களைக் கற்கின்றனர்.

## கோவில்கள்

மதுரையின் நடுநாயகமாய் அமைந்துள்ள பெரிய கோவில் **மீனட்சியம்மன் கோவிலாகும்**. இக்கோவில் பாடல் பெற்றதாகும். இக்கோவிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் சொக்கநாதர் என்றும் சோமசுந்தரர் என்றும் அழைக்கப்படுகின்றார். கோவிலுள் பொற்றாமரைக்குளம் உள்ளது. பொற்றாமரைக் குளத்தைப்பற்றிய விவரங்கள் திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதியாரால் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. இக்கோவிலின் திருச்சுற்றில் சலவைக் கல்லில் திருக்குறள் முழுவதும் பொறிக்கப்பட்டுள்ளது. கோவிலைச் சுற்றி அமைந்துள்ள நான்கு தெருக்களில் திருப்புகழ் மண்டபமும், திருவள்ளுவர் கழகமும் உள்ளன. பலதுறைச் சொற்பொழிவுகள் அங்கு நடைபெறும்.

**செல்லத்தம்மன் கோவில்** என்பது மதுரை வடக்கு மாசி வீதிக்கு அருகில் உள்ளது. இக்கோவிலை அடுத்து யாதவர்கள் வாழ்கின்றனர். கண்ணகி ஒரு கையில் சிலம்புடன் உட்கார்ந்துள்ளதை உணர்த்தும் உருவச்சிலை ஒன்று இக் கோவிலில் உள்ளது. இப்பகுதியில்தான் கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதிரி என்னும் யாதவ குலமகள் வாழ்ந்தாள் எனக் கொள்ளலாம் என்று அறிஞர் கூறுவர்.

**நக்கீரர் கோவில்** என்பது மதுரை மேலமாசி வீதியில் உள்ளது. இக்கோவிலில் நக்கீரர் உருவச்சிலை உள்ளது. மீனாட்சி சுந்தரேசுவரர் உருவச்சிலைகளும் உள்ளன. வழிபாடு சிறப்புற நடைபெறவில்லை. இக்கோவிலைச் 'சங்கத்தார் கோவில்' என்றும் வழங்குவர்.

**இம்மையில் நன்மை தருவார் கோவில்** மேலை மாசி வீதியின் தென்கோடியில் உள்ளது. இது பெரிய கோவில். தடாதகையாரை மணந்துகொண்டு பாண்டிய நாட்டை ஆண்ட சுந்தர பாண்டியர் இக்கோவிலிற் பூசை செய்தார் என்று திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. இக்கோவில் பழைமை வாய்ந்தது.

## தெப்பக்குளம்

மதுரையின் கிழக்குக் கோடியில் வையை யாற்றுக்கு எதிரில் வண்டியூர்த் தெப்பக்குளம் என்னும் பெயருடன் திருக்குளம் ஒன்றுள்ளது. அது மிகப் பெரியது. அதன் நடுவில் நாற்சதுரமாய் அமைந்த நீராழி மண்டபம் ஒன்றுள்ளது. அங்கு மரங்களடர்ந்த சோலையும் உள்ளது.

## மகால்

கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்காபூர் படையெடுப்பால் மதுரை நகரின் பெரும் பகுதி அழிந்தது. முஸ்லிம் ஆட்சிக்குப் பின்னர் மதுரையில் விசய நகர ஆட்சி ஏற்பட்டது. விசுவநாத நாயக்கர் காலத்தில்தான் கோவில் தெரியதாகக் கட்டப்பட்டது. விசுவநாத நாயக்கரின் அமைச்சரான தளவாய் அரியநாதர் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டுவித்தார். அவருக்குப் பின்னர் வந்த திருமலை நாயக்கர் மேலும் பல புதுமைகளைச் செய்தார். அவர் வாழ்ந்த அரண்மனையாகக் கூறப்படுவதே திருமலை நாயக்கர் மகால் என்பது. மகாலைச் சுற்றிப் பல தெருக்கள் அமைந்துள்ளன. யானைகளைப் பிணிதற்குரிய பத்துத் தூண்கள் பார்க்கத் தகுந்தவை. வர



லாற்றுச் சிறப்புடன் விளங்கும் இம்மகாலில் இப்பொழுது அறங்கூறவையங்கள் இடம் பெற்றுள்ளன; மதுரை, இராமநாதபுரம் அறங்கூறவையங்கள் உள்ளன. நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் மகாலைக் கண்டு மகிழ்கின்றனர்.

## பிற

மதுரை நகரில் ஹார்வி பஞ்சாலை, மீனாட்சி பஞ்சாலை, பாண்டியன் பஞ்சாலை முதலிய ஆலைகள் உள்ளன. அந்த ஆலைகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பணிபுரிகின்றனர். மதுரை மாநகரம் தூய்மை மிக்கது; எழில் மிக்கது. எவ்விதப் பிணக்கும் இல்லாப் பெருவாழ்வு வாழ்தற்கேற்ற பெருநகரமாகும்.

# 6. பாண்டிய மன்னர்கள்

## பாண்டிய மன்னர்கள்

பாண்டியர் சந்திரன் மரபைச் சேர்ந்தவர்கள்; வேப்பம்பூ மாலையைத் தமக்குரிய அடையாள மாலையாகக் கொண்டவர்கள்; கயல் மீனுருவைக் கொடியாகவும் இலச்சினையாகவும் கொண்டவர்கள். புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களால் பாண்டிய மன்னர் பலருடைய பெயர்களை நாம் அறிய முடிகின்றது. அந்நூல்களின் துணைகொண்டு, கடைச்சங்க காலத்திற்கு முந்திய பாண்டியர்கள், கடைச்சங்க காலத்துப் பாண்டியர்கள் என்று வகைப்படுத்திப் பாண்டிய மன்னர்கள் சிலரைப் பற்றிய சிறப்புக்களை அறிவோம்.

## இருபெரு மன்னர்

கடைச்சங்க காலத்திற்கு முற்பட்ட பாண்டியர்களாக வடிம்பலம்ப நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் இருவரையும் கூறலாம்.

**வடிம்பலம்ப நின்ற பாண்டியனுக்கு** நிலந்தரு திருவிற் பாண்டியன், பாண்டியன் மாகீர்த்தி என்னும் பிற பெயர்களும் வழங்கின. நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் இப்பாண்டியன் இருபத்து நாலாயிரம் ஆண்டுகள் அரசுபுரிந்தான் என்றும், இவனது அவையில்தான் தொல்காப்பியம் அரங்கேறியது என்றும் தொல்காப்பியப்பாயிர உரையில் கூறியுள்ளார். இவன் குமரி நாட்டின்கண் பஃறுளி என்னுமோர் ஆற்றை வெட்டுவித்தான்; கடல் தெய்வத்துக்கு விழாச்செய்தான். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாராட்டும் நெட்டிமையார் என்னும் புல



வர் வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் இச்செயலைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

> **"முந்நீர் விழவி னெடியோன்**
> **நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"**
>
> (புறநானூறு, செ. 9)

**பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** வடிம்பலம் நின்ற பாண்டியனது வழியில் வந்தவன். இம்மன்னனது இயற்பெயர் குடுமி என்பது. பல யாகங்களைச் செய்தவனாதலின் 'பல்யாகசாலை' என்னும் சிறப்புப் பெற்றான். மதுரைக் காஞ்சி என்னும் நூலில்,

> **"பல்சாலை முதுகுடுமித்**
> **தொல்லாணை நல்லாசிரியர்**
> **புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்"**

என்று இம்மன்னவன் புகழப்பட்டுள்ளான். மதுரைக் காஞ்சி மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது என்பதையும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அதன் பாட்டுடைத் தலைவன் என்பதையும் முன்னரே அறிந்தோம் அல்லவா? இவனைக் காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர்கள் பாடியுள்ளனர். அவர்கள் பாடியுள்ள ஐந்து பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. அப்பாடல்களால், இவன் தன் காலத்திலிருந்த மன்னர் பலரை வென்றவன், சிறந்த வள்ளல், வேள்விகள் பல செய்தவன், சிவபெருமானிடத்து நீங்காப் பற்றுடையவன் என்னும் செய்திகள் தெரிகின்றன. இவனைப்பற்றி நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய பாடல்களுள் ஒன்றனைக் காண்க:

> **"பாணர் தாமரை மலையவும் புலவர்**
> **பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்**

அறனே மற்றிது விறன்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே."

(புறநானூறு, செ. 12)

## கடைச்சங்க காலம்

ஏறத்தாழக் கி. பி. 300—உடன் கடைச்சங்கம் முடிவெய்தியது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். "இறையனார் அகப்பொருள்" என்னும் நூலுக்கு உரை கண்ட பெரியார் கடைச்சங்க காலத்தில் நாற்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர் என்று கூறுகின்றார். அவர் அம்மன்னர் ஆயிரத்தெண்ணூற்றைம்பது ஆண்டுக் காலம் ஆட்சிபுரிந்தனர் என்றும் கூறுகின்றார். அம்மன்னருள் சிலருடைய பெயர்களே எஞ்சியுள்ள தமிழ் நூல்களால் உணரப்படுகின்றன. பாண்டியன் முடத்திருமாறன், மதிவாணன், பொற்கைப் பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, அறிவுடைநம்பி, பூதபாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்னும் மன்னர்களே கடைச்சங்க காலத்துப் பாண்டியர்களுள் குறிப்பிடத் தகுந்தவராவர்.

கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி, பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி, நல்வழுதி, கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், குறுவழுதி, வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, நம்பி நெடுஞ்செழியன் என்னும் பிற மன்னர்களின் பெயர்களும் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

## பொற்கைப் பாண்டியன்

பாண்டியர்களது பெருமையை மதுராபதி தெய்வம் கண்ணகிக்குக் கூறுகின்றது. இச்செய்தி சிலப்பதிகாரம்



'கட்டுரை காதையுள்' இடம் பெற்றுள்ளது. மதுராபதி தெய்வம் பொற்கைப் பாண்டியனது வரலாற்றையும் உணர்த்தியது. அவ்வரலாறு பின்வருமாறு:

"கீரந்தை என்னும் அந்தணன் தன் மனைவியைத் தனியே விட்டு வெளியூர் சென்றான்; அரசனுடைய செங்கோல் அவளுக்குத் துன்பம் வராது காக்கும் என்று கூறிப் பிரிந்து சென்றான். அது கேட்ட பாண்டியன் இரவு நேரங்களில் அம்மனையைக் காத்துவந்தான். ஒருநாள், மறையவன் வீடு திரும்பினான். கீரந்தையும் அவன் மனைவியும் இல்லத்திலிருந்தபோது, பாண்டிய மன்னன் ஐயம்கொண்டு கதவைப் புடைத்தான். மறையவன் தன் மனைவியை ஐயக்கண்கொண்டு நோக்கினான். அவள், "பாண்டியனது செங்கோல் எனக்குத் துன்பம் வராமல் காக்கும் என்றுசொல்லி முன் சென்றீரே. இன்று அச்செங்கோல் என்னைக் காவாதோ?" என்று உரைத்தாள். அரசன் கேட்டு வருந்தினான்; அரண்மனைக்கு விரைந்து சென்றான்; வாளால் தன் கையைக் குறைத்துக்கொண்டான்; பின்னர் பொன்னால் செய்யப்பட்ட பொய்க்கை வைத்துக்கொண்டு ஆட்சி புரிந்தான் அவனே **பொற்கைப் பாண்டியன்.**

"......................இதுவுங் கேட்டி:
உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்
அரைச வேலி யல்ல தியாவதும்
புரைதீர் வேலி இல்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
இன்றவ் வேலி காவா தோவெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று

வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடிப் பிறந்தோர்க்கு இழுக்க மின்மை''

(சிலப்பதிகாரம், காதை 23, வரி 41—53)

## அறிவுடை நம்பி

இவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; வறியவர்க்கு வரையாது வழங்கும் வள்ளல்; சிறந்த கவிஞன். பிசிராந்தையார் என்னும் பெரும்புலவர் இவன்மீது பொருண்மொழிக் காஞ்சிப் பாடலொன்று பாடியுள்ளார். இவன் கோப்பெருஞ் சோழன் காலத்தவன். இவன் பாடிய நான்கு பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. மக்களால் உண்டாகும் இன்பமானது, இம்மையில் நாம் பெறும் எல்லா இன்பங்களைவிடச் சிறந்ததென்றும், அத்தகை மக்கட் செல்வம் இல்லாதோர்க்கு இம்மைப் பயன் ஏதுமில்லை என்றும் கருத்தமைந்த இவனது புறநானூற்றுப் பாடல் சுவை பயப்பதாகும்.

## ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

இவன் சிறந்த வீரன்; தமிழறிஞன். இவன் செங்கோற் சிறப்பை மதுராபதி தெய்வம் கண்ணகிக்குக் கூறுவது அறியத்தகுவதாகும். இவன் வடநாட்டிலிருந்த ஆரிய மன்னர்களைப் போரிற் புறங்கண்டான்; புகழ் பெற்றான்.

## கல்வியின் சிறப்பு

கற்றுவல்ல சான்றோரிடத்து இவன் பெருமதிப்புடையவன். கல்வி யாவர்க்கும் உரிய பொதுச்சொத்து என்றும், அதனை எல்லோரும் பெற்று இன்புறுதல் வேண்டும் என்றும், கல்விகற்றுச் சிறந்தவனே சமுதாயத்துள் சிறந்தவனாகக் கருதப்படுவான் என்றும் இவன் கருதினான். அக்கருத்துக்களைத் துணையாகக் கொண்டு இவன் பாடியுள்ள பாடல் புறநானூற்றில் உள்ளது. அதன் பொருளை இங்குக் காண்க:



"நாட்டு மக்கள் கல்வியறிவு உடையவராய் இருத்தல் வேண்டும். கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கு உற்றவிடத்து உதவுதல் வேண்டும். தாராள மனப்பான்மையுடன் ஆசிரியருக்குப் பொருள் வழங்குதல் வேண்டும். மிகுதியாகப் பொருள் தந்த பின்பு ஆசிரியரை வழிபடுவதற்குத் தயங்குதல் கூடாது. கல்வி இல்லாதவன் எல்லோராலும் இழிந்தவனாகக் கருதப்படுவான். ஒரு குடியில் பிறந்த சகோதரர் பலருள் கற்றவன் இளையவனேயானாலும் அவனையே யாவரும் சிறப்பிப்பர். அரசன் கல்வியறிவுடையவனையே தனக்குரிய துணையாகக் கொள்வான். இழிந்த குலத்தில் பிறந்தவனாயினும் கல்வியறிவு உடையவனாயின் அவனே சிறந்தவனாகக் கொள்ளப்படுவான். மேல் நிலையில் பிறந்தவன் கல்லாதவனாயின் அவன் இழிந்த குலத்தில் பிறந்த கற்றவனைவிடத் தாழ்ந்தவனாகவே கருதப்படுவான்."

## கோவலன் கதை

புகாரில் செல்வக்குடியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்த கோவலனைக் கொல்வித்தவன் இம்மன்னனேயாவான். கோவலன் மாதவியிடம் உறவுகொண்டு பெரும்பொருளை இழந்தான். இழந்த பொருளை மீட்டுப் பெறுதல்வேண்டும் என்று எண்ணிக் கண்ணகியின் காற்சிலம்பை முதலாக வைத்து வாணிகம் செய்தல் வேண்டும் என்று துணிந்து மதுரைக்குச் சென்றான். வழியில் அவர்க்குக் கவுந்தியடிகள் என்னும் துறவியின் துணையும் கிடைத்தது. கவுந்தியடிகள் அவர்களை மதுரை ஆயர்பாடியிலிருந்த மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் ஒப்படைத்தார். கோவலன் அங்குக் கண்ணகியை இருக்குமாறு சொல்லிவிட்டுக்

காற்சிலம்புடன் அகநகர்க்குள் சென்றான். அவன் சென்ற வழியில் பொற்கொல்லன் ஒருவன் எதிர்ப்பட்டான்.

அப்பொற்கொல்லன் அரசாங்கப் பொற்கொல்லனாவான்; அரசியினுடைய சிலம்பொன்றைக் கவர்ந்தவன். அவனைப்பற்றி ஏதும் அறியாத கோவலன் தன் சிலம்பைக் காட்டி மதிப்பிடுமாறு வேண்டினான். சிலம்பைக் கண்ட பொற்கொல்லன் அரசனிடமிருந்து தான் தப்பித்துக் கொள்ள அதுவே ஏற்ற சமயம் என்றெண்ணி அரசனிடம் காட்டி வருவதாகச் சொல்லி அரண்மனை சென்றான்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் அவன் மனைவி கோப்பெருந்தேவியும் அரண்மனையில் நடைபெற்ற நடன நிகழ்ச்சியைக் கண்டுகொண்டிருந்தனர். அரசன் நடனமகளிர்பால் மிகுந்த ஈடுபாடு கொள்வது கண்ட அரசி, ஊடல்கொண்டு தன் அந்தப்புரம் சென்றாள். அரசியின் சினம் தவிர்க்கவேண்டும் என்று எண்ணி அந்தப்புரம் நோக்கி அரசன் விரைந்தான்.

அந்த வேளையில் பொற்கொல்லன் அரசனை அண்மிச் சிலம்பைத் திருடிய கள்வன் கையகப்பட்டான் என்று கூறினான். அரசன் அவன் கூறியதுபற்றிச் சிறிதும் ஆராயாமல், அரசியின் சிலம்பு அவனிடம் இருக்குமானால் அவனைக் **கொன்று** சிலம்பு கொணருக என்று தன் ஏவலர்க்கு ஆணையிட்டான்.

**"......................சிலம்பு**
**கன்றிய கள்வன் கைய தாகில்**
**கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு"**

கோவலன் கொல்லப்பட்டான். கண்ணகி, ஆராயாமல் தன் கணவனைக் கொல்வித்த மன்னனைக் கண்டு முறையிட்டாள்; கோவலன் கோப்பெருந்தேவியின் சிலம்பைக்



கவர்ந்தவன் அல்லன் என்பதை மெய்ப்பித்தாள். அவ்வளவில் அரசன் வருந்தினான்; நெஞ்சம் நடுக்குற்று,

**"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்!**
**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**
**என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்"**

என்று கூறி, அரசு கட்டிலிலிருந்து வீழ்ந்திறந்தான்.

## குடிமக்கள் போற்றும் கொற்றவன்

அறியாமல் செய்த ஒரு குற்றத்துக்காகத் தன்னுடைய உயிரையே இழந்த மன்னனுடைய சிறப்பை என்னென்பது! இவன் ஆட்சியில் குடிமக்கள் மகிழ்ச்சியாயிருந்தனர். மதுராபதி தெய்வம், நெடுஞ்செழியன் நல்லவன் என்றும், அவன் நாட்டில் மறைகளின் ஓசைதான் கேட்கும் என்றும் மணிகளின் ஓசை கேட்காது என்றும் கூறி, நாட்டின் நிலையைப் புலப்படுத்தியது. அவன் குடிமக்கள் பழிதூற்றாத செங்கோலினனாய் விளங்கினான் என்றும், கோவலன் கொலை ஊழ்வினையால் நடைபெற்றது என்றும் அத்தெய்வம் கூறியது.

## சேரன் கூற்று

நெடுஞ்செழியனுக்கு நேர்ந்த தீவினைகளைச் சேரன் செங்குட்டுவன் கேள்வியுற்றான். அவன் தன் அருகிலிருந்த சாத்தனாரை நோக்கி, "பாண்டியன் செங்கோல் தவறிய செய்தி எம்போன்ற மன்னவர்க்கெல்லாம் தெரியும் முன்பே அவன் உயிர் துறந்தமை, தீவினையால் வளைக்கப்பட்ட கோலைச் செங்கோலாக்கியது," என்று இரங்கிக் கூறினான்.

## தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

இவன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்னும் பாண்டியனது புதல்வன் என்று அறிஞர் கூறுவர். சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் சிறிது காலமே அரசுபுரிந்தான். ஆதலின் இவன் இளமையிலேயே அரசுப் பொறுப்பு ஏற்க நேர்ந்தது. இவன் ஆட்சி ஏற்றமையைக் கேள்வியுற்ற சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை ஆகிய இருவரும் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் மதுரையை முற்றுகையிட்டார்கள்.

தன்னை இளையவன் என்று கூறி இகழ்ந்து இருபெரு மன்னரும் வேளிர் ஐவரும் பொரத் துணிந்தமையை அறிந்த நெடுஞ்செழியன் பின்வருமாறு வஞ்சினம் கூறினான்:

"போர்க்களத்தில் என்னை எதிர்ப்போரை வென்று முரசத்தோடு அவரைக் கைக்கொள்ளவில்லையானால், குடிமக்கள் என்னைக் கொடுங்கோலன் என்று பழி தூற்றட்டும். மாங்குடி மருதனார் போன்ற புலவர் பெருமக்கள் எனது நாட்டைப் பாடாது போகட்டும். என்னால் காக்கப்படும் சுற்றத்தார் துயரம் மிக இரப்பவர்க்குக் கொடாத வறுமையை யான் அடைவேனாக."

இவன் தலையாலங்கானம் என்னும் இடம்வரைத் துரத்திச்சென்று எதிர்த்தோரைப் புறமுதுகிடச் செய்தான்; இத்துடன் நில்லாமல் இருபெரு மன்னரை அவரவர்க்குரிய உறையூர், வஞ்சிவரைத் துரத்திச் சென்று கொன்றான்; மிழலைக்கூற்றம், முத்தூர்க்கூற்றம் என்னும் இரண்டு பகுதிகளையும் கைப்பற்றித் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான்.



இவன் போர் செய்யும்போது மிகவும் இளையனாயிருந்தான் என்பது இடைக்குன்றூர் கிழார் என்னும் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

"கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேட்பி னொண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கவவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
அழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே"

—(புறநானூறு, செ. 77)

## மதுரைக் காஞ்சியில் நெடுஞ்செழியன்

நெடுஞ்செழியன் போர் விருப்புடையவனாக இருந்தான்; அத்துறையிலேயே தன்னுடைய வாழ்நாட்களைக் கழித்துவந்தான். அதனால் அவனுடைய அவைக்களப் புலவரான மாங்குடி மருதனார் அவன் அறநெறியைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமென எண்ணினார்.

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தாழ் அருவிப் பொருவிற் பொருந"

என்னும் மதுரைக் காஞ்சியடிகள், சோமசுந்தரக் கடவுளின் வழியில் தோன்றியவன் நெடுஞ்செழியன் என்பதைத் தெளிவுறுத்துகின்றது.

"இந்நிலவுலகம் கடலை எல்லையாகக் கொண்டது; மலைவளம் மிக்கது. இந்நிலவுலகில் பாண்டிய நாடு ஒன்று. பாண்டிய நாட்டில் நெடுஞ்செழியனாகிய நீ ஆட்சி நடத்துகின்றாய். உன்னுடைய ஆட்சி நேர்மையானதாக இருப்பதால் ஞாயிறும் திங்களும் களங்கமின்றி விளங்குகின்றன. மக்கள் பசியும் பிணியும் இல்லாமல் வாழ்கின்றனர். அகத்தியற்குப் பின்னால் நீயே சான்றோனாக இருக்கும் சிறப்புடையவன்.

"உன் முன்னோர் சிறந்த போர்வீரர். அவருள் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் ஒருவன். அவன் சினம் மிக்க களிறுகளையும், அச்சமற்ற குதிரைகளையும், காற்றைப் போற் பறக்கும் தேர்களையும், ஆண்மை மிக்க வீரர்களையும் உடையவன். அவன் சேர, சோழ பாண்டியரையும் குறுநில மன்னரையும் வென்றான். அவனைப்போல நீ விளங்குகின்றாய். அது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது. அணுகுதற்கரிய அரண்களையெல்லாம் கடந்து சென்று பகைவர் நாட்டைக் கவரும் ஆற்றல் மிக்கவனாய் நீ விளங்குகிறாய்.

"மலைநாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் குட்ட நாட்டுக் கடற்கரை மணற்குன்றுகளை உடையது. அங்குப் பரதவ மகளிர் குரவை ஆடுவர். அந்நாட்டினர் இசைப் புலவர்களை நன்கு ஆதரிப்பார்கள்; இசைப்புலவர்களுக்குக் கன்றுடன் பிடிகளையும் கொம்புள்ள களிறுகளையும் கொடுப்பார். நீ அந்தக் குட்ட நாட்டை வென்ற பெருமையுடையவனாக உள்ளாய்.

"முதுவெள்ளிலை என்பது செல்வச் செழிப்புடைய ஊராகும். அவ்வூர் குறுநில மன்னனொருவனுக்கு உரியது. அதுபோன்ற வளமுடைய நாடுகளை ஆளும் குறு



நில மன்னர் ஐவரும் சேர, சோழரும் நீ எளியன் என்று தவறாகக் கருதிப் போர்க்கெழுந்தனர். அவர்களின் செயலறிந்த நீ கூற்றுவனாய்; அவ்வெழுவரையும் துரத்திச் சென்று தலையாலங்கானம் என்னுமிடத்தில் முறியடித்து அழியாப் புகழ்பெற்றாய்.

"முருகக் கடவுள்போல் புறங்கொடுத்தார் மேற் செல்லாத படையொடு நீ விளங்குகின்றாய். நின்னுடைய நண்பர்களுக்கு நீ எப்போதும் நன்மையே செய்வாய். போருக்கென நீ எழும்பொழுது நின்னுடைய படையின் ஆரவாரம் விண்ணில் ஒலித்தது. பரிகள் வேகமாகச் சென்றமையால் தூசி மேலெழுந்தது; சங்கும் கொம்பும் இரைச்சலிட்டன. நின்னுடைய வீரர்கள் பகைவர்மீது அம்புமாரி பெய்தனர்; காவற்காட்டிற்குத் தீயிட்டனர்; கோட்டை மதில்களை அழித்தனர்; 'நாடு' என்னும் பெயர் 'காடு' என்று ஆகுமளவில் செய்தனர். நாடு காடாயினமையால் மகளிர் துணங்கைக் கூத்தினை மறந்தனர்; பேய்மகளிர் அம்பலங்களில் குடிகொண்டனர்; ஒவ்வொரு வாயிலிலும் மனத்துயர் மிக்க மகளிர் நின்று கண்ணீர் விட்டனர். செங்கழுநீர் மலர் வளரப்பெற்ற பொய்கைகளில் யானை மறையத்தக்க உயரமுடைய வாட்கோரையும் சண்பகக் கோரையும் வளர்ந்தன. எருதுகள் உழுது பண்படுத்திய வயல்களில் பன்றிகள் ஓடி விளையாடின.

"பாழடைந்த பகைவர் நாடுகளை சீர்செய்ய நீ அங்குத் தங்குவாய். நீ பிறருக்குக் கொடுத்தலையே விரும்புவாய். அதனால் வரும் புகழைப் பெறவே நீ விரும்புவாய். மக்கள் தொழும் பிறை நாள்தோறும் வளர்வதுபோல உன் எதிர்கால மரபினரது வெற்றியும் வழிவழிச் சிறக்கட்டும். உன்னுடைய பகைவர் ஆக்கம் தேய்பிறை போலக் குறைவதாகுக."

இதுகாறும் பாண்டியனது படைச்சிறப்பையும் போர் ஆற்றலையும் கூறிய புலவர் மன்னவனை நோக்கிப் பின்வருமாறு வாழ்த்துகிறார்:

"புகழ் படைத்து மறைந்த மன்னர் பலர். அவர்கள் விறலியர் அணியுமாறு அணிகளையும், நல் உணவையும் அளித்தனர்; வைகறையில் வந்து பாடும் சூதர்க்கு தேரையும், குதிரையையும் அளித்தனர். நீயும் அவர்களைப்போலச் சிறந்துள்ளாய். ஆயின் இவ்வாழ்வில் பெரிதாய் உள்ள பொருள் ஒன்று உண்டு. அதனை இறையன்பு மிக்க பெரியோர் சொல்லக் கேட்பாயாக. ஐம்பொறி இன்பத்தைப் பெரிதெனக் கருதாமல், இறை வழிபாட்டில் நினைவைச் செலுத்திப் பேரின்ப வாழ்வைப் பெறுவாயாக. உலகப் பற்று உன்னைவிட்டு அகலட்டும்."

## நெடுநல்வாடையில் நெடுஞ்செழியன்

இவனை நக்கீரனார் பாடிய பாட்டு **நெடுநல்வாடை** என்பதாகும். இது பத்துப்பாட்டுள் ஒன்றாகும். இப்பாடல் நூற்றெண்பத்தெட்டு வரிகளை உடையது. பகைவர்களை வெல்லும் பொருட்டுச் சென்ற பாண்டியனைப் பிரிந்து வருந்தும் அவன் மனைவி கோப்பெருந்தேவிக்கு, 'அவன் விரைவில் வருவானாக' என்று கொற்றவையை வேண்டி ஒருத்தி கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு வாடைக் காலத்தின் ஒரு பொழுதும் ஒரு யுகம்போலத் தோன்றி நெடிதாகிய வாடையாய்-மன்னனது வெற்றிக்கு நல்லதாகிய வாடையாயினமையால் இப்பாடல் நெடுநல்வாடை எனப் பெயர்பெற்றது. இப்பாடலில் குளிர்கால நிலைமையும், தலைவியின் பிரிவாற்றாத நிலைமையும் அரசனது பாசறையும் சிறப்புறக் கூறப்பட்டுள்ளன.

## அரண்மனைச் சிறப்பு

நெடுநல்வாடை பாண்டியனது அரண்மனைச் சிறப்பினைப் பின்வருமாறு கூறுகின்றது:

"பாண்டியனுக்கு அரண்மனை கட்ட முடிவு செய்யப்பட்டது. அம்முடிவு செயல்பட நல்ல நேரம் குறிக்கப்



பட்டது. அந்த நல்ல வேளையில் சிற்பநூலோர் நூலைப் பிடித்துத் திசைகளை அறிந்து அவற்றுக்குரிய தெய்வங்களை வழிபட்டனர்; மன்னவர்க்கு வேண்டும் மனைகளையும் மண்டபங்களையும் வாயில்களையும் அமைத்தனர். மதிலின் வாயில்கள் இரும்பினால் ஆனவை. நிலையைத் தாங்கும் சுவரின் நடுப்பகுதியில் இலக்குமியும் செங்கழுநீர் மலர்களும் சுதைகொண்டு செய்யப்பட்டன. வாயில் அகலமும் உயரமும் உடையது. அதனுள் யானைப்படை செல்ல முடியும்.

"நிலாமுற்றத்தில் மழைநீர் விழ அமைக்கப்பட்டுள்ள குழை, மீனின் அங்காந்த வாயைப்போலத் தோற்றமளிக்கின்றது. அதிலிருந்து விழும்நீர் அருவிபோல ஒலி செய்கின்றது. அந்தப்புரத்துத் தூண்கள் கருமையாகவும் பளபளப்பாகவும் உள்ளன. சுவர்கள் பல வேலைப்பாடுகளைக் கொண்டவை. அவற்றின்மீது செஞ்சாந்தால் மலர்க்கொடிகள் ஓவியங்களாக அமைக்கப்பட்டுள்ளன. தகளிகளில் திரிகள் எரிகின்றன. அரசியின் அந்தப்புரத்தில் உள்ள விளக்குகளில் நெய் குறையுமாயின் பணிமகளிர் யவனர் செய்த பாவை விளக்குகளில் நெய்யூற்றி ஏற்றுவர். அங்கு மன்னனைத் தவிர வேறு எவரும் செல்லுதல் கூடாது.

"அரசி துயிலும் கட்டில் அவள் பள்ளியறையில் உள்ளது. அக்கட்டில் வட்ட வடிவமானது; போர்க்களத்தில் இறந்த-நாற்பதாண்டுகள் வாழ்ந்த களிற்றின் தானாக விழுந்த தந்தத்தைக் கொண்டு செய்யப்பட்டது; மூட்டுவாய் தெரியாமல் சிறப்புற அமைக்கப்பட்டது; நுண்ணிய உளிகொண்டு இடையிடையே இலைகள் செதுக்கப்பெற்றன; விலங்குகளுடன் வேட்டையாடும் வடிவமாகச் செய்யப்பட்ட மெல்லிய தகடுகள் அடிக்கப்பட்டது. முத்துமாலைகள் கட்டிலைச் சூழ்ந்து கட்டப்பட்டிருந்தன. நடுவில் உள்ள இடம் புலி நிற நாடாவால் பின்னப்பட்டுள்ளது. அன்னத்தின் தூவி கட்டிலின்மிது பரப்பப்பட்டுள்ளது. அதன்மேல் வெண்மைத் துகில் விரிக்கப்பட்டுள்ளது.

அத்துகிலின் மேல் செங்கழுநீர் முதலிய இதழ்கள் பரப்பப் பட்டுள்ளன."

## முல்லைப்பாட்டில் நெடுஞ்செழியன்

**முல்லைப்பாட்டும்** பத்துப் பாட்டுள் ஒன்றாகும். தலைவனைப் பிரிந்த தலைவி அவன் வரும்வரை ஆற்றியிருந்து இல்வாழ்க்கை நடத்துவது முல்லை எனப்படும். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போருக்குச் சென்ற பிறகு அவன் மனைவி இருந்த நிலையைக் கூறுவதால் இது முல்லைப்பாட்டு எனப்பட்டது. இப்பாடல் நூற்று மூன்று அடிகளைக் கொண்டது. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் **நப்பூதனார்** இதனைப் பாடியுள்ளார். இப்பாட்டில் வயது முதிர்ந்த பெண்டிர் சகுனம் பார்க்கும் பழக்கம், பாசறையின் அமைப்பு, கார்காலத்துக் காட்சிகள் முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன. முல்லைப்பாட்டில் நெடுஞ்செழியன் எவ்வாறு பேசப்பட்டுள்ளான் என்பதைக் காண்போம்:

"பலவிதச் சிறப்புக்களுடன் அமைக்கப்பட்ட பாசறையின் நடுநாயகமாக அரசன் கோயில் அமைக்கப்பட்டது. அதன் வாயிலில் யவனர் புலியைச் சங்கிலியிற் கட்டி வைத்திருக்கும் காட்சியை ஓவியமாக எழுதுகின்றனர்.

"பாண்டியன் தனக்கென அமைக்கப்பட்ட தனியிடத்தில் உள்ள படுக்கையில் ஒரு கையை வைத்தும் மற்றொரு கையை முடியுடன் சேர்த்தியும் இருக்கிறான்; முதல் நாட் போரில் ஏற்பட்ட இழப்புக்களை எண்ணுகிறான்; இறந்த வீரர்களையும் கரிகளையும் பரிகளையும் எண்ணிக் கலக்கம் கொள்கிறான்; தளர்ச்சியுற்ற படைகளைக்கொண்டு அடுத்த நாட் போரில் வெல்லுவது எவ்வாறு என்று எண்ணத் தொடங்குகிறான். அப்போது நாழிகைக் கணக்கர், அரசனை வணங்கி நாழிகை இத்துணை என்று கூறினர். அவ்வளவில் வெள்ளாடையை உடுத்த அழகுமிக்க மகளிர் விளக்கேற்றினர்.



"பாசறையில் நான்கு தெருக்கள் கூடும் ஒவ்வொரு சந்திப்பிலும் ஒரு யானை காவலாக நிறுத்தப்பட்டுள்ளது. அது கரும்பையும் அதிமதுரத் தழையையும் உண்ணாமல் அவற்றால் தனது நெற்றியைத் துடைக்கின்றது; அவற்றைத் துதிக்கையில் ஏந்தித் துதிக்கையைக் கொம்பின் மீது வைத்த வண்ணம் நிற்கின்றது. யானைப்பாகன் பரிக்கோலால் கவளத்தை உண்ணும்படி குத்துகின்றான். இடையில் வாள் அணிந்த மகளிர் விளக்குகளை ஏற்றுகின்றனர்; விளக்குகள் அவியும்பொழுது பந்தத்தைக்கொண்டு ஏற்றுகின்றனர்.

"சட்டையும் தலைப்பாகையும் அணிந்த மெய்காப்பாளர் அரசனது இருப்பிடத்தைச் சுற்றி வருகின்றனர். சட்டையிட்ட ஊமர் அரசன் பள்ளியறையைக் காவல் செய்கின்றனர். அரசன் மறுநாள் போர்பற்றிக் கவலையோடு எண்ணுகின்றான்.

"இரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. நெடுஞ்செழியன் போர்க்கோலம் கொண்டான். போர் நடைபெறுகிறது. பாண்டியனும் போரில் பங்கு கொண்டான். போர் கடுமையாக நடைபெறுகிறது. இறுதியில் பாண்டியன் வெற்றிபெறுகிறான். அதனால் அவன் மகிழ்கிறான்; தன் கோப்பெருந்தேவியை எண்ணுகிறான்; படைகளுடன் ஊர் திரும்புகிறான்."

## பெண்பாற் புலவர்

ஒல்லையூர் தந்த பூதபாண்டியன் என்பவன் புலமை வாய்ந்த மன்னவன். அவன் பாடிய பாடல்கள் புறநானூற்றிலும் அகநானூற்றிலும் உள்ளன. "ஒல்லையூர் தந்த" என்னும் அடைமொழி அவனது வீரத்தை விளக்கவல்லதாகும்.

**பெருங்கோப்பெண்டு** என்பவள் பூதபாண்டியனின் மனைவி. பூதபாண்டியன் இறந்துவிட்டான். அரசியும்

V211



N58:1

இறக்கத் துணிந்தாள். அரசனை இழந்த நிலையில் வருந்திய மக்கள் அரசியையும் இழக்க விரும்பவில்லை. எனவே, அவர்கள் அவள் தன் கணவனுடன் ஈமத்தீயிற் பாய்ந்து இறக்க கருதியதைத் தடுத்தனர். மதுரைப் பேராலவாயார் முதலிய புலவர்கள் அரசியை மக்கள் நலன் பொருட்டு வாழுமாறு வேண்டினர். ஆனால் பெருங்கோப்பெண்டு உயிர்வாழ விரும்பவில்லை. தன்னைத் தீப்புகலாகாது என்று கூறித் தடுக்கும் சான்றோரை நோக்கிப் பின்வருமாறு கூறலானாள்:

"கற்றறிந்த பெருமக்களே, 'நீ நின் தலைவனோடு இறந்துபோ' என்று கூறாமல் அவ்வாறு செய்யாதே என்று கூறி என் விருப்பத்தைத் தடை செய்யும் கற்றறிந்த பெருமக்களே, கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிருள் ஒருத்தியாக இருக்க யான் விரும்பவில்லை. பிணப்படுக்கை உங்களுக்கு அரியதாகட்டும். எனது கொழுநன் இறந்துபட்ட பின்பு மலர்ந்த தாமரையுடைய பெரிய பொய்கையும் தீயும் எனக்கு ஒரு தன்மையனவேயாகும்," என்று கூறித் தீப்பாய்ந்தாள்.

பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

TAMIL NAD ARCHIVES
No.
108745